இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 9 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 01 – வெள்ளிக்கிழமை 18 ஆகஸ்ட் 2023 – சென்னை 20 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 9 : Thiruvalluvar Year - 2054 - Aavani 01- Friday 18 August 2023 - Chennai 20+12 Pages ₹ 5.00



இராமநாதபுரத்தில் நடைபெற்ற தென் மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் (பி.எல்.ஏ.2) பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் கழக செயல்வீரர்கள் திரண்ட காட்சி!

## தேர்தல் பொறுப்பாளர்கள் என்ற கம்பீரத்தோடு கடமையாற்றுவீர்!

# வெற்றி ஒன்றே உங்கள் இலக்காக அமையட்டும்!

### இராமநாதபுரத்தில் நடைபெற்ற தென் மண்டல வாக்குச் சாவடி முகவர் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**இராமநாதபுரம், ஆக. 18 - இராமநாதபுரத்தில் நடைபெற்ற தென் மண்டல பி.எல்.ஏ. 2 வாக்குச் சாவடி முகவர் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது "தேர்தல் பொறுப்பாளர்கள் என்ற கம்பீரத்தோடு கடமையாற்றுங்கள், வெற்றி ஒன்றே உங்கள் இலக்காக அமையட்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.**

இராமநாதபுரத்தில் நேற்று நடைபெற்ற தென் மண்டல BLA 2 வாக்குச் சாவடி முகவர் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் கலந்துகொண்டு, கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:


"பகையெனில் கூற்றம் வரினும் தொலையான்" என்ற கலித்தொகைக்கு இலக்கணமாக, வீரம் மிகுந்த இந்த ராமநாதபுரம் மண்ணில் கழக தீரர்களான நாம் கூடியிருக்கிறோம்.

சேது மன்னர்கள் தமிழ் வளர்ச்சிக்கும் இறையியல் வளர்ச்சிக்கும் ஆற்றிய தொண்டு காலத்தால் அழிக்க முடியாதது; மறக்க முடியாதது. இந்த மண்ணைக் காக்கும் பெரும் போரில் பன்னிரண்டே வயதான இராமநாதபுரம் சேதுபதி மன்னர் ஈடுபட்டார். தன்னாட்சி பெற்ற நாடாக இருந்த இந்த சேதுச்சீமையின் உரிமையைப் பறித்தவர்களையும், தன்னைத் திருச்சி சிறையில் அடைத்தவர்களையும் பழி வாங்க சேது மன்னர் திட்டமிட்டார். சிறையில் இருந்தபடியே மக்களை எழுச்சி பெற வைத்தார். மன்னரின் கட்டளையை மனதில் வைத்து, ஒரு பெரும் போரையே மக்கள் நடத்தினார்கள். ஒரு நாள் இரு நாள் அல்ல, 42 நாட்கள் விடாமல் அந்தப் பெரும் போரைச் செய்தார்கள்.

**சேதுச் சீமைக்கு ஏராளமான நன்மைகளை செய்தது கழக அரசு!**

திருச்சியில் இருந்தால் அவரை ஒவ்வொருவராக வந்து பார்ப்பார்கள் என்பதால், சென்னையில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு இழுத்துச் சென்று தனிமைச் சிறையில் அடைத்தது பிரிட்டிஷ் அரசு. பதினான்கு வருடம் தனிமைச் சிறையில் இருந்து சிறையிலேயே மரணம் அடைந்தார் அவர். எந்தக் குற்றச்சாட்டும் இல்லாமல் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்துக் கொல்லப்பட்டார் சேது மன்னர். இத்தகைய சேதுபதி மன்னரைப் பெருமைப்படுத்தும் வகையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்துக்கு 'சேதுபதி நகர்' என்று பெயர் சூட்டியவர்தான் நம் நெஞ்சில் வாழும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்! அப்படிப்பட்ட இந்த சேதுச்சீமைக்கு, ஏராளமான நன்மைகளைச் செய்த ஆட்சி, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி!

இங்கு எல்லோரும் குறிப்பிட்டார்களே, ஒரு காலத்தில் 'தண்ணி இல்லாத காடு' என்று சொல்லப்பட்ட இந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கு, இந்த அடியேன் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதுதான், காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வந்தோம். வேளாண் வளர்ச்சிக்காக பார்த்திபனூரில் மதகு அணை கட்டினோம். முன்னாள் அமைச்சர் சுப.தங்கவேலன் கோரிக்கையை அடுத்து 500 கிலோ மீட்டர் கிராம சாலையை நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தி தேசிய நெடுஞ்சாலையோடு இணைக்கும் வகையில் மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்தினோம்.



- தேவிபட்டினம் அண்ணா அரசு பொறியியல் கல்லூரி!
- ஆரம்ப சுகாதார நிலையங்கள்!
- அரசு மருத்துவமனை!
- சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த மாவட்டத்தில் 5 ஆயிரம் சுனாமி மறுவாழ்வு குடியிருப்புகள்!
- உயர்மட்டப் பாலங்கள்!
- பாலைவனப் பூங்கா – என்று, நம்முடைய அரசு செய்த பல திட்டங்களால்தான் பின்தங்கிய மாவட்டம், இன்றைக்கு முன்னுக்கு வந்திருக்கிறது.

18 ஆண்டுகள் ஓடாமல் இருந்த இராமநாதபுரம் இராமநாதசுவாமி திருக்கோயில் தங்கத் தேரை ஓடவைத்தது நம்முடைய ஆட்சிதான்.

**தேர்தல் களத்தில் சரியான முடிவுகளை கிடைக்கச் செய்வீர்!**

தென் பாண்டி மண்டலத்தில் வாக்குச் சாவடி முகவர்கள் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று சொன்னவுடனே இராமநாதபுரத்தில் நடத்தலாம் என்று எல்லோரும் ஒருமனதாக

## அவதூறுகளையும் பொய்ச் செய்திகளையும் பரப்பும் சிறு நரிக் கூட்டம்!

முடிவெடுத்தோம். அது சரியான முடிவுதான் என்று இங்கு கூடியிருக்கும் நீங்கள் நிரூபிக்கிறீர்கள். இது போலவே தேர்தல் களத்திலும் சரியான முடிவுகள் கிடைக்கச் செய்வீர்கள் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

இந்த நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடும் உணர்ச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கும் கழகத் துணைப் பொதுச்செயலாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களைப் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

இளைஞர் அணிக்கு நான் பொறுப்பேற்று, தமிழ்நாடு முழுவதும் சுற்றிக் கழகக் கொடியேற்றிக் கொண்டு இருந்த காலத்தில் திண்டுக்கல் மாவட்டம் அய்யலூரில் கொடியேற்றிப் பேசினேன். அப்போதுதான் நம்முடைய ஐ.பி அவர்களை நான் பார்த்தேன். பெரிய மீசை பெரிய கிருதா என்று கட்டிளம் காளையாக வலம் வந்தார். இப்போது மீசை, கிருதாவோடு தாடியும் சேர்ந்துவிட்டது. வெள்ளி போன்ற தாடி, தலை நரைத்தாலும் கழகப் பணிக்கு நரையில்லை, தளர்வில்லை என்று பணியாற்றி வருகிறார் நம்முடைய ஐ.பி. அவர்கள்.

**கழக வளர்ச்சிக்கு உழைப்பை வழங்கியவர்களுக்கு வாழ்த்து!**

அவருக்குத் தோளோடு தோள் நின்ற துணை நின்ற பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் நம்முடைய அன்பிற்கினிய ராஜ கண்ணப்பன் அவர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றி!

இவர்கள் இரண்டு பேரும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் போட்டி போட்டுக்கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்தை வளர்த்து வருகிறார்கள். இன்றைக்கு எவ்வளவு பெரிய எழுச்சியை இந்த கூட்டம் ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன் நான். தலைவர் கலைஞர் சொன்னதுபோல், கழகத்தின் வளர்ச்சிக்கான உழைப்பை வழங்கி வருகிற உங்கள் இருவரையும் – இந்த மாவட்டக் கழக நிர்வாகிகளையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

நம்மையெல்லாம் 'உடன்பிறப்பே' என்று அழைத்து ஒரு குடும்பம் ஆக்கிய தலைவர் கலைஞரின் கனவுகளை நிறைவேற்று வதற்காக நாம் கூடியிருக்கிறோம். தமிழ்நாட்டைத் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆள வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் கனவு கண்டார். அந்தக் கனவை நிறைவேற்றிவிட்டோம்! தமிழ்நாட்டைத் திராவிட முன்னேற்றக் கழகம்தான் நிரந்தரமாக ஆள வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் கனவு கண்டார். அந்தக் கனவையும் நிச்சயம் நிறைவேற்றியே காட்டுவோம்.

திராவிட இயக்கத்தின் கொள்கைகள் இந்தியா முழுமைக்கும் பரவ வேண்டும், நம்முடைய சீர்திருத்த சட்டங்கள் இந்தியாவின் சட்டங்களாக மாற வேண்டும் என்று தலைவர் கலைஞர் நினைத்தார். அந்தக் கனவையும் நிறைவேற்றிக் காட்டுகிற காலம் நெருங்கிக்கொண்டு இருக்கிறது. அதற்கான மாநாடுதான் இது! அதற்கான தளபதிகள்தான் நீங்கள்!

**தமிழகம் முழுவதும் 68,036 பேர் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள்!**

கடந்த 22.03.2023 அன்று என்னுடைய தலைமையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடந்தது. அப்போது இரண்டு முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றினோம். தலைவர் கலைஞரின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என்பது முதல் தீர்மானம். தமிழ்நாடு முழுவதும் முழுமையாக பூத் கமிட்டி அமைக்கப்பட வேண்டும் என்பது இரண்டாவது தீர்மானம். உறுப்பினர்களை சேர்க்கிற பணி வெற்றிகரமாக முடிந்தது.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும், வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரத்து 36 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 2 கோடித் தொண்டர்கள் கொண்ட நம்முடைய கழகத்தில் நீங்கள் 68 ஆயிரத்தில் ஒருவர்! வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பட்டியல் தலைமைக் கழகத்தால் முழுமையாக சரி பார்க்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கான பயிற்சியை உடனே தொடங்க வேண்டும் என்று முடிவெடுத்தோம்.

டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான ஒருநாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம், கடந்த ஜூலை 26 அன்று தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் நடந்தது. கழகத்தின் முதன்மைச் செயலாளர் நேரு அவர்களின் முயற்சியால் வழக்கம் போல் பிரம்மாண்டமாக நடந்தது.

**வாக்குச்சாவடி பொறுப்பாளர்களை அழைத்து வந்தவர்களுக்கு நன்றி!**

அடுத்ததாக மிகப் பிரமாண்டமாக இப்போது தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர் கூட்டம் இராமநாதபுரத்தில் நடக்கிறது. 19 மாவட்டக் கழகங்களைச் சேர்ந்த வாக்குச்சாவடி பொறுப்பாளர்களான 16 ஆயிரத்து 978 பேர் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களை அழைத்து வந்திருக்கிற மாவட்டக் கழகச் செயலாளர்களான,

* கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள்,
* தங்கம் தென்னரசு அவர்கள்,
* சக்கரபாணி அவர்கள்,
* பெரிய கருப்பன் அவர்கள்,
* மூர்த்தி அவர்கள்,
* கீதாஜீவன் அவர்கள்,
* அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள்,
* மனோ தங்கராஜ் அவர்கள்,
* ஆவுடையப்பன் அவர்கள்,
* மைதீன்கான் அவர்கள்,
* கம்பம் ராமகிருஷ்ணன் அவர்கள்,
* தங்க தமிழ்ச்செல்வன் அவர்கள்,
* கோ.தளபதி அவர்கள்,
* ஐ.பி.செந்தில்குமார் அவர்கள்,

**இளைஞர் அணிக்கு நான் பொறுப்பேற்று, தமிழ்நாடு முழுவதும் சுற்றிக் கழகக் கொடியேற்றிக் கொண்டு இருந்த காலத்தில் திண்டுக்கல் மாவட்டம் அய்யலூரில் கொடியேற்றிப் பேசினேன். அப்போதுதான் நம்முடைய ஐ.பி அவர்களை நான் பார்த்தேன். பெரிய மீசை பெரிய கிருதா என்று கட்டிளம் காளையாக வலம் வந்தார். இப்போது மீசை, கிருதாவோடு தாடியும் சேர்ந்துவிட்டது. வெள்ளி போன்ற தாடி, தலை நரைத்தாலும் கழகப் பணிக்கு நரையில்லை, தளர்வில்லை என்று பணியாற்றி வருகிறார் நம்முடைய ஐ.பி. அவர்கள்.**

* மணிமாறன் அவர்கள்,
* மகேஷ் அவர்கள்,
* காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்,
* ராஜா அவர்கள்,
* ஜெயபாலன் அவர்கள் ஆகிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி! பாராட்டுகள்!

**பல கட்ட ஆய்வுக்குப் பின்னரே பொறுப்பாளர்கள் நியமனம்!**

கடந்த சில மாதங்களாகத் தலைமைக் கழகத்தில் இருந்து உங்களையெல்லாம் அழைத்துப் பேசி உங்களைப் பற்றிய முழுமையான விவரங்களை வாங்கச் சொல்லியிருந்தேன். அப்படி பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பலரை மாற்றவும் சொல்லியிருந்தேன். மாற்றப்பட்டவர்களுக்குப் பதிலாகப் புதியவர்கள் சேர்க்கப்பட்டு அவர்களைப் பற்றியும் விவரங்கள் சேகரிக்கப்பட்டது. இவ்வாறு பலகட்ட ஆய்வுகளுக்குப் பின்புதான் 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்' என்ற அடையாள அட்டை உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அட்டையை பெற்ற தென் மாவட்டங்களின் பொறுப்பாளர்கள் மட்டும் இங்கு முதல் கட்டமாக அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கான வகுப்புகள் காலை முதலே நடந்து வருகிறது.

* வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களின் கடமைகளும் பணிகளும் என்ற தலைப்பில் தலைசிறந்த வழக்கறிஞரும் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான என்.ஆர். இளங்கோ அவர்களும்,

* வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து செயல் வீரர் தம்பி ஐ.பி. செந்தில்குமார் அவர்களும்,

* சமூக வலைத்தளங்களின் பயன்பாடும்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## மீனவர்களுக்கான சபதத்தை மோடி நிறைவேற்றினாரா?

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 18-08-2023

# ஜெயலலிதாவின் நாடகங்கள் 1

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு திடீரென்று ஜெயலலிதாமீது பாசம் வந்துள்ளது. எம்.ஜி.ஆர். பெயரை, பிரதமர் மோடி பயன்படுத்துவதும், ஜெயலலிதா பெயரை நிர்மலா சீதாராமன் உச்சரிப்பதும் அரசியல் என்பதை அனைவரும் அறிவார்கள். சட்டமன்றத்தில் ஜெயலலிதாவுக்கு நடந்ததாகச் சொல்லப்படுவது, ஜெயலலிதா திட்டமிட்டு உருவாக்கிய நாடகம் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள். இதுபோன்ற பல்வேறு நாடகங்களை ஜெயலலிதா நடத்தி இருக்கிறார்.

* "எம்.ஜி.ஆர். என்னைப் பார்த்து பொறாமைப்படுகிறார்" என்று ராஜீவ் காந்திக்கு கடிதம் எழுதியவர்தான் ஜெயலலிதா.

"The root cause of everything that is happening here is that the C.M. is terribly jealous of my popularity. He cannot stomach the fact that I have become so popular. So he is doing everything possible to eliminate me from the political scene and from public life. MGR himself, who does not want to give me due importance, does not want to induce me into the Cabinet. No one here can really dare to oppose him for without him they are Zeros" - என்பது ஜெயலலிதா எழுதிய கடிதத்தின் சாரம் ஆகும்.

**"மிகுந்த செல்வாக்குடன் நான் பிரபலம் அடைந்திருப்பதைப் பார்த்து முதலமைச்சர் (எம்.ஜி.ஆர்) மிகவும் பொறாமைப்படுகிறார். இதுதான் இங்கு நடைபெறும் ஒவ்வொரு செயலுக்கும் மூலக் காரணம். நான் மிகவும் பிரபலம் அடைந்துள்ளதை அவரால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. எனவே, அரசியலில் இருந்தும், பொதுவாழ்வில் இருந்தும் என்னை ஒழித்துக் கட்டத் தன்னால் முடிந்ததை எல்லாம் அவர் செய்து வருகிறார். எனக்கு உரிய முக்கியத்துவம் தர விரும்பாத எம்.ஜி.ஆர்., என்னை அமைச்சரவையில் சேர்க்கவும் விரும்பவில்லை. அவரை எதிர்க்க இங்கு யாருக்கும் தைரியமில்லை. ஏனென்றால் அவரில்லாவிட்டால் மற்றவர்கள் எல்லாம் பூஜ்யங்கள்" என்று சொன்னவர்தான் ஜெயலலிதா. இது அப்போதே 'மக்கள் குரல்' நாளிதழில் ஜெயலலிதாவின் அழகான கையெழுத்தில் வெளியாகி இருக்கிறது.**

★ இது எல்லாம் எம்.ஜி.ஆருக்கும் தெரியும். அதனால்தான், 'வேறு கட்சிக்குப் போவதற்கான வேலைகளை ஜெயலலிதா பார்த்து வருகிறார்' என்று 1984 அ.தி.மு.க. பொதுக்குழுவில் எம்.ஜி.ஆர். பேசினார். (ஆதாரம் 22.1.1985 'அண்ணா' நாளிதழ்)

★ தன்னைப் பார்த்து எம்.ஜி.ஆர். பொறாமைப்படுவதாகச் சொன்ன ஜெயலலிதாதான், எம்.ஜி.ஆர். மறைவுற்ற போது, 'உடன்கட்டை ஏறிவிடலாமா என்று யோசித்தேன்' என்றும் நாடகம் ஆடினார்.

★ எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு அவரது மனைவி ஜானகி முதலமைச்சர் ஆனார். ஜானகியை முதலமைச்சராக ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், அ.தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார் ஜெயலலிதா. 28.1.1988 அன்று முதலமைச்சர் ஜானகி அரசு தனது பெரும்பான்மையை நிரூபித்தாக வேண்டும். அன்றைய தினம் தமிழ்நாடு சட்டசபை வன்முறைக் களமாக மாற்றப்பட்டது. ஜெயலலிதா ஆதரவாளர்கள், மைக்குகளை வீசினார்கள். சோடா பாட்டிலே சபைக்குள் வந்தது. நாற்காலிகளை உடைத்தார்கள். இந்த வன்முறைக்குப் பிறகு ஜெயலலிதா நினைத்ததைப் போல ஜானகியின் ஆட்சி கலைக்கப்பட்டது.

★ 'ஜானகிதான் எம்.ஜி.ஆருக்கு மோரில் விஷத்தைக் கலந்தார்' என்றும், 'எம்.ஜி.ஆரின் மருத்துவச் செலவுக்காக 5 கோடி வசூலித்து விட்டார்' என்றும் அவதூறுச் செய்திகளை வீசினார் ஜெயலலிதா.

★ எம்.ஜி.ஆர். மரணத்துக்கு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று மனு கொடுத்தவர்தான் ஜெயலலிதா.

★ அந்தக் காலத்தில் போயஸ்கார்டன் வீட்டில் பால்கனியில் இருந்து பேசுவது ஜெயலலிதாவின் வழக்கம் ஆகும். 4.2.1988 அன்று பேசிய ஜெயலலிதா, "சில ஆண்டுகளுக்கு முன் ஒரு தொழிலதிபர் வீட்டில் வருமான வரிச் சோதனை நடத்தும் போது பல கோடி சிக்கியது. அது ஜானகிக்குச் சொந்தமானது என்று தெரிய வந்தது. ஆனால் ஒன்றுமறியாத பாப்பா மாதிரி அவர் பேசுவார். இந்த ஒன்றுமறியாத பாப்பாதான் நடிகை ஜெயந்தியின் வீட்டை வாங்கினார். நான் தான் எம்.ஜி.ஆருக்கே இதைச் சொன்னேன். அவர் அதிர்ச்சி அடைந்தார்" என்று குறிப்பிட்டு ஜானகியை அவமானப்படுத்தினார்.

★ எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் இருக்கும் ஒருவர், தான் சம்பாதித்த பணத்தை அவரது அப்பா சமாதியில் வைத்து பூசி விட்டார். அதனால் அந்த சமாதியை சி.பி.ஐ. தோண்ட வேண்டும் என்று பேட்டி கொடுத்தவர்தான் ஜெயலலிதா.

★ "மூப்பனார் நடத்திய கூட்டத்தை விட எனக்கு அதிகமான கூட்டம் வந்து இருக்கிறது. இதைக் கண்டு பொறாமை கொண்ட மூப்பனார், திட்டமிட்டு போலீஸைத் தூண்டி விட்டு எங்கள் தொண்டர்களைக் காயப்படுத்தி இருக்கிறார்" என்று சொன்னவரும் ஜெயலலிதாதான். (10.4.1988 மாலை மலர்)

★ திருச்சிக்குச் செல்லும் வழியில் ஜெயலலிதாவின் கார் மீது ஒரு பஸ் மோதியது. இது தொடர்பாக ஒரு பத்திரிக்கையாளர் கேட்ட போது, "என் கார்மீது ஆம்னி பஸ் மோதியது. அந்த பஸ் உரிமையாளர் ஆர்.எம்.வீரப்பனுக்கு நெருக்கமான நண்பர்" என்று சொன்னவர் ஜெயலலிதா. ('இல்லஸ்டிரேடட் வீக்லி' 1.5.1988)

★ 16.5. 1988 அன்று புதுக்கோட்டையில் பேசிய ஜெயலலிதா,

'என்னை ஒரு பெண் என்றும் பாராமல் அடித்து விரட்டவும், என் மீது திராவகம் வீசி ஒழித்துக் கட்டவும் ஜானகி திட்டமிட்டார்' என்று பேசினார். ஜேப்பியாரையும் அடியாட்களையும் ஏவி என்னை அடிக்கச் சொன்னார் என்று சொன்னார் ஜெயலலிதா. (மாலை முரசு 16.5.1988)

★ 1988ஆம் ஆண்டு இரண்டரைக் கோடி தேர்தல் நிதி வசூலித்திருப்பதாக தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். உடனே ஜெயலலிதா, 1.50 கோடி வசூலித்ததாக பொய் சொன்னதாகவும், உண்மையில் வசூலானது 40 லட்சம்தான் என்றும் அவரோடு இருந்த முன்னாள் அமைச்சரே பேட்டி கொடுத்தார். ஜெயலலிதாவின் உண்மை முகத்துக்கும் குணத்துக்கும் இது ஒரு உதாரணம்.

- தொடரும்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) மதுரை, திருப்பரங்குன்றம், சிலைமான் ஊராட்சியிலுள்ள அண்ணா மன்றத்தில் ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 90–வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் மதுரை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மு. மணிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



இராமநாதபுரத்தில் தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (பி.எல்.ஏ. 2 ) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரையாற்றிய கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்டக் கழகம் சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது. உடன் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, க.பொன்முடி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன். தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், ராஜகண்ணப்பன், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் உள்பட அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர் உள்ளனர்.

### கழக தென்மண்டல வாக்குச் சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று மீனவர்கள் மாநாட்டில் உரையாற்றுகிறார்!

## இராமநாதபுரம் வருகை தந்த முதல்வருக்கு வழிநெடுகிலும் எழுச்சி வரவேற்பு!

**இராமநாதபுரம், ஆக. 18-**

**தி.மு.க. தென் மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம் நேற்று ராமநாதபுரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று மாலை கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**இன்று நடைபெறும் மீனவர் மாநாட்டில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.**

தி.மு.க.வில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் வாக்குச்சாவடி முகவர்கள், தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மாவட்டங்களை 5 மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டல வாரியாக வாக்குச்சாவடி முகவர்களுக்கு ஒருநாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடத்த முடிவு செய்யப் பட்டது.

அதன்படி கடந்த ஜூலை 26ஆம் தேதி திருச்சியில் டெல்டா மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

### முதல்வர் சிறப்புரை!

இந்நிலையில், தி.மு.க. தென் மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம் ராமநாதபுரத்தில் நேற்று நடைபெற்றது. தேவிப் பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தி.மு.கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு நேற்று மாலை சிறப்புரையாற்றினார்.

### 19 மாவட்ட வாக்குச் சாவடி முகவர்கள் பங்கேற்பு!

இக்கூட்டத்தில், இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் கிழக்கு, மேற்கு, தேனி வடக்கு, தெற்கு, மதுரை மாநகர், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, விருதுநகர் வடக்கு, தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, மேற்கு உள்ளிட்ட 19 கழக மாவட்டங்களின், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வருக்கு வரவேற்பு!

தி.மு.க. தென் மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் பங்கேற்க ராமநாதபுரம் வருகை தந்த முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழிநெடுகிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மதுரையில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் டி.எம்.சவுந்திரராஜன் திருவுருவச் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து ராமநாதபுரத்தில் நேற்று நடைபெற்ற தென் மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பங்கேற்றார்.

### மீனவர்களுக்கு முதல்வர் நல உதவிகள்!

இதற்காக மதுரையில் இருந்து கார் மூலம் ராமநாதபுரம் சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு பொதுமக்கள் மற்றும் தி.மு.க நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பாச்சேத்தி, பார்த்திபனூர், பரமக்குடி, உள்ளிட்ட இடங்களில் மேள தாளம் முழங்க, கரகாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று காலை 10 மணியளவில் மண்டபம் கலோனியல் பங்களா அருகில் நடைபெறும் மீனவர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பாக இலவச வீட்டுமனை பட்டா சுமார் 4184 பயனாளிகளுக்கு 24 கோடியே 26 லட்சத்தி 28 ஆயிரத்து 315 ரூபாய் மதிப்பீட்டிலும் அதனைத் தொடர்ந்து மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பாக மானியத்தில் சூறை மீன் படகு கட்டுதல் மற்றும் பி.எம்.எம். எஸ்.ஒய். திட்டங்கள் கிசான் கடன் அட்டை, கடற்பாசி வளர்ப்பு மீனவர் நலவாரிய அட்டை 1299 நபர்களுக்கு, ஒன்பது கோடியே 92 லட்சத்து 80 ஆயிரத்து 794 ரூபாய் மதிப்பீட்டிலும், புதிய தொழில் முனைவோர் தொழில் மேம்பாட்டு திட்டம் மூலம் ஒரு பயனாளிக்கு 30 லட்சத்து 98 ஆயிரமும் மகளீர் சுய உதவி குழு கடன் கே.சி.சி.கடற்பாசி வளர்ப்பு கடன் 1152 பயனாளிகளுக்கு 5 கோடியே 43 லட்சத்து 75 ஆயிரம் மற்றும், கூட்டு பொறுப்பு குழு கடன் மகளிர் சுய உதவி குழு கடன், துயர் குறைப்பு நிதி, 608 பயனாளிகளுக்கு 30 கோடியே 82 லட்சத்து 51 ஆயிரம் மொத்தம் 70 கோடியே 76 லட்சத்து 32 ஆயிரத்து 609 ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

தொடர்ந்து மாநாட்டில் மீனவர்கள் சங்க நிர்வாகிகள் பேசியபின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

இந்த மாநாட்டில் கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீனவர் அணி நிர்வாகி கள், மீனவப் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

# அனைத்து மாநிலங்களின் நலனுக்காக குரல் கொடுக்கும் ஒரே கட்சி தி.மு.க.!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

## ஜெயலலிதாவுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் நிர்மலா சீதாராமன்!

## வாட்ஸ்அப்பில் வருவதையெல்லாம் வரலாறு என்று நம்புவது பிரதமர் பதவிக்கு அழகல்ல!

செயல்படுத்த வேண்டிய முறையும் என்ற தலைப்பில் இளம் பேச்சாளர் தம்பி மதுரை பாலா அவர்களும் உங்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

**அடிப்படைத் தகவல்களை மனதில் வைத்து செயல்படுங்கள்!**

கழகத்தின் வரலாறு - அடிப்படைக் கொள்கைகள் - திராவிட இயக்கத்தின் கோட்பாடுகள் - நவீன தமிழ்நாட்டை உருவாக்க நாம் எடுத்த முயற்சிகள் - திராவிட மாடல் ஆட்சி ஆகியவை குறித்த அடிப்படை தகவல்களைக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்றத்திலும் கர்ஜித்து வரும் அருமைத் தங்கை கனிமொழி அவர்களும், திராவிடப் பள்ளியை நடத்தும் நமது பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் சுப. வீ அவர்களும் - உங்களுக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள்.

இவர்கள் மூலமாக கொள்கை வழிகாட்டுதலும் - தேர்தல் பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கிறது. இது எல்லாவற்றையும் மனதில் வைத்து நீங்கள் செயல்பட வேண்டும். இதையெல்லாம் இந்தத் தேர்தலுக்கு மட்டுமல்ல, எந்தத் தேர்தலுக்கும் பயன்படும் பயிற்சி!

1967, 1971, 1989, 1996, 2006 ஆகிய ஐந்து முறை ஆட்சியைக் கைப்பற்றித் தமிழ்நாட்டை ஆண்ட இயக்கம் நமது திராவிட முன்னேற்றக் கழகம். கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் வென்று ஆறாவது முறையாக ஆட்சி நடத்தி வருகிறோம்.

**ஒன்றிய ஆட்சிகளில் பங்கேற்று தமிழ்நாட்டிற்கு ஏராள திட்டங்கள்!**

அதேபோல் இந்தியாவில் - ஒன்றிய ஆட்சியில் பல்வேறு தேர்தல்களில் ஆட்சி மாற்றத்திற்கு அடித்தளம் அமைத்த இயக்கம், நம்முடைய இயக்கம். பிரதமர்களை குடியரசுத் தலைவர்களை உருவாக்கிய இயக்கம், நம்முடைய இயக்கம்.

1989 பிரதமர் வி.பி.சிங் அமைச்சரவை,
1996 பிரதமர் தேவகவுடா அமைச்சரவை,
1997 பிரதமர் குஜ்ரால் அமைச்சரவை,
1999 பிரதமர் வாஜ்பாய் அமைச்சரவை,
2004 மற்றும் 2009இல் - பிரதமர் மன்மோகன்சிங் அமைச்சரவை என்று ஒன்றிய அளவிலான கூட்டணி ஆட்சிகளில் பங்கெடுத்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான திட்டங்களை கொண்டு வந்தோம். இந்திய அளவில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட அடித்தளம் அமைத்தோம்.

இதோ, இப்போது மீண்டும் ஒரு வரலாற்றுக் கடமை ஆற்றக் காலம் நம்மை அழைக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கி நாம் காத்திருக்கிறோம். இத்தகைய முக்கியமான தேர்தலுக்குத்தான் நீங்கள் வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களாக ஆகியிருக்கிறீர்கள். கழகத்தின் வாக்குச்சாவடிப் பொறுப்பாளர் என்ற நிலையை அடைந்திருக்கும் உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்குச்சாவடி பொறுப்பாளர்களான நீங்கள்தான் உங்கள் வாக்குச் சாவடியில் இருக்கும் வாக்காளர்களுக்கு முழு பொறுப்பாளர். வாக்குச் சாவடிப் பொறுப்பாளர் என்றால் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கும் நீங்கள்தான் பொறுப்பாளர்! நாற்பதும் நமதே நாடும் நமதே என்று நான் சொல்வது உங்கள் மேல் வைத்திருக்கிற நம்பிக்கையில்தான். இன்று முதல் கழகத் தேர்தல் பொறுப்பாளர்கள் என்ற கம்பீரத்தோடு நீங்கள் கடமையாற்ற வேண்டும்! வெற்றி ஒன்றே உங்கள் இலக்காக அமைய வேண்டும். அதற்கான சரியான வழிமுறைகளில் நீங்கள் போக வேண்டும். உங்களுக்கு நிறைய கடமைகள் இருக்கிறது.

**வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு நிறைய கடமைகள் உள்ளன!**

வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பதுதான் உங்களின் முதல் பணி. இரண்டாவது பணி, உங்கள் வாக்குச்சாவடிக்கு உரிய வாக்காளர்கள் விவரங்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா, போலி வாக்காளர்கள் இருக்கிறார்களா, இறந்தவர்கள் பெயர் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டதா என்று முழுமையாகச் சரிபார்க்க வேண்டும். முறையான வாக்காளரை நம்மை நோக்கி ஈர்க்க வேண்டும்.

வாக்காளர்களைச் சந்தித்துப் பரப்புரையில் ஈடுபடுவதும், நம்முடைய சாதனைகளை அவர்களிடம் தொடர்ந்து எடுத்து செல்வதும் உங்களின் மூன்றாவது பணி.

வாக்குப்பதிவு நடக்கும்போது வாக்காளர்களை பூத்துக்கு வரவைப்பது நான்காவது முக்கியக் கடமை.

முதலில், உங்கள் பூத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வாக்காளரைப் பற்றியும் முழுவதுமாகத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அதற்கான மாதிரிப் படிவத்தை இப்போது உங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். தொகுதிவாரியாக அச்சிடப்பட்டு விரைவில் உங்களுக்கு அது வந்து சேரும். வாக்காளர் பெயர், வயது, அவர்கள் குடும்பத்தினர் யார், என்ன படித்திருக்கிறார்கள், என்ன தொழில் செய்கிறார்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்கிற முழு விவரமும் உங்களிடம் இருக்க வேண்டும்.

உங்கள் வாக்குச்சாவடியில் 250 குடும்பங்கள் இருக்கும் என்றால் அந்தக் குடும்பங்களில் ஒருவராக நீங்கள் மாற வேண்டும். அது எப்படி மாற முடியும்? தினமும் ஒரு மணி நேரத்தைக் கழகத்துக்காக, பூத் வேலைக்காக ஒதுக்குங்கள். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம், உங்களால் ஒதுக்க முடியாதா? ஒதுக்குவீர்களா? அடுத்ததாக, அரசின் திட்டங்களையும் முழுவதுமாக தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் இன்றைக்கு ஒரு புத்தகம் கொடுத்திருக்கிறோம். அதைப் படித்துப் பார்த்தாலே எல்லாவற்றையும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

**வாக்காளர்களின் தேவை அறிந்து செயல்பட்டாக வேண்டும்!**

யாருக்கு என்ன தேவையோ அதைத் தெரிந்துகொண்டு ஏற்பாடு செய்து கொடுங்கள். ஒருவருக்கு முதியோர் உதவித்தொகையில் உதவிகள் தேவைப்படலாம். இன்னொருவருக்கு பட்டா மாறுதலில் உதவி தேவைப்படலாம். இப்படி அவரவர் தேவையைக் கண்டுபிடித்து அதை நிறைவேற்றி கொடுங்கள். இதைச் செய்து தருவதற்கு உங்கள் பகுதி ஒன்றிய - நகர பேரூர் கழகச் செயலாளர்களையோ, சட்டமன்ற உறுப்பினர்களையோ. அமைச்சர்களையோ அணுகுங்கள்.

இவ்வாறு, வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கொண்டு வரும் கோரிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும் என்று அமைச்சர்களிடமும், சட்டமன்ற உறுப்பினர்களிடமும் நான் தொடர்ந்து வலியுறுத்துகிறேன். இனியும் சொல்லிட்டுக்கொண்டுதான் இருப்பேன். அதை நிறைவேற்றாதவர்கள்மீது நான் உரிய நடவடிக்கை நிச்சயமாக வரும் காலக்கட்டத்தில் எடுப்பேன். நியாயமான கோரிக்கைகள் கட்டாயம் நிறைவேற்றித் தரப்படும். அதனால், நீங்கள் கவலைப்படாமல் நான் சொன்ன வேலையில் கவனம் செலுத்துங்கள்.

**நம்மை நிராகரிப்பவர்கள் இருக்க மாட்டார்கள்!**

ஒவ்வொரு நாளும் பத்து வீடுகளுக்குச் சென்று பேசுங்கள். ஒரு மாதத்தில் உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் அத்தனை வீடுகளுக்கும் நீங்கள் சென்று பேசியிருப்பீர்கள். சில வீடுகளில் மகிழ்ச்சியாக வரவேற்பார்கள். சில வீடுகளில் அதை எதிர்பார்க்க முடியாது. அதற்காக நாம் விட்டுடக் கூடாது. மீண்டும் அடுத்த மாதம் புன்னகை மாறாமல் அவர்களைத் தேடி செல்லுங்கள்.

என்னைப் பொறுத்தவரை நம்மை நிராகரிப்பவர்கள் இருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அனைவருக்கும் பொதுவான மக்களாட்சியை நாம் நடத்தி வருகிறோம். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு விதத்தில் பயனடையும் திட்டங்களாகப் பார்த்துப் பார்த்து நாம் செயல்படுத்தி வருகிறோம். மக்களுக்கு நம்முடைய ஆட்சி மேல் நம்பிக்கை இருக்கிறது.

*** கோடிக்கணக்கான மகளிருக்கு பயனளிக்கும் திட்டம்தான் பேருந்தில் கட்டணமில்லா 'விடியல் பயணம்'!**

*** ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் கலைஞர் பெயரிலான உரிமைத் தொகையை வரும் செப்டம்பர் மாதம், அண்ணா பிறந்தநாள் முதல் மாதாமாதம் வாங்கப் போகிறார்கள்.**

*** 30 லட்சத்துக்கும் மேற்பட்ட திட்டப் பயனாளிகள் பெற்றுவரும் 1000 ரூபாய் உதவித் தொகையை 1200ஆக ஆக்கி இருக்கிறோம்.**

*** லட்சக்கணக்கான பள்ளி மாணவர்கள் காலை உணவுத் திட்டத்தால் பசியில்லாமல் படிக்கிறார்கள்.**

*** 13 லட்சம் குடும்பங்களின் நகைக்கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறோம்.**

*** நான் முதல்வன் திட்டத்தால் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது.**

**எதிரிகளின் அவதூறுகள் சுக்குநூறாக நொறுங்கிவிடும்!**

இந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். நமக்கு எதிராக அவதூறுகளையும், பொய்ச் செய்திகளையும் பரப்ப ஒரு சிறுநரிக் கூட்டம் சுற்றிக்கொண்டு இருக்கிறது. பொய்களுக்கு ஆயுள் மிகவும் குறைவு. அவர்கள் பொய்யையே சொல்லிக்கொண்டு இருக்கட்டும்.

நாம் திரும்பத் திரும்ப நம்முடைய திட்டங்களை பற்றிப் பேசுவோம். இதிலேயே எதிரிகள் பரப்புகிற அவதூறுகள் சுக்குநூறாக நொறுங்கிவிடும்.

இப்போது பரப்புரை பாணியே பெரிய அளவில் மாறிவிட்டது. சமூக ஊடகங்கள் சிறப்பான பரப்புரைக் களங்களாக ஆகிவிட்டது. நீங்கள் எல்லோரும் சமூக ஊடகங்களில் கணக்கு தொடங்க வேண்டும். அதை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அ.தி.மு.க. - பா.ஜ.க.வினர் எதையுமே செய்யாமல் எல்லாவற்றையும் செய்த மாதிரி விளம்பரம் செய்து கொள்வார்கள். நாம் நம்முடைய சாதனைகளை மட்டும் பேசினாலே போதும்.

**பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!**

முன்பெல்லாம் டீக்கடையிலும், சலூனிலும் பேசப்பட்ட அரசியல் விவகாரங்கள், இப்போது சமூக ஊடகங்களில் பேசப்படுகிறது. எனவே நீங்கள் ஒவ்வொருவரும் அதில் தீவிரமாக செயல்பட வேண்டும். நடமாடும் ஊடகமாக மாற வேண்டும். இதைச் செய்தாலே நம்முடைய எதிரிகள் காணாமல் போய்விடுவார்கள்.

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா முழுமைக்கும் நம்முடைய கூட்டணி வெற்றி பெற வேண்டும். இந்தியாவின் கட்டமைப்பையே பா.ஜ.க. ஆட்சி சின்னாபின்னம் ஆக்கிவிட்டது. இதற்கு 2024-இல் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இல்லை என்றால், இந்தியாவை யாராலும் காப்பாற்ற முடியாது. கொடுத்த வாக்குறுதிகள் எதையும் பா.ஜ.க. செய்து தரவில்லை.

* பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், வெளிநாட்டில் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணத்தை மீட்டு வந்து ஆளுக்கு 15 லட்சம் தருவோம் என்று சொன்னார்களே! 15 ஆயிரமாவது தந்தார்களா? இல்லை!

* ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவேன் என்று சொன்னாரே பிரதமர் மோடி அவர்கள். வேலைவாய்ப்பு வந்ததா? இல்லை!

* உழவர்களின் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவேன் என்று சொன்னாரே? ஆக்கினாரா? இல்லை.

பெரிய பெரிய விஷயங்களைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டு தமிழ்நாட்டுக்குத் தந்த வாக்குறுதியையாவது நிறைவேற்றினீர்களா என்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நான் கேட்கிறேன்.

அதுவும், ராமநாதபுரத்தில் கேட்பது தான் பொருத்தமாக இருக்கும். ராமநாதபுரத்திற்கு வந்து போட்டியிடுங்கள் என்று, பிரதமரை சிலர் அழைப்பதாக ஊடகங்களில் தகவல் வருகிறது.

இதே ராமநாதபுரத்துக்கு வந்து பேசும்போது சொன்ன வாக்குறுதியையாவது பிரதமர் அவர்கள் நிறைவேற்றிக் காட்டி இருக்கிறாரா?

2014-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ராமநாதபுரத்துக்கு வந்து மோடி அவர்கள் பேசினார். அப்போது அவர் பிரதமர் ஆகவில்லை. வாக்கு கேட்டு வந்து பேசுகிறபோது என்ன சொன்னார்?

**சர்வதேச சுற்றுலாத் தலமாக இராமேஸ்வரம் மாற்றப்பட்டதா?**

மிகப்பெரிய புண்ணியத்தலமான ராமேஸ்வரம், சர்வதேச சுற்றுலாத் தலமாக மாற்றப்படும் என்று நரேந்திர மோடி அவர்கள் சொன்னாரா? இல்லையா! ராமேஸ்வரத்தை உலகப் புகழ் பெற்ற சுற்றுலாத் தலமாக மாற்றிவிட்டார்களா? அம்ருத் திட்டம் - சுதேஷ் திட்டம் என்று சில கோடி ரூபாய்களை ஒதுக்கி, பாதாளச் சாக்கடைத் திட்டம் செய்திருக்கிறார்கள். அதையும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முறையாக செய்யவில்லை.

1964-இல் வீசிய புயல் மற்றும் கடல் கொந்தளிப்பால் தனுஷ்கோடி அழிந்து போய்விட்டது. ராமேஸ்வரம் தாண்டி தனுஷ்கோடி வரை முன்பு ரயில்கள் வந்து போனது. புயலால் தனுஷ்கோடி பாதிக்கப்பட்டதில் ரயில் பாதைகளும் காணாமல் போய்விட்டது. தனுஷ்கோடி வரை மீண்டும் பாதை அமைத்து ரயில் போக்குவரத்து தொடங்குவதற்காக 2019-ஆம் ஆண்டு மார்ச் 1 அன்று பிரதமர் மோடி அவர்கள் வந்து அடிக்கல் நாட்டினார். ராமேஸ்வரம் தனுஷ்கோடி இடையே 17 கிலோ மீட்டர் தூர புதிய ரயில் பாதை இன்னும் வரவில்லை.

**2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக மோடி சுட்ட பல வடைகளில் அதுவும் ஒன்று. தேர்தல் முடிந்ததோடு, அது ஊசிப்போனது. அது இப்போது எந்த நிலைமையில் இருக்கிறது என்று** அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

> **உங்கள் வாக்குச்சாவடியில் 250 குடும்பங்கள் இருக்கும் என்றால் அந்தக் குடும்பங்களில் ஒருவராக நீங்கள் மாற வேண்டும். அது எப்படி மாற முடியும்? தினமும் ஒரு மணி நேரத்தைக் கழகத்துக்காக, பூத் வேலைக்காக ஒதுக்குங்கள். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம், உங்களால் ஒதுக்க முடியாதா? ஒதுக்குவீர்களா? அடுத்ததாக, அரசின் திட்டங்களையும் முழுவதுமாக தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் இன்றைக்கு ஒரு புத்தகம் கொடுத்திருக்கிறோம். அதைப் படித்துப் பார்த்தாலே எல்லாவற்றையும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.**

இதுபோல் தமிழ்நாட்டுக்காக பல ஸ்பெஷல் வடைகள் சுடப்பட்டது. அதில், மோடி அவர்கள் கொடுத்த முக்கியமான வாக்குறுதி, மீனவர்கள் தொடர்பானது. "தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்படுவதும் - கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதும் தினசரி நடந்துகொண்டு இருக்கிறது. இதற்கு காங்கிரஸ் அரசின் பலவீனம்தான் காரணம்" என்று இதே ராமநாதபுரத்தில் வைத்து தான் மோடி சொன்னார்.

பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் இந்த 9 ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படவே இல்லையா? மீனவர்கள் பாதுகாப்பாக வாழ வேண்டும் என்றால் இந்தியாவில் வலுவான அரசு அமைய வேண்டும். மீனவர்கள் வாழ்வு சிறக்க நான் ஒரு சபதம் எடுக்கிறேன் என்று குமரியில் 2014ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் தேதி மோடி பேசினார். அவரின் சபதத்தை நிறைவேற்றி விட்டாரா?.

2014 முதல் தமிழ்நாட்டு மீனவர்கள் மேல் இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தவில்லையா? 2017-ஆம் ஆண்டு தங்கச்சிமடம் மீனவர் பிரிட்டோ கொலைக்கு யார் பொறுப்பு? 2021-ஆம் ஆண்டு மேசியா நாகராஜன், செந்தில்குமார், சாம்சன், டார்வின் ஆகிய 4 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு யார் பொறுப்பு? பலரும் கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன. பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்தார்கள். இப்படி பெரிய பட்டியலே இருக்கிறது.

நாளைக்கு மீனவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கிறேன். அப்போது இது பற்றி இன்னும் விரிவாக பேசுவேன். மீனவர்களை விரட்டுவது, வலைகளை அறுப்பது, படகுகளை தாக்குவது, துப்பாக்கியால் சுடுவது, கைது செய்வது, சிறையில் அடைப்பது, படகுகளை பறிப்பது என்று அராஜகங்களுக்கு அளவில்லாமல் போய்விட்டது. அதை தட்டிக் கேட்கிற அரசாக பா.ஜ.க. அரசு இல்லை. மோடி ஆட்சியில் தாக்குதல் தொடரவே செய்கிறது என்றால் அவர் முன்பு சொன்ன மாதிரி, இவர் ஆட்சியும் பலவீனமான ஆட்சி என்று தானே அர்த்தம்?

> **திராவிட இயக்கத்தின் கொள்கைகள் இந்தியா முழுமைக்கும் பரவ வேண்டும், நம்முடைய சீர்திருத்த சட்டங்கள் இந்தியாவின் சட்டங்களாக மாற வேண்டும் என்று தலைவர் கலைஞர் நினைத்தார். அந்தக் கனவையும் நிறைவேற்றிக் காட்டுகிற காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. அதற்கான மாநாடுதான் இது! அதற்கான தளபதிகள்தான் நீங்கள்!**

**மதுரை எய்ம்ஸுக்கு இப்போதுதான் டெண்டர்!**

2015-ஆம் ஆண்டு ஒன்றிய நிதி அமைச்சராக அருண் ஜெட்லி அவர்கள் இருந்தபோது ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட திட்டம் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை. ஆனால் இன்றைக்கு வரைக்கும் எய்ம்ஸ் செங்கல்தான் இருக்கிறது மருத்துவமனை வரவில்லை. இப்போதுதான் அதற்கு டெண்டரே விட்டிருக்கிறார்களாம். அதாவது, 2015-ஆம் ஆண்டு அறிவித்த எய்ம்ஸ் டெல்லியில் இருந்து டெண்டர் அளவுக்கு உருண்டு வரவே சுமார் 9 ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

இனியாவது விரைவாக கட்டி முடிப்பார்களா, இல்லை, இதுவும் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான நாடகமா என்று தெரியவில்லை. தமிழ்நாட்டில் இருந்து ஜி.எஸ்.டி.யாக பல்லாயிரம் கோடி ரூபாயை ஆண்டு முழுவதும் வசூல் செய்கிற பா.ஜ.க. அரசுக்கு ஆயிரம் கோடியை ஒதுக்கி ஒரு எய்ம்ஸ் மருத்துவமனை கட்டித் தர மனமில்லை.

இதையெல்லாம் நாம் கேட்கிறோம் என்பதால் தி.மு.க.வைக் கடுமையாக தாக்குகிறார்கள். பிரிவினையைத் தூண்டுகிறோம் என்று திசை திருப்புகிறார்கள். பொய் சொல்கிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு என்ன பேசினார்? ஒரு காலத்தில் நாம் திராவிடநாடு கேட்டவர்களாக இருந்தாலும், இன்றைக்கு இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நம்மிடம்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

அது, இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்கான பேச்சுதானே தவிர, இதில் பிரிவினை எங்கே இருக்கிறது? இதை வெட்டி ஒட்டி, வாட்ஸ்அப்பில் ஒரு குரூப் அனுப்ப - நாடாளுமன்றத்தில், பிரதமர் தொடங்கி அமைச்சர்கள் அனைவரும் அதைப் பற்றிப் பேசுகிறார்கள். ராஜாஜியும், காமராசரும், எம்.ஜி.ஆரும் அப்துல் கலாமும் வாழ்ந்த மண்ணில் பிரிவினைவாதமா என்று கேட்கிறார் பிரதமர்.

அவருக்குச் சொல்வேன் - திராவிட நாடு கேட்டுக் கொண்டிருந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர்தான் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள்! 'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்று வாய சைத்துப் பாடிக்கொண்டு இருந்தவர்தான் எம்.ஜி.ஆர்., இதை எல்லாம் பிரதமர் தெரிந்து கொள்ள வேண்டும். தங்கள் கட்சிக்காரர்கள் நடத்தும் வாட்ஸ்அப் யுனிவர்சிட்டியில் வருவதையெல்லாம், வரலாறு என்று நம்புவது பிரதமர் என்ற பதவிக்கு அழகல்ல!

வகுப்புவாதத்தை துளியும் ஏற்காதவர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள். டெல்லியில் அவர் தங்கி இருந்த வீட்டைக் கொளுத்த முனைந்தது யார் என்பதை தெரிந்து கொண்டு பிரதமர் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பெயரை உச்சரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சொந்தக் கட்சியில் சொல்லும் அளவுக்கு தலைவர்கள் இல்லாததால் மாற்றுக் கட்சித் தலைவர்களைக் கடன் வாங்கி தி.மு.க.வை விமர்சித்திருக்கிறார் பிரதமர் மோடி அவர்கள்.

இப்போதுதான் சகோதரி கனிமொழி அவர்கள் சொன்னதால், சிலப்பதிகாரம் என்ற புத்தகத்தின் முன்னுரையைப் படிக்க ஆரம்பித்திருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள். அதை அவர் முழுமையாக படிக்க வேண்டும். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, ஓய்வு கிடைக்கும். அப்போது முழுமையாகப் படிக்க நேரம் கிடைக்கலாம்.

**ஒன்றிய நிதி அமைச்சரின் கணவரின் புத்தகத்தை படியுங்கள்!**

ஆனால், அதற்கு முன்பு நிதியமைச்சரின் கணவரான டாக்டர் பரகலா பிரபாகர் எழுதிய 'The Crooked Timber of New India' என்ற புத்தகத்தை ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர்கள் அனைவரும் படிக்க வேண்டும். மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அது நாட்டுக்குப் பேரழிவாக இருக்கும் என்று சொல்கிறார் நிதி அமைச்சரின் கணவர் பரகலா பிரபாகர் அவர்கள். என்னை இந்தி படிக்கவிடவில்லை சமஸ்கிருதம் படிக்க விடவில்லை என்று முடிந்து போன காலத்தைப் பற்றி கதை விடுகிற நிதி அமைச்சர் அவர்கள், இனி நடக்கப் போகிறதைப் பற்றி படிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அம்மையார் ஜெயலலிதா சட்டமன்றத்தில் நடத்திய நாடகத்துக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் நிதி அமைச்சருக்கு மணிப்பூரில் ஆடை களையப்பட்டு இழுத்து வரப்பட்ட பெண்களைப் பார்த்து ஏன் கண்ணீர் வரவில்லை? ஒன்றரை மணி நேரமாக நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமருக்கு மணிப்பூர் என்கிற ஒரு மாநிலமே நினைவுக்கு வரவில்லையே! எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த பிறகு ஒப்புக்கு ஒரு சில நிமிடங்கள் அதைப் பற்றி பேசியிருக்கிறார். நாடாளுமன்றத்திற்கு வர மறுப்பதும் - மணிப்பூர் பற்றி பேச மனமில்லாமல் இருப்பதும்தான் பிரதமரின் பின்னடைவைக் காட்டுகிறது இது நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயமாக, உறுதியாக எதிரொலிக்கும்.

வடக்கைத்தான் அவர்கள் அதிகம் நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது வட மாநிலங்களையும் இழக்கத் தொடங்கிவிட்டார்கள். மக்கள் நலனில் அக்கறை இல்லாத ஆட்சியின் பிரதமரோ - உள்துறை அமைச்சரோ - நிதி அமைச்சரோ தி.மு.க.வை விமர்சிக்கிறார்கள் என்றால் தி.மு.க. சரியாக இருக்கிறது என்று பொருள்.

**தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் பாதம் தாங்கி பழனிச்சாமி!**

தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாக இருப்பது யார், பழனிச்சாமி! அ.தி.மு.க., பா.ஜ.க.வின் அடிமை! தி.மு.க. எதிர்ப்பு ஒன்று மட்டும்தான் அ.தி.மு.க.விற்குத் தெரியும். நம் மீது பல அவதூறுகளையும், பொய்களையும் சொல்லித்தான் அவர்களுக்கு அரசியல் செய்யத் தெரியும். சொந்தமாகச் சொல்லிக்கொள்ள அவர்களுக்கு என்று எந்தத் தியாக வரலாறோ, கொள்கையோ கிடையாது. அதனால்தான் தி.மு.க. எதிர்ப்பை மட்டுமே நம்பி அரசியல் செய்து இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களால் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறார்கள். அ.தி.மு.க., பா.ஜ.க போன்றவர்களின் பொய்களுக்கும் எதிர்ப்புக்கும் அஞ்சும் இயக்கம் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம்!

எதிர்ப்பில் வளர்ந்த இயக்கம்தான் இந்த இயக்கம்! ஏன் என்றால், இது மக்களுக்கான இயக்கம். மக்களோடு இருக்கும் இயக்கம். மக்களின் ஆதரவோடு என்றென்றும் பணியாற்றும் இயக்கம். எனவே, மக்கள் மன்றத்தில் எங்களைக் கொச்சைப்படுத்த நினைத்தால் அது நடக்காது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதால் எதையும் பேசி விடலாம். ஆனாலும் தி.மு.க. பற்றி வசைபாடலாம் என்று நினைத்தால் அது நடக்காது. நாங்கள் மாநில கட்சிதான். நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களின் நலனுக்காகவும் குரல் கொடுக்கும் ஒரே மாநிலக் கட்சிதான் தி.மு.க! நாடாளுமன்ற மக்களவையிலும், மாநிலங்களவையிலும் ஒன்றிய பா.ஜ.க அரசின் அமைச்சர்கள் எம்.பி.க்கள் பேசும் அவதூறுகளுக்கு அஞ்சாமல் பதிலளித்து நமது குரலை ஓங்கி ஒலித்துக்கொண்டு வருகிறார்கள் நம்முடைய கழக எம்.பி.க்கள்.

**தி.மு.க. கொள்கைகளை மற்றவர்கள் பின்பற்றுவதால் பா.ஜ.க. எரிச்சல்!**

தி.மு.க. உறுப்பினர்கள் கொள்கையைப் பேசுகிறார்கள் பயமில்லாமல் பேசுகிறார்கள் என்பதுதான் பா.ஜ.க.விற்கு கோபம். தி.மு.க. பேசும் கொள்கைகளை மற்ற கட்சியினரும் பின்பற்றிப் பேசுகிறார்கள் என்பதுதான் பாஜகவிற்கு எரிச்சலாக இருக்கிறது.

அகில இந்தியக் கட்சிகள் சில, நம்முடைய கருத்தியலை உணர்ந்து மனமாற்றம் அடைந்து வருகின்றன.

நம்முடைய கொள்கை இந்திய ஒன்றிய ஆட்சியை வழிநடத்தும் கொள்கையாக மாற வேண்டும். அதற்கு தமிழ்நாடு, புதுவை உள்ளிட்ட 40 நாடாளுமன்றத் தொகுதிகளையும் நாம் கைப்பற்றியாக வேண்டும். அகில இந்தியா முழுமைக்கும் இந்தியா கூட்டணியை உருவாக்கி இருக்கிறோம். இந்தியாவைக் காப்பாற்றப் போவது இந்த INDIA கூட்டணிதான். .

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்தியாவைக் காப்பாற்ற INDIAவுக்கு வாக்களியுங்கள் என்பது தான் நமது தேர்தல் முழக்கமாக அமையப்போகிறது.

பா.ஜ.க.வினர் தங்களை எதிர்ப்பவர்களைப் பார்த்து Anti Indians என்று பழிசுமத்துவது வழக்கம். இப்போது இந்தியாவை எதிர்க்கும் Anti Indianகளாக பா.ஜ.க.வினர் இருக்கிறார்கள்.

எனவே நமக்கு முன்னால் உள்ள கடமை என்பது மிகமிகப் பெரியது. நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டணியை நான் பார்த்துக் கொள்கிறேன். தேர்தல் வெற்றிக்கான களப்பணியை நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஜனநாயகப் போர்க்களத்தில் முன்னணிப் படை வீரர்கள் நீங்கள். என்னுடைய போர்ப்படைத் தளபதிகள் நீங்கள். உங்களை நம்பி நாடாளுமன்றத் தேர்தல் களத்தை நான் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறேன். எனது கடமையின் தூதுவர்களாக ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் இருக்கப் போகிறவர்கள் நீங்கள்தான். உங்கள் உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரமும் முக்கியத்துவமும் கழகத்தில் நிச்சயமாக, உறுதியாக, அண்ணாமீது ஆணையாக கிடைக்கும்.

**உங்களை நம்பி இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறேன்!**

கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு கொண்ட அண்ணாவின் தம்பியராய் கலைஞரின் உடன்பிறப்புகளாய் வென்று காட்டுவோம். உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களை நம்பி இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறேன். களம் காணுங்கள். கழகத்தின் வெற்றிக்காக களமாடுங்கள்.

**நாற்பதும் நமதே! நாடும் நமதே!**

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### அடிக்கல் நாட்டி 5 ஆண்டுகளுக்குப் பிறகு

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கு டெண்டர்!

## தேர்தல் நெருங்குவதால் பா.ஜ.க. அரசின் திட்டமிட்ட அறிவிப்பா என எழும் விமர்சனங்கள்!

சென்னை, ஆக.18-

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கு அடிக்கல் நாட்டி, 5 ஆண்டுகள் கழித்து ஒன்றிய அரசு டெண்டர் வெளியிட்டுள்ளது. நாடாளுமன்றத்தேர்தல் நெருங்குவதால், அரசியல் ஆதாயத்திற்காக எய்ம்ஸ்மருத்துவமனைக்கான டெண்டரை ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளியிட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தமிழ்நாட்டில்எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என்று 2015ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் தேதி ஒன்றிய அரசு அறிவித்தது. மதுரை மாவட்டம், தோப்பூரில் சுமார் 224.24 ஏக்கர் பரப்பளவில் ஆயிரத்து 264 கோடி ரூபாய் செலவில் எய்ம்ஸ் மருத்துவமனைஅமைக்க கடந்த2018ஜூனில்ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியது. 2015ம் ஆண்டு மதுரைஎய்ம்ஸ்அறிவிப்பு வெளியிடப்பட்டநிலையில், 2019ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நெருங்கியநேரத்தில், பிரதமர் மோடி எய்ம்ஸ் மருத்துவமனைக்குஅடிக்கல் நாட்டினார்.

இந்தியாவில் உள்ள மருத்துவமனைகளில் முதன்மையானதாக கருதப்படும் 'எய்ம்ஸ்' மருத்துவமனை தமிழ்நாட்டிற்கு வருவதை அறிந்த மக்கள், தங்களுக்கு உயர்தர சிகிச்சை விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தனர்.

ஆனால், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.கஅரசுபாரபட்சம் காட்டியது. இந்தியா முழுவதும்மற்றமாநிலங்களில் அறிவிக்கப்பட்ட 'எய்ம்ஸ்'மருத்துவமனைகளுக்கு ஒன்றிய அரசு நேரடியாக நிதி ஒதுக்கியது.

ஆனால், மதுரை 'எய்ம்ஸ்' மருத்துவமனைக்கு மட்டும் ஜப்பான் நாட்டின் ஜைக்கா நிறுவனத்திடம் கடன் கேட்டது. அந்த நிறுவனம், கடன் வழங்க ஒப்புக் கொண்டாலும், அதற்கான நடைமுறைகள்,ஆய்வுப்பணிகளுக்கு தாமதம் செய்தது.

**அடிக்கல் நாட்டியதோடு நிற்கிறது!**

மதுரை'எய்ம்ஸ்'மருத்துவமனையுடன்அறிவிக்கப்பட்ட, நாட்டின் பிற மருத்துவமனைகளின் கட்டுமானப்பணிகள் முடிந்து, அந்த மருத்துவமனைகள் செயல்பாட்டிற்கு வந்துவிட்ட நிலையில், 2022ஆம் ஆண்டில் திறக்கப்பட வேண்டிய மதுரை 'எய்ம்ஸ்' மருத்துவமனை மட்டுமே, பணிகள் எதுவுமே துவங்காமல், பிரதமர் மோடி அடிக்கல்நாட்டியதோடு நிற்கிறது. 45மாதங்களில் கட்டுமானப்பணிகள் நிறைவடையும் என அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மோடி கூறிய நிலையில் மதுரை தோப்பூரில் 'எய்ம்ஸ்' ஒதுக்கிய224ஏக்கர்இடம் வெறும் பொட்டல்காடாககாட்சிஅளிக்கிறது. அடிக்கல் நாட்டு விழாவில் நடப்பட்ட அந்த ஒற்றைசெங்கல்லைதவிர வேறு எந்த பணியையும் ஒன்றிய அரசு இதுவரை தொடங்காமல்உள்ளது. மேலும் இந்த ஒற்றை செங்கல்லுக்காகமட்டும் சுற்றுச்சுவரை அமைத்துள்ளது. இந்த இரண்டு வேலைகளைத் தவிர வேறு எந்த கட்டுமான பணிகளையும் ஒன்றிய அரசு தொடங்காமல் இருந்துவருகிறதுவெட்ட வெளிச்சமாகியுள்ளது.

**அரசியல் ஆதாயத்திற்காக கட்டுமான டெண்டர்!**

இதற்கு தமிழ்நாடு கடும்எதிர்ப்புதெரிவித்து வந்தாலும் ஒன்றிய அரசு எதைப்பற்றியும் கண்டு கொள்ளாமல் அலட்சியமாக இருந்து வருகிறது. சட்டமன்ற தேர்தலின் போது கூட அமைச்சர் உதயநிதிஸ்டாலின்பிரச்சாரத்தின் முக்கியமானதாக இருந்தது ஒற்றை செங்கல்தான். 2022ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்த பா.ஜ.க. தலைவர் ஜே.பி. நட்டா மதுரை எய்ம்ஸ் பணிகள் 95% முடிந்துவிட்டதாகக்கூறியது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 95% வேலை முடிந்த எய்ம்ஸ் எங்கே? என அரசியல் கட்சித்தலைவர்கள்பலரும்கேள்விஎழுப்பினர். இந்நிலையில் பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டி 5 வருடங்கள் ஆகியுள்ள நிலையில், நாடாளுமன்ற தேர்தலுக்கான தேதியும் நெருங்கிவிட்டது. இதனால் தேர்தல் பிரச்சாரங்களின் போது மதுரை எய்ம்ஸ் விவகாரத்தை தவிர்க்க ஒன்றிய பா.ஜ.க அரசு,

**இதுநாள் வரை பேசிவந்தது பொய்!**

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கு டெண்டர் வெளியிட்டுள்ளது.இதன்மூலம் ஒன்றிய அரசு இந்நாள் வரைபேசிவந்ததுபொய் என்பது வெட்டவெளிச்சமாகியுள்ளது. அதுவும் 2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நெருங்குவதால், அரசியல் ஆதாயத்திற்காகவும், வெறும் கண்துடைப்பிற்காகவும் எய்ம்ஸ்மருத்துவமனைக்கான டெண்டரை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

# தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு.!

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 26 - 8- 2023 - சனிக்கிழமை மாலை 4.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள்:** தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை" தமிழகம் முழுவதும் நடத்துவது குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
. நாள்: 16 -8 - 2023

**அன்னியூர் சிவா**
செயலாளர், தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மறைந்த அரசியல் மாமேதை , கலைஞரின் கண்மணி முரசொலி மாறன் அவர்களின் 90ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தஞ்சை மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, து.செல்வம், மாநகரக் கழகச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.

### ஏழை மாணவர்களின் நலன் கருதி

# ஆத்தூர் தொகுதியில் பொறியியல் கல்லூரி அமைத்தவர் கலைஞர்!

## நவாப்பட்டியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் ஐ. பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, ஆக.18-

ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் ஏழை மாணவர்களின் நலன் கருதி திமுக ஆட்சியின் போது பொறியியல் கல்லூரியை கொண்டுவந்தவர் முன்னாள் முதல்வர் கலைஞர் என்றும் மருத்துவ மணையில் இருந்தபோதே மாணவர்களுக்காக ஒரே நாளில் நிதியை ஒதுக்கி ரெட்டியார்சத்திரத்தில் அண்ணா பொறியியல் கல்லூரிக்கான ஆணையை வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று நவாப்பட்டியில் நடைபெற்ற ரேஷன்கடை திறப்புவிழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உருக்கமாக பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கன்னிவாடி பேரூராட்சிக்கு உட்பட்ட நவாப்பட்டி கிராம மக்கள் தங்களுக்குரிய ரேஷன் பொருட்களை வாங்க 2கி.மீ தூரம் சென்று மணியகாரன்பட்டியில் ரேசன் பொருட்களை வாங்கி வந்தனர். தங்கள் பகுதியில் பகுதிநேர நியாயவிலைக்கடை வேண்டுமென ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியாமியிடம் கோரிக்கைவிடுத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று நவாப்பட்டியில் புதிய நியாய விலைக்கடை திறப்புவிழா நடைபெற்றது விழாவிற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.ந. பூங்கொடி தலைமை தாங்கினார்.

ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க. சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கு.சத்தியமூர்த்தி, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மனோரஞ்சிதம், பேரூராட்சிமன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், துணைத்தலைவர் கீதா முருகானந்தம், பேரூர்கழக செயலாளர் இளங்கோவன், முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம், செயல்அலுவலர் ஜெயமாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுவிநியோக திட்ட துணைப்பதிவாளர் அன்புக்கரசன் வரவேற்று பேசினார்.

விழாவில் பகுதிநேர நியாயவிலைக்கடையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கிவிட்டு பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கடந்த 12வருடங்களுக்கு முன்பு தி.மு.க. ஆட்சியின் போது வருவாய்துறை அமைச்சராக பதவி வகித்த போது கிராமங்கள்தோறும் நியாயவிலைக்கடையை திறந்து வைத்ததால் கிராம மக்களுக்கு தங்குதடையின்றி ரேஷன் பொருட்கள் கிடைக்கும் நிலைமை உருவானது அதன்பின்பு அதிமுக ஆட்சியில் ஒரு கிராமத்தில் கூட பகுதி நேரமோ, முழுநேர நியாயவிலைக் கடைகள் திறக்கவில்லை. தற்போது தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் கிராமங்கள் தோறும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக 10 வருடங்களுக்கு முன்பு மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்கள் அவர்



கள் முதல்வராக இருந்த போது ஆத்தூர் தொகுதியில் உள்ள மாணவ மாணவிகளின் நலன் கருதி பொறியியல் கல்லூரி வேண்டுமென்றும் அரசு பொறியியல் கல்லூரி படிக்க விரும்பும் மாணவர்கள் திருச்சி மற்றும் மதுரைக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது என கூறினேன். அவர் மருத்துவமணனயில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் கிராமப்புற மாணவர்கள் நலன் கருதி ஆத்தூர் தொகுதியில் அண்ணா பொறியியல் கல்லூரி அமைக்க உத்தரவிட்டதோடு அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்தார்.

அதன்பின்பு கிராமங்கள் தோறும்நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டுமென கோரிக்கைவிடுத்தேன் உடனடியாக 200 குடும்ப அட்டைகள் இருந்தால் கூட அந்த கிராமத்திற்கு நியாயவிலைக்கடை திறக்க உத்தரவிட்டார் அதன்பின்னர் தமிழகம் முழுவதும் கிராமங்கள்தோறும் நியாயவிலைக்கடைகள் திறக்கப்பட்டன என்றார்.

தற்போது நவாப்பட்டி கிராமத்தில் 150 குடும்பங்கள் வசித்தாலும் அவர்கள் சிரமமில்லாமல் ரேஷன் பொருட்களை வாங்க இன்று இங்கு பகுதிநேர நியாயவிலைக்கடை திறக்கப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் கமலக்கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணன், மலரவண், கூட்டுறவு வளர்ச்சி அலுவலர்கள் சக்கரவர்த்தி மணிமாறன், கனேசன், கூட்டுறவு சார்பதிவாளர் அன்பரசு, வட்டார காங்கிரஸ் தலைவர் முருகானந்தம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜேஸ்பெருமாள்,

மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், மாவட்ட பிரதிநிதிகள் ஜீவானந்தம், பெருமாள், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், அமைப்புசாரா தொழிலாளர் அணியை சேர்ந்த கிருஸ்துராஜா, பொதுக்குழு உறுப்பினர் டென்னிஸ், ஒன்றிய பிரதிநிதி சரவணன், பேரூராட்சி உறுப்பினர்கள் கார்த்திகை செல்வி, மணிமாலதி, மகேஸ்வரி, மருதாயம்மாள், உமா இந்திராகாந்தி, மற்றும் கன்னிவாடி பேரூர் கழக அவைத்தலைவர் சர்புதீன், வார்டு செயலாளர்கள் பூமிபாலன், தெய்வேந்திரன், காளியப்பன், ரேசன் கடை விற்பனையாளர் செந்தில் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒன்றிய பா.ஜ.க. அறிவித்த புதிய ஏழு திட்டங்களில் பல கோடி ஊழல்!

## காங்கிரஸ் கடும் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.18-

ஆயுஷ்மான் பாரத் திட்டம், அயோத்தியா மேம்பாட்டு திட்டம், துவாரகா விரைவு சாலைத் திட்டம் உள்ளிட்ட7திட்டங்களில்பல கோடிரூபாய்ஊழல்செய்யப்பட்டிருப்பதுவெட்ட வெளிச்சமாகியிருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

டெல்லியில்செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர்சுப்ரியாசிரினேட், பாரத்மாலா திட்டத்தில் கட்டுமானச் செலவு கிலோ மீட்டருக்கு 15 கோடியே37லட்சம்ரூபாயாகஇருக்கும்நிலையில், அதற்கு மாறாக கிலோ மீட்டருக்கு 32 கோடி ரூபாய்க்கும் மேல் தரப்பட்டிருப்பதாக சி.ஏ.ஜி. கூறியிருப்பதாக தெரிவித்தார்.

மேலும், துவாரகா எக்ஸ்பிரஸ் சாலை திட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கு சாலை அமைக்க 18 கோடி ரூபாய்எனஇருந்தநிலையில்,250கோடிரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாக சிஏஜி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

நாட்டிலுள்ள 5 சுங்கச் சாவடிகளை தணிக்கை செய்யப்பட்டதில், அப்பாவி மக்களிடம் 132 கோடிரூபாய்முறைகேடு செய்யப்பட்டிருப்பதாக சிஏஜிகூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோல் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் இறந்து போன மக்களின் பெயரில் சிகிச்சை அளிக்கப்பட்டதாக கூறி, பணம் முறைகேடு செய்யப்பட்டிருப்பதாகவும், மேலும்,அயோத்திமேம்பாட்டு திட்டத்திலும் முறைகேடு நடந்திருப்பதாக சிஏஜி தெரிவித்துள்ள என்றும் சுப்ரியா சிரினேட் கூறினார்.

இந்த முறைகேடுகள் குறித்துவிசாரணைநடத்தப்பட வேண்டும் என்ற சுப்ரியா சிரினேட், பிரதமர் மோடியும் மவுனத்தைகலைத்துஅதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

### சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவினர்

# நெல்லை மாவட்டத்தில் பல்வேறு திட்டப்பணிகளை ஆய்வு செய்தனர்!

## குழுத் தலைவர் க.அன்பழகன் தலைமை! மு.அப்துல்வகாப் - பி.எம்.சரவணன் முன்னிலை!

நெல்லை, ஆக.18 -

நெல்லை மாவட்டத்தில் சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் அன்பழகன் (கும்பகோணம்) தலைமையில் குழு உறுப்பினர்கள் சந்திரன் (திருத்தணி) சிவக்குமார் (மயிலம்) பரந்தாமன் (எழும்பூர்) ராஜேஷ்குமார் (கிள்ளியூர்) ஜவாஹிருல்லா (பாபநாசம்) சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன் ஆகியோர் அடங்கிய சட்ட பேரவை மதிப்பீட்டு குழுவினர், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வ காப் மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், ஆணையாளர் சிவகிருஷ்ணமூர்த்தி துணை மேயர் ராஜு ஆகியோர் முன்னிலையில் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து ஆய்வுப்பணி மேற்கொண்டனர்.

நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அடிப்படை வசதிகள் மற்றும் போதுமான மருத்துவ வசதிகள் குறித்து சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் அன்பழகன் தலைமையிலான குழு உறுப்பினர்கள் பார்வையிட்டதோடு பாம்பு கடி, நாய்க்கடி உள்ளிட்ட சிகிச்சைக்கான மருந்துகள் இருப்பு குறித்து பார்வையிட்டார்கள்.

மேலும் இன்னுயிர் காப்போம்,நம்மை காக்கும் திட்டம் மற்றும் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் இதயம் காப்போம் மருத்துவப் பெட்டகங்களை ஆய்வு மேற்கொண்டு,சிகிச்சைக்காக வந்த நோயாளிகளிடம் மருத்துவ சிகிச்சை வழங்குவது குறித்து கேட்டறிந்தனர்.

தொடர்ந்து வண்ணாரப்பேட்டை தெற்கு புறவழிச்சாலை 4 வழி சாலை விரிவாக்கப் பணிக்காக கே.ஏ.ஹோட்டல் அருகில் பாலம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டனர். குலவணிகர்புரத்தில் "தோழி" பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதியினையும் அவ்விடுதியில் பயோமெட்ரிக் முறையில் கதவு திறக்கப்படுவது குறித்து பார்வையிட்டு போதுமான இட வசதி உள்ளதா என்பதையும் பணி புரியும் மகளிர்களிடம் கேட்டறிந்தனர்.

பாளையங்கோட்டை ஏ.ஆர்.லைனில் உள்ள வணிகவரி இணை ஆணையர் அலுவலகத்தினை பார்வையிட்டு இணைய வழியாக ஒவ்வொரு சோதனை சாவடிகளில் சரக்கு போக்குவரத்து சரியான முறையில் செல்லும் நடைமுறைகள் குறித்து பார்வையிட்டனர்.அரசினர் கல்லூரி மாணவியர் ஆதிதிராவிட விடுதியினை நேரில் பார்வையிட்டு அங்கு மாணவிகளுக்காக தயாரிக்கப்படும் உணவின் தரம் குறித்தும்,சுகாதார முறைகள் கழிப்பிட வசதி,தங்கும் இடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இருப்பது குறித்தும் சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழுவினர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

தொடர்ந்து ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகத்தில் பத்திரப்பதிவு வந்தவர்களிடம் முறையாக பதிவுகள் மேற்கொள்ளப் படுகிறதா என்பது குறித்து கேட்டறிந்ததோடு,பத்திரப்பதிவு அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பாளையங்கோட்டை அரசு மருத்துவமனை மற்றும் பல்நோக்கு மருத்துவமனையினை பார்வையிட்டு சிகிச்சைக்காக வருபவர்களிடம் முறையான சிகிச்சைகள் அளிக்கப்படுவது குறித்தும் இருதய நோய் பிரிவு,சிறுநீரகப் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகளை பார்வையிட்டனர். தொடர்ந்து பல்நோக்கு மருத்துவ மனையில் நாங்குநேரி கிராமம் பெருந்தெரு பகுதியில் உள்ள பள்ளி மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்பட்டு வெட்டுக்காயம் அடைந்து சிகிச்சை மேற்கொண்டு வரும் அண்ணன்,தங்கை இருவரையும் பார்வையிட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறியதோடு அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர்.மேலும் ரூபாய் 20 கோடி மதிப்பில் அது தீவிர சிகிச்சை பிரிவு கட்டுமான பணியினையும் பார்வையிட்டனர்.

ரெட்டியார்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கப்படும் கல்வி கற்கும் முறை மற்றும் பள்ளிகளின் அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு கேட்டறிந்தனர்.

பின்னர் மேலப்பாளையம் ரயில்வே கேட் பகுதியில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் அப்பகுதி மக்கள் தனியாக துணை சாலை அமைத்து தர கோரிக்கை மனு அளித்துள்ளார்கள். அக்கோரிக்கையினை அரசிற்கு பரிந்துரை செய்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதோடு நெல்லை மாவட்ட பொதுமக்களிடமிருந்து வரப்பட்டுள்ள மனுக்கள் மற்றும் கோரிக்கைகள் முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் அன்பழகன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் செந்தில்குமார் மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) சுகன்யா, பொதுபணித்துறை செயற்பொறியாளர் பிரபு உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நீட் விவகாரத்தில் பா.ஜ.க. எதிரி என்றால், அ.தி.மு.க. துரோகி என்பதை அம்பலப்படுத்துவோம்!


# உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றி பெறச் செய்வோம்!

## காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஆக. 18 –**

**நீட் விவகாரத்தில் பா.ஜ.க. எதிரி என்றால், அ.தி.மு.க. துரோகி என்பதை உண்ணாவிரதத்தின் மூலம் அம்பலப்படுத்துவோம் என்றும், மாநிலம் முழுவதும் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றி பெற வேண்டியது மிக மிக அவசியம் என்றும் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்தார்.**





தமிழ்நாட்டு மாணவர்கள் மீது நீட் தேர்வைத் திணிக்கும் ஒன்றிய அரசையும் ஆளுநரையும் கண்டித்து, கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் வரும் 20ம் தேதி நடைபெற உள்ள உண்ணாவிரத அறப்போராட்டம் தொடர்பான ஆலோசனைக்கூட்டம், காணொலிக்காட்சி வாயிலாக நடைபெற்றது.

**இக்கூட்டத்தை தலைமையேற்று நடத்திய கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:**

அனைவருக்கும் வணக்கம்,

இளைஞர் அணிக்கு நம்முடைய தலைவர் ஒவ்வொரு முறையும் ஒரு இலக்கு, ஒரு டாஸ்க் கொடுக்கும் போது நாங்கள் இப்படித்தான் அதற்கு முன்னாடி ஒரு மீட்டிங் நடத்தி ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தி தயாராகுவோம். அந்த வகையில், இன்றைக்கு இந்த ஆய்வுக் கூட்டத்தை ஒரு குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்து கிட்டத்தட்ட 90 சதவிகிதம் பேர் இதில் கலந்துகொண்டுள்ளோம்.

இளைஞர் அணி மட்டுமல்ல கழகத்தின் எந்த அணியாக இருந்தாலும், இதுபோல எந்த நிகழ்ச்சியைக் கொடுத்தாலும் ஒரு சிறந்த திட்ட மிடலுக்காகத்தான் இந்த நிகழ்ச்சி, இந்த ஆய்வுக்கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

### திட்டமிடலுக்காகத்தான் இந்த ஆலோசனைக் கூட்டம்!

திராவிட மாடல் பயிற்சிப் பாசறையாக இருக்கட்டும், இளைஞர் அணியினுடைய உறுப்பினர் சேர்க்கை, கொரோனா கால நலத்திட்ட உதவிகள், மக்கள் நலனுக்கான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு, யார் யார் என்னென்ன வேலைகளைச் செய்யப் போகிறோம் என்கிற இந்தத் திட்டமிடலுக்குத்தான் இந்த ஆலோசனைக் கூட்டத்தை நாம் இங்கே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இப்போது நீட்டை ரத்து செய்யவேண்டும் என்று கூறி, இப்பொழுது ஒரு உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் வருகிற 20ஆம் தேதி. அதற்கு இந்த ஆலோசனைக் கூட்டம் என்பது, ஏதோ நம் வீட்டு நிகழ்ச்சி ஒன்றுக்கான ஏற்பாடு போல ரொம்பவும் பர்சனலாக நான் இதை உணர்கின்றேன்.

நீங்களும் உணர்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

அனிதா மரணத்தில் ஆரம்பித்து, இன்று ஜெகதீஸ்வரன் மரணம் வரை 23 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. அனிதாவினுடைய மரணம் நம் எல்லோரையும் அந்த நேரத்தில் உலுக்கி எடுத்தது. கல்விதான் சமூக மாற்றத்திற்கான கருவி என பெரியார், அண்ணா, கலைஞர் என்று நம்முடைய முன்னோடிகள் விதைத்த அந்த நம்பிக்கையில் படித்த பொண்ணு. கூலி வேலை செய்கிற அப்பா, அம்மா குடிசை வீடு 1,200 மார்க்குக்கு 1,176 மார்க் எடுத்த தங்கை அனிதா. இந்நேரம் அனிதா உயிரோடு இருந்திருந்தால் அவர் ஒரு மருத்துவர். படிச்சா பெரிய ஆள் ஆகிவிடலாம் என்று நம் முன்னோர்கள் விதைத்த அந்த நம்பிக்கையின் பலன்தான் நம் அனிதா எடுத்த அந்த 1176 மார்க்.

ஆனால், நீ படித்தாலும் பெரிய ஆள் ஆக முடியாது என்ற அவநம்பிக்கையின்... அடக்கு முறையின் குறியீடுதான் இந்த ஒன்றிய அரசு திணித்திருக்கின்ற நீட் தேர்வு. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட கிராமத்தைச் சேர்ந்த ஏழை மாணவர்கள் யாரும் இனிமேல் டாக்டர் ஆக வேண்டும் என்று நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது என்ற கொடூர மனம் கொண்டவர்கள்.

`எங்கே, நீ நல்லா படிச்சு மார்க் எடுத்துட்டு வா, உன்ன நான் டாக்டர் ஆக்குகிறேன், இன்ஜினியர் ஆக்குகிறேன், நீ என்ன ஆகணுமோ நீ ஆகு. நீ என்ன படிக்கணுமோ நீ படி, அப்படி என்று சொல்லி நுழை வுத்தேர்வை ரத்து செய்த நம்முடைய முத்தமி ழறிஞர் டாக்டர் கலைஞர் எங்கே?

### ஒவ்வொரு மரணத்தையும் கொச்சைப்படுத்தும் ஆளுநர்

இப்படியான எண்ணங்கள் தான் என்னை நீட் தேர்வுக்கு எதிராக இயங்க வைத்தது. ஒவ்வொரு தற்கொலையின் போதும், உயிரிழப்பின் போதும் அனிதாவினுடைய அண்ணனாக அத்தனை குடும்பத்தினருக்கும் போய் நின்னேன். அந்தக் குடும்பத்தில் ஒருவனாகப் போய் நின்னோம். அதைத் தாண்டி இப்போ வந்து ஆளுநர் அவர்கள் நாம் வந்து தற்கொலைக்குத் தூண்டினோம் என்று ஒவ்வொரு மரணத்தையும் அவர் கொச்சைப்படுத்துகிறார்.

நம்ம வீட்டில் ஒரு மரணம் நம்ம வீட்டில் ஒரு துக்கம் என்றால், நாம் தானே போய் நிற்க வேண்டும். பீகாரில் இருந்தோ, குஜராத்திலிருந்தோ வந்து விசாரிப்பார்கள் என்று காத்திருக்கவா முடியும்? கிட்டத்தட்ட பல பேருடைய வீடுகளுக்கும், நாம் மட்டுமல்ல, நான், நம்முடைய மாணவர் அணி செயலாளர் எழிலரசன் கோவிட் லாக்டவுன் காலத்தில் கூடப் போய் நின்னுக்கிட்டு இருந்தோம்.

என்னுடன் பல அமைப்பாளர்கள், அத்தனை அணிகளின் நிர்வாகிகள், அனைவரும் அந்தத் தம்பிகளுடைய, தங்கைகளினுடைய வீடுகளுக்குப் போய் ஆறுதல் சொன்னோம். ஒவ்வொரு வீட்டிலும் அந்த அப்பா அம்மா வந்து என்னுடைய கையைப் புடிச்சிக்கிட்டு, `தம்பி என் புள்ளையோட இது போகட்டும் எப்படியாவது இந்த நீட்டை ஒழித்து விடுங்கள்', என்று ஒவ்வொருத்தரும் கதறி அழுதது இன்னும் என்னுடைய கண்களில் நிற்கிறது.

அரியலூரில் நான் வருவதற்கு முன்னாடி, ஒரு தம்பியினுடைய உடலைத் தூக்கிட்டு ஓடினார்கள். அந்தக் காட்சியெல்லாம் இன்னும் என்னுடைய மனசுல அப்படியே இருக்கின்றன. எய்ம்ஸ் மருத்துவமனை மதுரைக்குதான் வேண்டுமென்று வாங்கிட்டு போய் அந்த இடத்தை இன்னும் வெட்டவெளியாக வைத்துக் கொண்டிருக்கிற ஆர்.பி.உதயகுமார் அவர்கள் நான் வர்றேன் என்று சொன்னவுடன், நான் வருவதற்குள் ஒரு தங்கையின் உடலைத் தூக்கிட்டுப் போய், நாம் பார்க்க முடியாமல் செய்த அந்த நிகழ்வெல்லாம் உங்களுக்கு நினைவில் இருக்கும் என்று நினைக்கிறேன்.

இப்படி நீட் தேர்வால் உயிரிழந்த பிள்ளைகளின் பெற்றோர்கள், உறவினர்கள் கதறி அழுத அந்தக் காட்சிகள் தான் நீட் தேர்வுக்கு எதிராக நம் அத்தனை பேரையும் இயக்க வைத்தது. இன்னும் இயங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கண்டிப்பாக ஒழிப்போம் என்று அந்தப் பெற்றோர்களிடம் வாக்குறுதி கொடுத்தோம். அதை நான் வந்து ஒத்துக்கொள்றதுல எனக்கு எந்த விதமான சங்கடமும் இல்லை. பிரச்சினையும் கிடையாது. ஏனென்றால், மனிதாபிமான வழியில் மக்களுக்கான சமூக நீதி அரசியல் செய்கின்றோம். ஆனால் நம்முடைய எதிராளிகள் மக்கள் செத்து அதன் மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் கெட்ட பெயர் வருவதைப் பற்றிக் கூட அவர்களுக்குக் கவலைப்படுவதில்லை. தி.மு.கவிற்குக் கெட்ட பெயர் வர வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

> **எதிர்க்கட்சிவாக இருக்கும் போது பேசினேன், பாராளுமன்ற தேர்தலில் பேசினேன், சட்டமன்ற தேர்தல் பிரச்சா ரத்தின் போதும் பேசினேன், அமைச்சர் ஆன பிறகும் பேசிட்டு இருக்கிறேன். கண்டிப்பாக நீட் தேர்வு ஒழியும் வரை உங்களுடைய ஒத்துழைப்பாடு கண்டிப்பாகப் பேசுவேன்.**

மிருகத்தனமான அரசியல்வாதிகள். இது நம்ம ஊரு நம்ம மக்கள் வரிப்பணத்தில் கட்டின மெடிக்கல் காலேஜ் இதிலே நம்ம பிள்ளைங்க படிக்காமல், வேறு யாரு வந்து படிப்பார்கள். படிக்க விடமாட்டேன், சாகடிப்பேன் என்கிறார்கள். அப்படியே படிச்சாலும் கோச்சிங் சென்டர் என்று வைத்துக் கார்ப்பரேட் கம்பெனிகளுக்குக் கோடி கோடியாகக் கட்டுங்க என்று வசூல் பண்ணுகிறார்கள்.

### நீட் – இல்லாத மருத்துவக் கல்வி நிச்சயம் கிடைக்கும்!

அனிதா இறந்த நாளிலிருந்து நீட் தேர்வுக்கு எதிராகப் பேசிட்டு இருக்கிறோம். ஏனென்றால், நமக்கு அந்த நம்பிக்கை இருக்கு. தலைவருக்கு அந்த நம்பிக்கை இருக்கு. நீட் இல்லாத மருத்துவக் கல்வி நிச்சயம் ஒரு நாள் இங்கு கிடைக்கும் என்று அந்த நம்பிக்கை இங்கு இருக்கிறது.

எதிர்க்கட்சிவாக இருக்கும் போது பேசினேன், பாராளுமன்ற தேர்தலில் பேசினேன், சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போதும் பேசினேன், அமைச்சர் ஆன பிறகும் பேசிட்டு இருக்கிறேன். கண்டிப்பாக நீட் தேர்வு ஒழியும் வரை உங்களுடைய ஒத்துழைப்பாடு கண்டிப்பாகப் பேசுவேன்.

இந்த இரண்டரை ஆண்டுகளில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், கழகத் தலைவர் அவர்கள் நீட் தேர்வை எதிர்த்து, நீட் தேர்வை ஒழிக்க வேண்டும் என்று எவ்வளவு விஷயங்கள் பண்ணியிருக்கிறார். அ.தி.மு.கவைப் பற்றி எல்லாம் நாம் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால், நாம் உணர்வுப்பூர்வமாக இந்த விஷயத்தில் ஈடுபட்டு இருக்கிறோம்.

ஓய்வுபெற்ற நீதி அரசர் திரு.ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் கமிட்டி, பிரதமர் மற்றும் ஆளுநருக்குக் கடிதங்கள், சட்ட முன்முடிவு பல முதலமைச்சர்களுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்.

அவருடைய முயற்சியை நினைத்தாலே நிச்சயம் நீட் ஒழியும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஆர்ப்பாட்டம் போராட்டம், மறியல், கைது என நிறைய ஈடுபட்டு இருக்கிறோம்.

இன்று நாம் ஆளுங்கட்சியாக இருக்கிறோம். இது போன்ற அடையாளங்கள் நம்முடைய மக்களுடைய மனநிலையை, ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு நிச்சயம் உணர்த்துகின்ற விஷயம். அதற்கு இந்த உண்ணாவிரத அறப்போராட்டம் வெற்றி பெற வேண்டியது மிக மிக அவசியம்.

### உண்ணாவிரத அறப்போராட்ட விவரம் முரசொலியில் வரும்!

திட்டமிட்டபடி எல்லா மாவட்டத் தலைவர்களும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலங்களிலும், இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற வேண்டியது அவசியம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த இடங்களில் உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெறுகிறது என்பதும் அந்தப் பணிகளை ஒருங்கிணைக்க மூன்று அணிகளிலிருந்து எந்தெந்த துணைச் செயலாளர் அனுப்பி வைக்கப்படுகிறார் என்பதும் நாளை அல்லது மறுநாளோ முரசொலியில் முன்னறிவிப்பாக வரும். அதன் மூலம் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

முதலில் நாம் செய்ய வேண்டியது இந்த உண்ணாவிரத அறப்போராட்டம் குறித்து அனைத்து பொது மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். ஏனென்றால், இதில் பொதுமக்களே வந்து கலந்துக்குவாங்க என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அதேபோலப் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் சமூகச் செயல்பாட்டாளர்கள் அனைவரையும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு நீங்கள் அழைக்க வேண்டும். யாரையும் வற்புறுத்த வேண்டாம்.

இப்படி ஒரு போராட்டம் நடக்கிறது என்று அவர்களே வந்து உணர்வுப்பூர்வமாகக் கலந்து கொள்வார்கள் என்று என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இரட்டை இஞ்சின் வேகத்தில் மக்களுக்கு எதிரான வேலைகளைச் செய்யும் ஒன்றிய அரசு, ஆளுநர் கூட்டணியைப் பற்றி, மக்களுக்கு அவர்கள் செய்திருக்கக் கூடிய அநியாயத்தைப் பற்றிப் பேசக்கூடிய கல்வியாளர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள் பற்றிய தகவல்களைப் பெற்று, அவர்களை அந்த உண்ணாவிரத அறப்போராட்ட மேடையில் பேச வைக்கலாம்.

உண்ணாவிரத்தில் கலந்து கொள்ள முடியவில்லை என்றால், அதற்குத் தகுந்த மாதிரி நேரம் கொடுத்து, அவர்களை அழைத்துக் கொள்ளுங்கள்.

நீட் தேர்வினால் தங்களின் உயிரை மாய்த்துக்கொண்ட மாணவ மாணவிகளுடைய பெற்றோர்கள், அவர்களுடைய நண்பர்கள், ஆசிரியர்களையும் அழைக்கலாம்.

நம் இயக்கத்துடன் கொள்கை உறவு கொண்ட தோழமைக் கட்சியின் மாவட்ட தலைவர்களையும், இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கலாம்.

### கட்டுக் கோப்புடன் பங்கேற்க வேண்டும்!

நம் மாநிலத்திற்கு பாரதிய ஜனதா கட்சி எதிரி என்றால், அ.தி.மு.க துரோகி என்பதை நீட் தேர்வு உதாரணங்கள் மூலம் அம்பலபடுத்த வேண்டும். இது அனைத்தையும் நாம் மிக கண்ணியமாகச் செய்ய வேண்டும்.

இந்த உண்ணாவிரத அறப்போராட்டம் நிச்சயம் வெற்றிதான் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால், அவதூறு பரப்புவதற்காகவே,ஓவர் டைம் வேலை பார்க்கும் சிலர், இந்த அறப்போராட்டம் பற்றியும் நிச்சயம் அவதூறு பரப்ப நினைப்பார்கள்.

அதற்கு நாம் கொஞ்சம்கூட இடம் கொடுத்துவிடக்கூடாது. காலை 9 மணிக்கு தொடங்கும் உண்ணாவிரத்திற்கு வந்து அமர்ந்தால், மாலை 5 மணி வரை அதே இடத்தில் அமர்ந்திருக்க வேண்டும். ஏதாவது அத்தியாவசிய காரணங்கள் தவிர மற்றபடி தேவையின்றி நிற்பது, சுற்றுவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

கட்டுக்கோப்புதான் நம் கழகத்தை வெல்ல வைத்து இருக்கிறது என்பதை மனதில் கொண்டு இந்த அறப்போராட்டத்தில் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும், அனைவரையும் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

வருவாய் மாவட்டத்திற்கு ஒரு இடத்தில் மட்டும்தான் உண்ணாவிரத அறப்போராட்டம் நடத்தப்படும். ஒரு பொதுவான நல்ல காரியத்திற்காக இந்த அறப்போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். அங்கு போய் கட்சிக்குள் இருக்கக்கூடிய பிரச்சினைகள், கோஷ்டி சண்டைகள், தனிப்பட்ட விரோதங்களை வெளிப்படுத்தக் கூடாது.

ஒற்றுமையாக இருந்து அறப்போராட்டத்தை நாம் வெல்ல செய்ய வேண்டும். நாம் ஒன்று ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். கலைஞருடைய நூற்றாண்டில் இருக்கின்றோம். அந்த கலைஞர்தான் நுழைவுத்தேர்வை ரத்து செய்து கவுன்சிலிங்கில் ஏழை எளிய மாணவிகள், மாணவர்கள் டாக்டர் ஆவதற்கு உத்தரவு போட்டார்.

அவருடைய நூற்றாண்டு முடிவடையும் பொழுது நிச்சயம் நம்முடைய `இந்தியா கூட்டணி' வென்றிருக்கும். நம்முடைய சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் பலமுறை சொல்லி இருக்கிறார். கண்டிப்பாக எந்தெந்த மாநிலம் நீட்டில் இருந்து விலக்கு கேட்கிறார்களோ, அவர்களுக்கு அந்தக் கல்வி உரிமை கொடுக்கப்படும் என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்.

எனவே, ஒன்றிய பாஜக அரசு தகர்த்தப்பட்டு நம் இந்தியா கூட்டணி ஆட்சி அமையும்போது கண்டிப்பாக நீட் தேர்வு ரத்துச் செய்யப்படும்.

அதே போல் நம்முடைய இளைஞர் அணிக்குப் புதிய நிர்வாகிகள் அறிவித்த பிறகு கலைஞருடைய நூற்றாண்டைக்கொண்டாட, தலைவர் அவர்கள் பல்வேறு வேலைகள் கொடுத்து இருக்கிறார்கள்.

அந்த நிகழ்ச்சிகள் குறித்தெல்லாம் தொடர்ந்து நாம் ஆலோசனை செய்வோம். அதேபோல் நம்முடைய இளைஞர் அணி மாநில மாநாடு, டிசம்பர் மாதம் நடக்கப் போகிறது. அதற்கான முதற்கட்ட வேலைகளும் நடந்து கொண்டிருக்கிறது. இளைஞர் அணிக்கு மட்டும் சொல்லவில்லை. மருத்துவ அணிக்கும் முழுமையாக நிர்வாகிகளை நியமித்து இருக்கிறீர்கள். மாணவர் அணிக்கும் புதிதாக நிர்வாகிகள். நியமிக்கப்பட்டிருக்கி றார்கள்.

### மூன்று அணிகளுக்கும் முதல் களம் உண்ணாவிரதம்!

நமது மூன்று அணிகளுக்கும் கிடைத்திருக்கின்ற முதல் களம்... முதல் போராட்டம்... இந்த நீட் ரத்து உண்ணாவிரத அறப் போராட்டம்.

அனிதாவில் ஆரம்பித்து ஜெகதீஸ்வரன் வரை 23 உயிர்களை பறிகொடுத்திருக்கிறோம். இப்போது மாணவர்கள் மட்டுமல்லாமல் அவர்களின் பெற்றோர்களையும் நாம் பறிகொடுக்க ஆரம்பித்துள்ளோம்.

நீங்க வந்தவுடன் முதல் கையெழுத்து என்று சொன்னீர்களே என்று எல்லாம் சொல்வார்கள். ஆனால், அதைப் பற்றி எல்லாம் நீங்கள் கவலைப்படாதீர்கள் ஏனென்றால், நாம் அரசியலுக்காக இதை நாம் பண்ணவில்லை. மாணவர்களுக்காக, கல்வி உரிமைக்காக, உணர்வுப்பூர்வமாக இந்தப் போராட்டத்தில் ஈடுபடப் போகிறோம். அதை முதலில் நீங்கள் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

இங்குப் பேசிய சிலர் இந்தப் போராட்டத்தை இதோட விட்டு விடக் கூடாது அதை அடுத்த கட்டத்துக்கு எடுத்துப் போக வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள்.

உங்களுடைய ஆலோசனைகளைக் கூறி இருக்கிறீர்கள். கண்டிப்பாக இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு, தலைவர் அவர்களிடத்திலே மீண்டும் மூன்று அணியும் சேர்ந்து போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு எப்படி எடுத்துச் செல்வது என்கின்ற ஆலோசனையையும் நாம் செய்வோம்.

அதை நோக்கி நாம் அனைவரும் பயணிப்போம்.

நீட் தேர்வுக்கு எதிரான இந்த உண்ணாவிரத அறப்போராட்டம் வெல்லட்டும் வெல்லட்டும் என்று கூறி உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கண்டிப்பாக எந்நெந்த மாவட்டங்களில் எத்ததைப் பேர் கலந்து கொண்டீர்கள், அந்தப் புகைப்படங்கள் அத்தனையையும் நான் உண்ணாவிரதப் போராட்டம் முடிந்தவுடன் ஆய்வு செய்வேன் என்பதையும் தெரிவித்து வாய்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

**இவ்வாறு கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.**

முன்னதாக மாணவர் அணி இணைச்செயலாளர் எஸ்.மோகன் வரவேற்றுப் பேசினார். மாணவர் அணி செயலாளர் எழிலரசன் எம்,எல்.ஏ, மருத்துவ அணி செயலாளர் எழிலன் எம்.எல்.ஏ. மருத்துவ அணி தலைவர் கனிமொழி என்.வி.என்..சோமு எம்.பி, இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, ஆகியோர் உரையாற்றினர்.




கன்னிவாடி பேரூராட்சிக்கு உட்பட்ட நவாப்பட்டியில் பகுதிநேர நியாயவிலைக் கடையை திறந்து பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் பூங்கொடி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி உட்பட தி.மு.க.நிர்வாகிகள் உள்ளனர்.

## சென்னையில் கனமழை!

சென்னை, ஆக. 18-

வளிமண்டல கீழடுக்கு சுழற்சியால் தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் லேசான முதல் மிதமான கனமழை பெய்து வருகிறது. இதற்கிடையே, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்திருந்தது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய 9 மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.



வடசென்னை புத்தகத் திருவிழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் கட்டுரை ஓவியம் மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பரிசுகள் வழங்கினார். உடன் தமிழ்நாடு அரசு சிறுபான்மை நல வாரியத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜெ.எபினேசர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கழக வர்த்தக அணி இணை செயலாளர் பி.டி.பாண்டி செல்வம் ஆகியோர் உள்ளனர்.

### ஸ்டெதாஸ்கோப் தொங்க வேண்டிய கழுத்தில் தூக்குக் கயிறு!

# கயிற்றை இறுக்கும் பா.ஜ.க.வும் - ஆளுநர் ரவியும்!

### ‘தீக்கதிர்’ தலையங்கம் கண்டனம்!

சென்னை, ஆக. 18-

‘நீட்’ விவகாரத்தில் நடவடிக்கை எடுக்காமல் ஸ்டெதஸ்கோப் தொங்க வேண்டிய மாணவர்கள் கழுத்தில் தூக்குக் கயிறுகளால் இறுக்குகிறது பா.ஜ.க.வும், ஆளுநர் ரவியும் என குற்றம்சாட்டி ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம் எழுதி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளது. மேலும் இதுபோன்ற தற்கொலைகள் தடுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.

அது வருமாறு:-

மருத்துவக் கல்வி பயில விரும்பும் ஏழை மாணவர்களுக்கு நீட் எனும் தேர்வு தாண்ட முடியாத தடையாகி அதுவே வாழ்வின் இறுதியாகவும் அமைந்து விடுகிறது. ஒன்றிய அரசின் பிரதிநிதியாக சனாதனத்தின் பிரச்சாரகராக தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி நீட் தேர்வு விலக்க மசோதாவுக்கு கையெழுத்திட மறுத்து மாணவத் தளிர்களின் மருத்துவக் கனவை மட்டுமல்ல, வாழ்க்கையின் இலக்கையும் கருக வைத்துக் கொண்டிருக்கிறார்.



தீக்கதிர்

2023 ஆகஸ்ட் 17 வியாழக்கிழமை

கழுத்தை இறுக்கும் நீட் எனும் கயிறு

மருத்துவக் கல்வி பயில விரும்பும் ஏழை மாணவர்களுக்கு நீட் எனும் தேர்வு தாண்ட முடியாத தடையாகி அதுவே வாழ்வின் இறுதியாகவும் அமைந்து விடுகிறது. ஒன்றிய அரசின் பிரதிநிதியாக சனாதனத்தின் பிரச்சாரகராக தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி நீட் தேர்வு விலக்க மசோதாவுக்கு கையெழுத்திட மறுத்து மாணவத் தளிர்களின் மருத்துவக் கனவை மட்டுமல்ல, வாழ்க்கையின் இலக்கையும் கருக வைத்துக் கொண்டிருக்கிறார்.

மேல்நிலைக்கல்வியில் மிகக்குறைந்த மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் கூட பயிற்சி மையங்களில் லட்சக்கணக்கான ரூபாய்

மேல்நிலைக்கல்வியில் மிகக்குறைந்த மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் கூட பயிற்சி மையங்களில் லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து 2,3 ஆண்டுகள் படித்து அதிலும் கூட முறைகேடுகள் செய்து தேர்ச்சி பெற்று அதிக மதிப்பெண்கள் ‘வாங்கி’ மருத்துவக் கல்வியில் சேர்ந்து விடுகின்றனர்.

அவ்வாறு பணத்தைக் கொட்டி செலவழித்து படிக்க முடியாதவர்கள் நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றாலும் கூட, அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்காததால் மருத்துவப் படிப்பில் சேர முடியாமல் போகிறது. அதைத்தான் சென்னை குரோம்பேட்டை மாணவர் ஜெகதீஸ்வரன், அவரது தந்தை ஆகியோரின் தற்கொலைகள் உணர்த்துகின்றன.

அவர்களிடம் பணமும் பொருளாதார வாய்ப்பும் இருந்திருந்தால் தனியார் கல்லூரிகளில் ஏதாவது ஒன்றில் சேரும் முடிவை எடுத்திருப்பார்கள். வசதியில்லாத காரணத்தாலேயே இந்த இரு உயிர்கள் பலியாகிவிட்டன.

அதே நாளில் ஆளுநர் மாளிகையில் நடந்த நிகழ்வில் நீட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவியின் தந்தை அம்மாசியப்பன், மற்ற ஏழை எளியவர்களின் குரலாக நீட்தேர்வு விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் தர வேண்டும் என கோரிக்கை வைத்த போது, ஆணவத்துடன் ஆளுநர் ஆர்.என்.ரவி கையெழுத்திட மாட்டேன் என்று பதிலளித்ததுதான் இந்த இரு உயிர்களைப் பறித்துவிட்டது.

ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் பயிற்சி பெற்ற மாணவர்கள் 20 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் நீட் விலக்கு மசோதா இரு முறை சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்பட்டும் அதற்கு ஒப்புதல் அளிக்காதது தான் தற்போது இரு உயிர்களைப் பறித்தது. அதனால் தான் முதல்வர் ஸ்டாலின் குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதி ஒப்புதல் தரக் கோரியிருக்கிறார்.

ஸ்டெதஸ்கோப் தொங்க வேண்டிய கழுத்தை தூக்குக் கயிறுகள் இறுக்கும் நிலையை இனி அனுமதிக்கக் கூடாது. அதற்கு ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி அகற்றப்பட வேண்டும். அப்போது தான் இத்தகைய உயிர்ப்பலிகள் நிகழாதிருக்கும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் பா.ஜ.க.வையும், ஆளுநர் ரவியையும் குற்றம் சாட்டியுள்ளது.

### மும்பையில் ‘ஜெய் ஸ்ரீராம்’ என கூச்சலிட்டபடி

# முஸ்லிம் இளைஞர் மீது தாக்குதல்!

மும்பை, ஆக. 18-

இந்து பெண்ணுடன் நடந்து சென்ற இஸ்லாமிய இளைஞரை, ‘ஜெய் ஸ்ரீராம்’ என்று கூறியபடியே, ஒரு கும்பல் கொடூரமாக தாக்கும் வீடியோ சமூகவலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மும்பை பாந்த்ரா ரயில் நிலையத்தில் சிவப்பு நிற டீசர்ட் அணிந்த இளைஞர் ஒருவர் வந்துகொண்டு இருந்துள்ளார். அப்போது அவரை சுமார் 30 பேர் கொண்ட ஒரு கும்பல் சுற்றி வளைத்து, இஸ்லாமியரான அந்த இளைஞர் இந்து பெண் ஒருவருடன் வந்ததாக கூறி அவர் மீது தாக்குதல் நடத்தி இருக்கிறது.

இளைஞரின் தலைமுடியை பிடித்து சிலர் இழுத்து செல்ல மற்றவர்கள் குடை உள்ளிட்டவற்றை கொண்டு அவரைத் தாக்குகிறார்கள். வலியில் அந்த இளைஞர் கதறி துடிக்கிறார். அவருடன் வந்த பெண், அந்த இளைஞரை விட்டு விடு மாறு மன்றாடுவது கேட்கிறது. ஆனாலும், விடாமல் அந்த இளைஞரைத் தாக்கி வீடியோ எடுத்தது மட்டுமின்றி ஜெய்ஸ்ரீராம் என்றும் கூச்சல்களை எழுப்பியுள்ளது.

அந்த இளைஞரை ரயில் நிலையத்துக்கு வெளியே இழுத்து சென்றும் அந்த கும்பல் கொடூரமாக தாக்குதல் நடத்தியுள்ளது. ரயில் நிலையத்தில் இருந்த மற்ற பயணிகள் இந்த கொடூரத்தை வேடிக்கை பார்த்தார்களே தவிர யாரும் தடுக்க முன்வரவில்லை.

ரயில்வே பாதுகாப்பு போலீசாரும் ஒருவரும் அங்கே இல்லை. தங்களின் தாக்குதல் சம்பவம் குறித்து, வீடியோவில் பேசி இருக்கும் வெறிக்கும்பலைச் சேர்ந்த ஒருவர், “உடன் வந்த இந்து பெண்ணுக்கு வெறும் 16 வயதே ஆகிறது. பாந்த்ரா ரயில் நிலையத்தில் ஒரு மைனர் பெண்ணை காப்பாற்றி இருக்கிறோம்.” என்று கூறியுள்ளார்.

அனைத்து இந்தியர்களும் என் சகோதர, சகோதரிகள் என்று நாடே உறுதிமொழி எடுத்துக்கொண்டிருந்த சுதந்திரத் தினத்தன்று, ‘ஜெய் ஸ்ரீராம்’ என கூச்சலிட்டபடி, ஒரு கும்பல், முஸ்லிம் இளைஞரைத் தாக்கும் இந்த வீடியோவை ‘ப்ரீ பிரஸ் ஜேர்னல்’ ஊடகம் வெளியிட்டு உள்ளது.

உண்மையில் இந்த சம்பவம் ஜூலை 21 அல்லது 22 தேதிகளில் நடந்ததாக கூறப்படுகிறது. எனினும், பாந்த்ரா நகர் ரயில்நிலையத்தை உள்ளடக்கிய நிர்மல் நகர் காவல்நிலைய போலீசார் வழக்கோ, விசாரணையோ, கைது நடவடிக்கையோ எதுவும் மேற்கொள்ளவில்லை என்று அசாதுதீன் ஒவைசியின் மஜ்லிஸ் கட்சியைச் சேர்ந்த வாரிஸ் பதான் கூறியுள்ளார். தனது கண்டனத்தையும் அவர் தெரிவித்துள்ளார்.

### கழக விவசாய அணி மாநில துணைச் செயலாளர்

# டி.எம்.அரியப்பன் புதல்வர் மணவிழா!

### முதல்வர் இல்லத்தில் நடைபெறுகிறது!

சென்னை, ஆக.18 -

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியம் இராயக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த கழக விவசாய அணி மாநில துணைச் செயலாளர் டி.எம்.அரியப்பன், - சாந்தி அரியப்பன் புதல்வர் அ.அன்பானந்தம், தொட்டபூவந்தி ஊராட்சியைச் சேர்ந்த நினைவில் வாழும் ஜி.வெங்கடசாமி - ஜானகி ஆகியோரது புதல்வி வெ.சொர்ணப்பிரியா ஆகியோரது திருமணம் 20.8.2023 ஞாயிறு காலை 7.45 மணி அளவில் கழகத் தலைவர் இல்லத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் விளை யாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்கிறார்.

கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் முன்னிலை வகிக்கிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, க.பொன்முடி, நாடாளுமன்ற கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அ.இராசா எம்.பி.,, அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், ஆர்.எஸ். பாரதி, அன்பகம் கலை, ப.தாயகம்கவி, எஸ்.ஆஸ்டின், டி.கே.எஸ்.இளங்கோவன், பூச்சி முருகன், துறைமுகம் காஜா, ஆர்.பத்மநாபன், என்.ஜெயக்குமார், கு.க.செல்வம், என்.ஆர். இளங்கோ எம்.பி., கார்த்திக் மோகன், ஆர்.கிரிராஜன் எம்.பி., ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர்.காந்தி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சு.முத்துசாமி, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ்பொய்யாமொழி, மு.பெ.சாமிநாதன், எஸ்.எஸ்.சிவசங்கர், கீதா ஜீவன், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தா.மோ.அன்பரசன், கே.ஆர்.பெரியகருப்பன், டி.ஆர்.பி,. ராஜா, செஞ்சி மஸ்தான், அரசுகொறடா கோவி.செழியன், பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி,

மாவட்டச் செயலாளர்கள் டி.மதியழகன், மயிலை த.வேலு, தடங்கம் சுப்பிரமணி, நே.சிற்றரசு, பி.பழனியப்பன், ஏ.பி.நந்தகுமார், காங்கிரஸ் எம்.பி.ஏ. செல்லக்குமார், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., டி.செங்குட்டுவன், இ.ஜி.சுகவனம், எம்.வி.வெற்றிச்செல்வன், மேயர் எஸ்.ஏ.சத்யா, ஆ. யுவராஜ், பி.எஸ்.சீனிவாசன், பி.முருகன், பி.விஜயகுமார், தா.சுகுமாரன், டேம் வெங்கடேசன், டி.சந்திரசேகர், சூடப்பட்டி சுப்பிரமணி, பி.டி.அன்பரசன், பி.எம்.முனிராஜ், எம்.பொன்னுசாமி, வெங்கடேசன், ஏ.பி.ரவி, ஏ.வேதவள்ளி, ஆர்.ஜெயபாலன் உள்ளிட்ட கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் வாழ்த்துகின்றனர்.

அறிவானந்தம் அரியப்பன் நன்றி கூறுகிறார்.

### சென்னை தென்மேற்கு மாவட்ட

# கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவைக் கூட்டம்!

### ச.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, ஆக.18-

தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் முதல்வர் ஆணைக்கிணங்க, மாவட்டக்கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., அறிவுறுத்தலின்படியும், பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பின்படியும் தியாகராயநகர் கிழக்கு மற்றும் மேற்கு பகுதி கழக செயலாளர்கள் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏமுமலை, ஆகியோரின் ஆலோசனைப்படியும், நமது பேரவையின் நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் இன்று (18.8.2023) மாலை 6 மணி அளவில், தியாகராயர் நகர் மேட்லி சாலை, மனமகிழ்மன்றத்தில், பேரவையின் மாவட்டத்தலைவர் இரா.கா.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது. அதுபோது, மாவட்டத் துணைத்தலை வர் மற்றும் மாவட்டத்துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை யொட்டி தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாவட்ட அமைப்பாளர்கள் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் (திருச்சி, குறித்தும், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், “ஓய்வறியாச் சூரியனின் ஒல்காப்புகழ் கவிதைத் தொகுப்பு” நூல் வெளியீடு (மயிலாப்பூர், 19.08.2023) குறித்தும், மாணவ, மாணவிகள் மற்றும் குடும்பத்தினரை பலிகடா ஆக்கும் நீட் தேர்வு விலக்கு குறித்து ஆளுநரின் பாசிசப் போக்கைக் கண்டித்து 20.08.2023 அன்று கழக இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நடைபெறவுள்ள உண்ணாநிலை அறப்போரில் கலந்துகொள்வது குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ்

# இதுவரை 1.54 கோடி விண்ணப்பங்கள்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக.18

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 24.7.2023 அன்று தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைக்கப்பட்டு விண்ணப்பப் பதிவு முகாம்கள் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளது.

முதற்கட்ட முகாம்கள் ஜூலை 24 தேதி முதல் ஆகஸ்ட் 04 தேதி வரை நடைபெற்றது. இரண்டாம் கட்ட முகாம்கள் ஆகஸ்ட் 05 தேதி முதல் 14 தேதி வரை நடைபெற்றது. இதுவரை 1.54 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டு கைபேசி செயலி வழியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் அவர்கள் வருவாய்த் துறையின் கீழ் மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் பெறும் மாற்றுத்திறனாளிகள் தவிர, அக்குடும்பத்தில் உள்ள தகுதிவாய்ந்த பெண்கள் மற்றும் இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசிய திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியம் ஆகிய திட்டங்களில் முதியோர் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களில் உள்ள ஓய்வூதியதாரர் அல்லாத தகுதி வாய்ந்த பெண்களும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்துள்ளார்கள்.

இவ்வாறு விதிவிலக்கு அளிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள தகுதிவாய்ந்த மகளிர் மற்றும் ஏற்கனவே முகாம்களில் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் வருகை புரிய இயலாத குடும்பத் தலைவிகள் விண்ணப்பங்கள் பதிவு செய்ய, ஆகஸ்ட் 18, 19 மற்றும் 20 ஆகிய மூன்று நாட்கள் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் எனவும் மீண்டும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களில் அளிக்கப்பட்ட தகவல்களை தேவையேற்படின் சரிபார்க்க களஆய்வு மேற்கொள்ளப்படும். அப்போது விண்ணப்பதாரர்கள் களஆய்விற்கு வரும் அலுவலர்களுக்கு உரிய தகவல்களை அளித்து தகுந்த ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இன்று, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, விண்ணப்பங்கள் பெறுதல், களஆய்வு மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக்கூட்டத்தை தலைமைச் செயலகத்தில் நடத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் – பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (18-08-2023 வெள்ளிக்கிழமைஸ்ர) மதியம் 12.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி. மகாலில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி மாவட்ட,பகுதி, வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து அவர்களின் உயிரைப் பறிக்கின்ற நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசையும், அத்தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கான தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் ஆளுநரையும் கண்டித்து ஆகஸ்ட் 20 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் தொடர்பாக..

அமைச்சர் **பி.கே.சேகர்பாபு**

செயலாளர் – சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில்

# ‘நீட்’ தேர்வுக்கு பயிற்சி பெற்ற 22 மாணவர்கள் தற்கொலை!

கோட்டாநகர், ஆக. 18-

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில், நீட், ஐ.ஐ.டி. நுழைவுத்தேர்வு பயிற்சி பெற்று வந்த 22 மாணவர்கள் கடந்த ஓராண்டில் தற்கொலை செய்து கொண்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஐ.ஐ.டி., என்.ஐ.டி. உள்ளிட்ட ஒன்றிய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் பொறியியல் படிப்புகளில் சேர ஜே.இ.இ. நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது.

இதேபோல், மருத்துக் கல்வி பயில்வதற்கு நாடு முழுவதும் நீட் தேவை ஒன்றிய அரசு நடத்தி வருகிறது. இத்தேர்வுகள் மூலம் ஆதாயம் பெறும் நோக்கில் நாடு முழுவதும் பல தனியார் நிறு வன ங்கள் பயிற்சி மையங்களை நடத்தி வருகின்றன. இதற்காக லட்சக்கணக்கான ரூபாய் கட்டணமாக வசூலிக்கப் படுகிறது. ராஜஸ்தானில் உள்ள கோடா நகர் இப்பயிற்சி மையங்களின் மையமாக விளங்கி வருகிறது.

இந்நிலையில், கோட்டா நகரில், ஐ.ஐ.டி. நுழைவுத்தேர்வு பயிற்சி பெற்று வந்த பீகாரைச் சேர்ந்த பால்மிகி ஜாங்கிட் என்ற 18 வயது மாணவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதேபோல், கோட்டா நகரில் தங்கி ஐ.ஐ.டி. நுழைவுத்தேர்வுக்கு தயாராகி வந்த பீகாரின் சம்பரன் மாவட்டத்தைச் சேர்ந்த மிஸ்ரா என்ற மாணவரும், நீட் தேர்வுக்கு தயாராகி வந்த உத்தரப்பிரதேசத்தின் ராம்பூர் நகரைச் சேர்ந்த மஞ்சோத் சாப்ரா என்ற மாணவரும் 10 நாட்களுக்கு முன் தற்கொலை செய்து கொண்டனர். நீட், JEEE போன்ற நுழை வுத் தேர்வு பயிற்சி நிறு வனங்களின் தலைநகராக அறியப்படும் கோட்டா நகரில், நடப்பாண்டில் மட்டும் 22 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளது தற்போது அம்பலமாகி அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.




கேரள மாநில தி.மு.க. சார்பாக கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் தி.மு.கழக அலுவலகத்தில் கேரள மாநில தி.மு.க. விவசாய அணி சார்பாக விவசாய தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் கலந்து கொண்டு விவசாய அணியைச் சேர்ந்த 100க்கும் விவசாயிகளுக்கு விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது நிகழ்ச்சிக்கு கொல்லம் மாவட்ட அவைத்தலைவர் ரெஜிலால் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் கொல்லம் மாவட்டச் செயலாளர் ரெஜிராஜ், மோகன்தாஸ், மாத்யூ, ரபீக், அச்சு பிலால்,சுபலெட்சுமி, ஷாலினி,ரெனுராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறையில் கிட்டப்பா நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் தேசிய குடற்புழு நீக்க நாளினை முன்னிட்டு மாநில அளவில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குவதை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.உமாமகேஸ்வரி சங்கர் உள்ளனர்.

### டெல்லியில் உள்ள

# நேரு அருங்காட்சியகத்தின் பெயர் மாற்றம்!

## காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம்!

புதுடெல்லி, ஆக.18 - டெல்லியில் உள்ள நேரு அருங்காட்சியகத்தின் பெயர் மாற்றப்பட்டது தொடர்பாக பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்து உள்ளது. புதுடெல்லி, பெயர் மாற்றம் டெல்லி திருமூர்த்தி இல்லத்தில் உள்ள நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தை (என்.எம்.எம்.எல்), 'பிரதம மந்திரிகள் நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகம் (பி.எம்.எம்.எல்)' என மத்திய அரசு பெயர் மாற்றம் செய்து உள்ளது.

இந்த பெயர் மாற்றம் கடந்த 14ந் தேதி முதல் அமலுக்கு வந்திருப்பதாக, அருங்காட்சியகத்தின் செயற்குழு துணைத்தலைவர் 'எக்ஸ்' வலைதளத்தில் கூறியிருந்தார். மத்திய அரசின் இந்த பெயர் மாற்ற நடவடிக்கைக்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. இதன் நோக்கம், நேருவின் மரபை மறுப்பதும், அவமதிப்பதுமே என அந்தக் கட்சி சாடியுள்ளது.

**ஜெய்ராம் ரமேஷ் தாக்கு!**

இது தொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது: ஒரு சிறந்த நிறுவனம் புதிய பெயர் பெற்று இருக்கிறது. உலகப் புகழ்பெற்ற நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகம், பிரதம மந்திரிகள் நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகம் என பெயர் மாற்றப்பட்டு உள்ளது.

நமது முதல் மற்றும் நீண்ட கால பிரதமரை பார்த்து மோடிக்கு பெரும் அச்சங்கள், சிக்கலான தன்மைகள் மற்றும் பாதுகாப்பின்மைகள் உள்ளன. நேருவையும், நேருவின் மரபினையும் மறுத்தல், திரித்தல், அவதூறு செய்தல் மற்றும் அழித்தல் என்ற ஒற்றை நிகழ்ச்சி நிரலையே அவர் கொண்டிருக்கிறார்.

**சிறுபிள்ளைத்தனம்**

பிரதமர் மோடி என்.எம்.எம்.எல் உள்ள 'என்'ஐ அழித்துவிட்டு அதற்கு பதிலாக 'பி' என்று சேர்த்துள்ளார். அந்த பி என்பது உண்மையில் சிறுபிள்ளைத்தனம் மற்றும் கோபத்தின் வெளிப்பாடு ஆகும்.

ஆனால் சுதந்திர போராட்டத்தில் நேருவின் மாபெரும் பங்களிப்பையும், இந்திய அரசின் ஜனநாயக, மதசார்பற்ற, அறிவியல் மற்றும் தாராளவாத அடித்தளங்களைக் கட்டியெழுப்புவதில் அவர் செய்த மகத்தான சாதனைகளையும் மோடி மற்றும் அவரது பறை அடிப்பவர்களால் அழிக்க முடியாது என்று ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

**பெயரை நீக்குவது அற்பமானது!**

காங்கிரஸ் எம்.பி. சசிதரூர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பிற பிரதமர்களுக்கும் இடமளிக்கும் வகையில் இந்த கட்டிடத்தை விரிவுபடுத்தும் யோசனையை நானும் ஏற்கிறேன். உண்மையில், அனைத்து பிரதமர்களின் பங்களிப்புகளையும் குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் அறிந்து கொள்ள ஊக்குவிப்பது நல்லது. அதில் எனக்கு எந்த சிரமமும் இல்லை. ஆனால், இடைக்கால அரசாங்கத்தை வழிநடத்திய பிரதமர், சுதந்திரத்திற்கு பிறகு முதல் பிரதமராக இருந்தவர், இதுவரை நீண்ட காலம் பிரதமராக இருந்தவர் என்ற பெயரையும் நீக்குவது அற்பமானது. 'நேரு நினைவு பிரதம மந்திரிகள் அருங்காட்சியகம் மற்றும் நூலகம்' என்று நீங்கள் தொடர்ந்து அழைத்திருக்கலாம். வரலாறு மீதான கசப்பு இந்த அற்பத்தனம் துரதிர்ஷ்டவசமானது.

இது நமது சொந்த வரலாறு மீதே ஒரு குறிப்பிட்ட கசப்பைக் காட்டுகிறது. நல்ல பெரும்பான்மையைக் கொண்ட இந்த அரசுக்கு இது நல்லதல்ல என்று நான் நினைக்கிறேன். பெரும்பான்மையுடன் கூடிய அரசிடம் இருந்து பெருந்தன்மையையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வாறு சசிதரூர் கூறினார்.

இதைப்போல மாணிக்கம் தாகூர் எம்.பி., சுப்ரியா ஸ்ரீநாடே என காங்கிரஸ் தலைவர்கள் பலரும் மத்திய அரசை குறைகூறி வருகின்றனர்.

### ச.பரமசிவம் தலைமை! மெட்டில்டா கோவிந்தராஜ், க.கோவிந்தராஜ், சி.பி.திருமலை முன்னிலை!

# 101 (அ) வட்டக் கழக துணைச் செயலாளர் வி.பழனிவேல்ராஜன், வி.விஜய்நேரு இல்ல விழா!

### நே.சிற்றரசு, தயாநிதி மாறன், எம்.கே.மோகன், கார்த்திக் மோகன் வாழ்த்துகின்றனர்!

*சென்னை, ஆக. 18*

*சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது (அ) வட்டக் கழக துணைச் செயலாளர் வி.பழனிவேல்ராஜன் வி.விஜய் நேரு ஆகியோரின் இல்ல விழா இன்று (18.8.2023 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, கஜலட்சுமி காலனி, செனாய் நகரில் உள்ள மாநகராட்சி சமுதாய நலக்கூடத்தில் நடைபெறுகிறது.*

*அண்ணாநகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம் தலைமை வகிக்கிறார்.*

*101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இவ்விழாவில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.*

*இவ்விழாவில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.*

*நிகழ்ச்சியில் 101(அ) வது வட்ட அவைத் தலைவர் வே.ப.தங்கமணி நன்றி கூறுகிறார்.*

## சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. அணிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு.



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. அணிகளின் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் இன்று (18.08.2023) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகம் அமைந்துள்ள எண்.20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக செயலாளர்கள், மாநில மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் நா.எழிலன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் எஸ்.ஜோயல், மாநில மாணவரணி இணை செயலாளர் எஸ்.மோகன், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில செயலாளர்கள், துணை செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் (குறிப்பு: இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்ற அணிகளின் அமைப்பாளர்கள் மட்டும்) வட்டக் கழக செயலாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1) நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் தமிழக ஆளுநரைக் கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடத்துவது குறித்து 2) கழக ஆக்கப்பணிகள்

**நே.சிற்றரசு**

செயலாளர் - சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில். சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (17.08.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மீன் வளத் துறையை காத்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# மீனவர்களுக்கு அரசு மேற்கொண்டு வரும் சீரிய முயற்சிகள்!

*சென்னை, ஆக.18-*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.*

**மீனவர் நலனில் அரசு**

விவசாயத்திற்கு அடுத்தபடியாக நாட்டில் அதிக வேலை வாய்ப்பை மீன்பிடித் தொழில் அளிக்கிறது. தமிழ்நாடு நீண்ட நெடிய கடற்பகுதியைக் கொண்டிருப்பதால் , மீன்பிடித் தொழிலை நம்பி பல லட்சம் குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களின் நலனைக் காக்கப் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே மீன்பிடி தடைக்காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவித் தொகையை ரூ. 5 ஆயிரத்திலிருந்து ரூ. 6 ஆயிரமாக உயர்த்தி உத்தரவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். இதனால் முதல் கட்டமாக 1.24 லட்சம் குடும்பங்கள் பயன்பெற்றன.

2021-22-ம் நிதி ஆண்டில் 1.71 லட்சம் மீனவக் குடும்பங்களுக்கு ரூ. 85.61 கோடியும் கடந்த நிதி ஆண்டில் (2022-23) 1.78 லட்சம் மீனவக் குடும்பங்களுக்கு ரூ. 89.16 கோடியும் மீன்பிடி தடைக்கால நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் இதுவரையில் 1.55 லட்சம் குடும்பங்களுக்கு ரூ. 77.52 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தடைக்காலம் வரை செயல்பாட்டில் இருக்கும்.

மீனவர்களுக்கு மீன் பிடிப்பு குறைந்த காலத்தில் நிவாரணம் வழங்கும் திட்டம் 2021-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 2.07 லட்சம் மீனவர்களுக்கு மாநில அரசின் பங்களிப்பாக ரூ. 62.19 கோடி வழங்கப்பட்டது. கடந்த நிதி ஆண்டில் (2022-23) 2.04 லட்சம் மீனவர்களுக்கு ரூ. 61.26 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**மீனவ மகளிருக்கு நிவாரண உதவி**

கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் மாநில அரசு 2021-ம் ஆண்டில் ரூ. 61.98 கோடியை வழங்கியுள்ளது. இதன் மூலம் 2.07 மீனவ மகளிர் நிவாரண உதவி பெற்றனர். கடந்த நிதி ஆண்டில் ரூ. 61.71 கோடியை அரசு வழங்கியுள்ளது. இதன் மூலம் 2.05 லட்சம் மீனவ மகளிர் பயனடைந்துள்ளனர்.

**மானிய விலையில் டீசல், மண்ணெண்ணெய்**

மீன்படி படகுகளுக்குத் தேவையான டீசல் வாங்குவதற்கு விற்பனை வரியின்றி ஆண்டொன்றுக்கு 22 ஆயிரம் லிட்டர் டீசல் வழங்கப்படுகிறது. விசைப்படகுகளுக்கு 18 ஆயிரம் லிட்டர் டீசலும், நாட்டுப் படகுகளுக்கு 4 ஆயிரம் லிட்டர் டீசலும் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இரண்டு நிதி ஆண்டுகளில் மொத்தம் 2.06 லட்சம் கிலோ லிட்டர் டீசல் வரியின்றி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு வரி விலக்கு அளித்த தொகை ரூ. 369.01 கோடியாகும்.

நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டத்தையும் அரசு செயல்படுத்துகிறது. இதன்படி லிட்டர் ரூ. 25 விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. 2021-22 மற்றும் 2022-23- ஆகிய இரண்டு நிதி ஆண்டுகளில் மொத்தம் 33,233 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ரூ. 164.97 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**இயந்திரங்கள் வாங்க மானிய உதவி**

படகுகளுக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்கு மானிய உதவியையும் அரசு அளிக்கிறது. இயந்திரங்களின் விலையில் 40 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. 2021-22-ம் நிதி ஆண்டில் 2,591 நாட்டுப் படகுகளுக்கு ரூ. 9.60 கோடி மானியத்தை அரசு வழங்கியுள்ளது.

நாட்டுப்படகுகளுக்கு மாற்றாகக் கண்ணாடி இழைப் படகு வாங்கவும் மானியம் அளிக்கப்படுகிறது. 10 மீட்டர் நீளமுள்ள படகு வாங்க ரூ. 6.50 கோடி மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. படகு, இயந்திரம், வலைகள், பனிக்கட்டி பெட்டி ஆகியவை வாங்கவும் அரசு மானிய உதவி அளிக்கிறது.

மீன் வளத்தைப் பாதுகாக்க புதிய தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை சூரை மீன்பிடி படகு கட்டுவதற்கு 50 சதவீத மானியம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி 105 படகுகள் கட்ட ரூ. 29.35 கோடியை அரசு மானியமாக வழங்கியுள்ளது.

**கடற்பாசிப் பூங்கா**

கடற்பாசி வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் கடற்பாசிப் பூங்காவை அரசு ரூ. 127.71 கோடி மதிப்பீட்டில் உருவாக்கி வருகிறது. மேலும், மீனவ மகளிருக்கு வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கும் விதமாக ராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ மகளிர்1,311 பேருக்குக் கடற்பாசி வளர்ப்பு மிதவைகள் மற்றும் கயிறுகள் வாங்க ரூ. 1.42 கோடி மானிய உதவி அளிக்கப்பட்டுள்ளது.

மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பைப் பிரபலப்படுத்திடவும், மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கவும் திருவள்ளூர், ராமநாதாபுரம், தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த 36 மீனவர்களுக்கு மிதவைக் கூண்டு அமைக்க ரூ. 20.65 லட்சம் மானிய உதவியை அரசு அளித்துள்ளது. தற்போது திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், கன்னியாகுமரியில் ரூ. 250 லட்சம் செலவில் 50 கடல் மிதவைக் கூண்டுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**இறால் வளர்ப்பை ஊக்குவிக்க...**

இறால் வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்கில் 100 ஹெக்டேர் பரப்பில் புதிய இறால் பண்ணைகளை அமைக்க நடப்பு நிதி ஆண்டில் ரூ. 14 கோடி வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், நவீனத் தொழில்நுட்பத்தில் குறைந்த அளவு நீர் பயன்பாட்டில் இறால் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க ரூ. 4.50 கோடியை அரசு மானியமாக வழங்கியுள்ளது.

கடல் மீன் குஞ்சு பொரிப்பகம் அமைக்கவும் அரசு மானிய உதவி வழங்குகிறது. இதன்படி மயிலாடுதுறை, ராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு கடல் மீன் குஞ்சு பொரிப்பகம் அமைக்க ரூ. 30 லட்சத்தை அரசு மானியமாக வழங்கியுள்ளது.

**உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்கள்**

மீன்வளத்தைப் பெருக்கும் வகையில் அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மூலம் 67.98 கோடி நுண் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இத்துடன் 9.11 கோடி மீன் விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் கூட்டு மீன்வளர்ப்பு முறையில் பெருங்கெண்டை மீன்களுடன் நன்னீர் இறாலை வளர்க்க ரூ. 25.25 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**கட்டுமான மேம்பாடு**

அரசு மீன் பண்ணைகளின் கட்டுமானம் மற்றும் விற்பனை வசதிகளை ரூ. 7 கோடி செலவில் அரசு மேம்படுத்தியுள்ளது.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் மூலம் ரூ. 186 கோடி செலவில் 31 திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் ரூ. 1 கோடி மானிய உதவியை அரசு வழங்கியுள்ளது. இத்துடன் உலக வங்கி நிதி உதவியுடன் நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. கடந்த நிதி ஆண்டில் ரூ. 6.43 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஐ.ஏ.எஸ். ஆக ஊக்குவிப்பு**

மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் குடிமைப்பணித் தேர்வுகளில் வெற்றி பெற ஏதுவாக 6 மாதச் சிறப்புப் பயிற்சியை இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி நிறுவனம் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சமுதாய மாணவர்கள் கடல்சார் படிப்புகளை மேற்கொள்ள வசதியாக 88 மாணவர்களுக்கு ரூ. 27.75 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கடலோர உயிர் பாதுகாப்புப் பயிற்சி வழங்க ரூ. 47.20 லட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**மீனவ நல வாரியம்**

மீனவர்களின் நலன் காக்கும் நலவாரியம் மூலம் 9,547 உறுப்பினர்களுக்கு ரூ. 12.43 கோடி நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்தி வைத்தல், மீன்களைச் சுத்தமான முறையில் கையாளுதல் மற்றும் ஏற்றுமதித் தரத்தை உறுதி செய்து அதிக விலை கிடைக்க வழி செய்வது உள்ளிட்டவற்றுக்காகக் கட்டமைப்பு வசதிகளை அரசு மேம்படுத்தியுள்ளது. 42 மீன் வள உள்கட்டமைப்பு வசதிகள் ரூ. 431.42 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மீன்வள உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், மத்தியப் பங்களிப்புத் திட்டம் உள்ளிட்ட அனைத்திற்கும் நடப்பு நிதி ஆண்டில் ரூ. 1,050 கோடியை மாநில அரசு ஒதுக்கியுள்ளது. இதன்படி 111 திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு ஜிபிஎஸ் கருவி வழங்குதல், திசை மாறிச் சென்ற மீனவர்களைக் கடலோரக் காவல் படை மூலம் தமிழகம் திரும்ப அழைத்து வர வகை செய்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

பலருக்கு வேலைவாய்ப்பையும், வாழ்வாதாரமாகவும், ஏற்றுமதி வருமானம் ஈட்டும் தொழிலாகத் திகழும் மீன் வளத்துறையைக் காக்க அரசு சீரிய முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) மதுரையில், பல்வேறு சமூக நலப் பணிகளை ஆற்றி வரும் மதுரை தத்தநேரியைச் சேர்ந்த சுயதொழில் புரிந்து வரும் ராஜேந்திரன் அவர்களை அழைத்து சிறப்பித்து, மதுரை மாநகராட்சி, திரு.வி.க. மேல்நிலைப் பள்ளிக்கு 10 வகுப்பறைகள், இறைவணக்க கூட்ட அரங்கம், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து தந்தமைக்காகவும், இந்த ஆண்டு மதுரை மாநகராட்சி, கைலாசபுரம் ஆரம்பப் பள்ளியில் 4 வகுப்பறைகள், ஒரு ஆழ்துளை கிணறு, உணவு அருந்தும் இடம், கழிப்பறைகள் ஆகியவற்றை 71 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்து தந்தமைக்காகவும், மேலும் பல்வேறு சமூக பணிகளை மேற்கொண்டு வருவதற்காகவும் தனது வாழ்த்துகளை தெரிவித்து, சால்வை அணிவித்து, அவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை வழங்கி பாராட்டினார்.

## வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

புதுடெல்லி, ஆக. 18 –

வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவாகிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் மேற்கு பருவமழை தொடங்கியதிலிருந்தே வடமாநிலங்களில் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. தென் மேற்கு பருவமழையால் மிகவும் மோசமான பாதிப்புகளை வடமாநிலங்கள் எதிர்கொண்டுள்ளன. தமிழகத்திலும் ஒரு சில இடங்களில் அவ்வப்போது மிதமான மழை முதல் கனமழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், வடக்கு வங்கக்கடல் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் – ‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாகச் செயல்பட்டவரும் – மத்திய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்த நாளினை முன்னிட்டு நேற்று (17.8.2023 வியாழக்கிழமை) காலை சென்னை – கோடம்பாக்கம், ‘முரசொலி’ அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்குக் கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு கழகப் பொதுச்செயலாளர் – நீர் வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். மு.க.தமிழரசு, ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், க.இராமச்சந்திரன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன், மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு எம்.சி., மயிலை த. வேலு எம்.எல்.ஏ., முரசொலி பொது மேலாளர் எஸ்.இராஜசேகரன் மற்றும் கழக முன்னணியினர், நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

### பல்வேறு சமூக நலப்பணிகளை ஆற்றிவரும் – மதுரை

# தத்தநேரி ராஜேந்திரனுக்கு முதல்வர் வாழ்த்து!

### முத்தமிழறிஞர் கலைஞர் சிலையை வழங்கி பாராட்டினார்!

மதுரை, ஆக. 18–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) மதுரையில், பல்வேறு சமூக நலப் பணிகளை ஆற்றி வரும் மதுரை தத்தநேரியைச் சேர்ந்த சுயதொழில் புரிந்து வரும் ராஜேந்திரன் அவர்களை நேரில் அழைத்து பாராட்டினார். அப்போது, அவருக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதோடு, சால்வை அணிவித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையையும் வழங்கி சிறப்பித்தார்.

மதுரை தத்தநேரியைச் சேர்ந்த ராஜேந்திரன் அவர்கள் திருப்பதி விலாஸ் என்ற பெயரில் மிளகாய், வத்தல், வடகம் வியாபாரம் செய்து வருகிறார். சமூகப் நலப் பணிகளில் ஆர்வம் கொண்ட அவர், மதுரை மாநகராட்சி, திரு.வி.க. மேல்நிலைப் பள்ளிக்கு 10 வகுப்பறைகள், இறைவணக்க கூட்ட அரங்கம், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து தந்துள்ளார். மேலும், இந்த ஆண்டு மதுரை மாநகராட்சி, கைலாசபுரம் ஆரம்பப் பள்ளியில் 4 வகுப்பறைகள், ஒரு ஆழ்துளை கிணறு, உணவு அருந்தும் இடம், கழிப்பறைகள் ஆகியவற்றை 71 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் அமைத்து தந்துள்ளார். மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் அருகில் உள்ள புது மண்டபத்தை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணிக்கு 2 கோடி ரூபாய் வழங்குவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

சமூக அக்கறையோடு தொண்டாற்றி வரும் ராஜேந்திரன் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டி, அவரது சமூக நலப் பணிகள் தொடர்ந்திட வாழ்த்தினார்.






### முத்தமிழறிஞர் கலைஞரின் தனி பணியாளர் – நினைவில் வாழும்

# கரு. செயல்மணி இல்லத் திருமண விழா! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – முரசொலி செல்வம் – தயாநிதி மாறன் எம்.பி. – மு.க.தமிழரசு வாழ்த்துரை!

*சென்னை, ஆக.18-*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தனி பணியாளர் நினைவில் வாழும் கரு.செயல்மணி - திருமதி செ.செல்வமணி ஆகியோரின் மகள் வழிப் பெயர்த்தியும், சிவகங்கை - சிங்கம்புணரி நினைவில் வாழும் சே. சேவற் கொடியோன் - சே. தெய்வானை ஆகியோரின் மகன் வழிப் பெயர்த்தியும். சே. கோவலன் - அஞ்சுகம் கோவலன் ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் கண்மணி கோவலனுக்கும், அவினாசி வேலாயுதம் பாளையம் சிட்டுச்சாமி (எ) எல்.கிருஷ்ணசாமி - தனலட்சுமி ஆகியோரின் புதல்வர் பொறியாளர் கே. வருண்குமாருக்கும் மணவிழா 21.8.2023-திங்கள்கிழமை காலை 9.15 மணியளவில் சென்னை, அண்ணா நகர் டி.கே.மஹாலில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன் நடைபெறுகிறது.*

*இம்மணவிழாவை கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.*



*சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு முன்னிலை வகிக்கிறார்.*

*இம்மணவிழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முரசொலி செல்வம், தயாநிதி மாறன் எம்.பி., மு.க. தமிழரசு, எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., டி.கே.எஸ். இளங்கோவன், இராம அருணகிரி, பூச்சி எஸ். முருகன், பரமசிவம், எம்.ஆர்.பி.எம். காமராஜ், ஐ.சி.எப். சங்கர், புஜ்ஜி எஸ்.மோகன், உள்ளிட்ட கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*கே.கோவலன், அஞ்சுகம் கோவலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

### அமைச்சர் தா.மோ.அன்பரசனின் உதவியாளர் – ‘முரசொலி’ மூத்த நிருபர்

# காஞ்சி கே.சம்பத் இல்ல மணவிழா!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது!

*காஞ்சிபுரம், ஆக.18-*

*அமைச்சர் தா.மோ.அன்பரசனின் உதவியாளரும் - காஞ்சிபுரம் மாவட்ட முரசொலி மூத்த நிருபருமான காஞ்சி கே. சம்பத் - கௌளி சம்பத் ஆகியோரின் புதல்வர் கே.எஸ். செந்தில் முருகேசனுக்கும், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், கீழ் கொடுங்காலூர் கிராமம் கி.ரவி - ஆர்.முல்லை ஆகியோரின் புதல்வி ஆர். பூங்கோதைக்கும் மணவிழா 21.8.2023 - திங்கள்கிழமை காலை 9.00 மணியளவில் காஞ்சிபுரம் செவிலிமேடு பாலாறு மேம்பாலம் அருகில், வந்தவாசி சாலையில் அமைந்துள்ள சுகுமாரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*



*இம்மணவிழாவை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் - குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.*

*இம்மணவிழாவில் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர், மாவட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*காஞ்சி கே. சம்பத் - கௌளி சம்பத் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

# மாநில உரிமைகளுக்கு எதிரானது ‘நீட்’ தேர்வு!

### ஆளுநருக்கு மருத்துவர்கள் சங்கம் பதிலடி!

*சென்னை, ஆக. 18 -*

*நீட் தேர்வு மாநில உரிமைகளுக்கும், கூட்டாட்சி கோட்பாட்டிற்கும் எதிரானது என சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மருத்துவர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கை: ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நீட் தொடர்பாக , மாணவி ஒருவரின் தந்தை எழுப்பிய கேள்விக்கு , ஆளுநர் ஆர். என்.ரவி அளித்த பதில் விவாதப்பொருளாகியுள்ளது. `முடிவெடுக்கக் கூடிய இடத்தில் நான் இருந்தால் நீட் விலக்கு மசோதாவிற்கு ஒருபோதும் ஒப்புதல் அளிக்கமாட்டேன்’ என அவர் கூறியுள்ளார். இது அரசியல் சட்டத்திற்கும், மாநில உரிமைகளுக்கும், கூட்டாட்சி கோட்பாட்டிற்கு எதிரானதாகும்.*

*ஆளுநர் கூறுவதுபோல், மருத்துவக் கல்வி வணிகத்தை நீட் தடுத்திடவில்லை. உண்மையில் நீட்டிற்கும் மருத்துவக் கல்வி வணிகத்திற்கும் தொடர்பில்லை. நீட் மருத்துவக் கல்லூரியில் நுழைவதற்கான ஒரு போட்டித்தேர்வு மட்டுமே. மருத்துவக் கல்வி வணிகமயமாவதற்கு அரசின் தனியார் மயமாக்கல் மற்றும் வணிக மயமாக்கல் கொள்கைகள்தான் காரணம். நியாயமான கட்டண நிர்ணயம், அதை கறாராக நடைமுறைப் படுத்துதல், கட்டாய நன்கொடையை தடுத்தல், அரசு மருத்துவக் கல்லூரிகளை அதிகப்படுத்துதல் போன்றவையே மருத்துவக் கல்வி வணிகமாவதை தடுக்கும். ஆளுநர் கூறுவது போல், `மருத்துவக் கல்வியில் நடைபெற்ற ரூபாய் 1000 கோடி வணிகத்தை’ நீட் தடுத்துவிட வில்லை.*

*மாறாக ஒன்றிய அரசின் தனியார் மயமாக்கல் கொள்கை மருத்துவக் கல்வி வணிகத்தை தற்போது பல ஆயிரம் கோடியாக அதிகரிக்கவே காரணமாயுள்ளது. நீட் அரசுப்பள்ளி மாணவர்களுக்கும், அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும், தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கும், மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்களுக் கும், முதல்தலை முறை மாண வர்களுக்கும், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எதிராக அமைந்தது. நீட் இல்லை எனில், தமிழ்நாட்டு மாணவர்களின் அறிவாற்றல் முடங்கி விடும் என ஆளுநர் கூறுவது, அறிவுத்தோற்றவியல் மற்றும் அறிவின் இயங்கியலுக்கு எதிரானது. நீட் இல்லாத பொழுது உருவாக்கப் பட்ட மருத்துவர்களும் திறமைமிக்கவர்களாகவே இருந்துள்ளனர் என்பதே வரலாறு.*



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூரில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டிடத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, குன்றத்தூர் நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்கா மடம் மீனவர் குடியிருப்புக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவர் குடும்பத்தினருடன் கலந்துரையாடினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்கா மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவப் பெருமக்கள், சிறுவர், சிறுமியருடன் கலந்துரையாடினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### இராமேஸ்வரம் அருகே அக்கா மடத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீனவர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்!

## கோரிக்கை மனுக்களைப் பெற்று நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்!

இராமேஸ்வரம், ஆக.18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்காமடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவர் குடும்பத்தினருடன் கலந்துரையாடினார்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் இன்று (18.8.2023) நடைபெறவுள்ள தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் இணைந்து நடத்தும் மீனவர் நல மாநாடு மற்றும் மீனவர்களுக்கு அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொள்வதற்காக இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், அக்கா மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று மீனவப் பெருமக்களிடம் அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது, அப்பகுதி மக்கள் குடியிருப்பு பட்டா வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். பட்டா வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பித்து இருக்கிறீர்களா என்று அங்குள்ள பெண்களிடம் கேட்டறிந்தார். அத்துடன் பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள், அக்கா மடம் மீனவர் குடியிருப்பு பகுதியில் உள்ள மாணவச் செல்வங்களுடன் கலந்துரையாடி, அவர்களது படிப்பு விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராம லிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2023) இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், இராமேஸ்வரம் வட்டம், பாம்பன் ஊராட்சி, அக்கா மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு நேரில் சென்று, அங்குள்ள மீனவப் பெருமக்கள், சிறுவர், சிறுமியருடன் கலந்துரையாடினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசு - தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து

# செங்கல்பட்டில் 20ஆம் தேதி மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம்!

## கழக பொருளாளர் டி.ஆர்.பாலு தொடங்கி வைக்கிறார்.

காஞ்சிபுரம், ஆக. 18-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ் தலைமையிலும் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு மருத்துவ அணி அமைப்பாளர் டி.பி. செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு தொடங்கி வைக்கிறார்.

செங்கல்பட்டில் நாளை மறுநாள் 20ஆம் தேதி நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசு ஆளுநரை கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனை எதிரில் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் தலைமையிலும் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு மருத்துவ அணி அமைப்பாளர் டி.பி. செந்தில்குமார் ஆகியோர் வரவேற்பு ரையிலும் நடைபெற உள்ளது.

இந்த உண்ணாவிரத ஆர்ப்பாட்டத்தை கழக பொருளாளர் டி.ஆர்.பாலு துவக்கி வைத்து கண்டன உரையாற்றுகின்றார்.

கழக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலக்கண்ணன், கே.ஜானகிராமன், மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் அணி கலாநிதி குணாளன், விக்கி (எ) விக்னேஸ்வரன், வே. சங்கீதா, எஸ்.ஜெகதீப், டி.ஜெகன், மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி, க.சபரிராஜா, பி. ஆகாஷ், ரா.பவித்ரா, க. ராஜேஷ், ப.புகழ்முருகன், கா.அரவிந்த்ராஜ், தா.அன்பழகன், கோ.பிரபு, எஸ். வேல்விழி வேந்தன், ஓவியா முருகன், மோ.நரசிம்மன், மஞ்சு சுபாஷினி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்த உண்ணாவிரத அறப்போராட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், மாவட்ட கழக நிர்வாகிகள் இ.கருணாநதி, வரலட்சுமி மதுசூதனன், து. மூர்த்தி, வெ.விசுவநாதன், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா,

தலைமை செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி, ஜி.சி.அன்புச்செழியன், க. அன்புச்செல்வன், ஆதிமாறன், மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ. மனோகரன், செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் கலந்துக்கொண்டு கண்டன உரையாற்றுகின்றனர்.

இந்த மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தில் பகுதி ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள், கழக அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் இளைஞர் அணி மாணவர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மருத்துவ அணி மருத்துவர்கள் பெருந்திரளாக இந்த உண்ணாவிரத ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சியுடன் நடத்திட வேண்டுமென்று அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முடிவில் முனைவர் சபாபதி மோகன் உண்ணா விரத ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றுகின்றனர்.

இறுதியில் இந்த மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தில் தாம்பரம் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே. ஏ.சத்தியபிரபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.மணிகண்டன் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

### 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!




### முரசொலி மாறன் புகழ் போற்றுவோம்!

# முரசொலி மாறன் கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - வலைதளப்பதிவு!



மதுரை, ஆக. 18-

ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் பிறந்தநாளான நேற்று, மதுரையில் இருந்து விடுத்த வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “முரசொலி மாறன் அவர்களது புகழ் போற்றுவோம்! முரசொலி மாறன் அவர்களின் கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!” என்று உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 90வது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**நாளெல்லாம் நம்மை இயக்கிடும் நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞரின் மனச்சாட்சியென வாழ்ந்திட்ட முரசொலி மாறன் அவர்களது 90ஆவது பிறந்தநாள் இன்று!**

**மதுரை சிலைமானில் தலைவர் கலைஞர் அவர்களால் 1952இல் திறந்து வைக்கப் பட்ட கழக அலுவலகத்தில், மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்களது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினேன்.**

**கொள்கைக் கருவூலமான முரசொலி மாறன் அவர்கள் எழுதிய மாநில சுயாட்சி நூல் அனைவரும் படித்திட வேண்டிய ஒன்று!**

**முரசொலி மாறன் அவர்களது புகழ் போற்றுவோம்! அவரது கருத்துகளை இளைய சமுதாயத்துக்குப் பயிற்றுவிப்போம்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (17.08.2023) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், வேளாண்மைத் துறையின் முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், முதன்மைச் செயலாளர்/ சர்க்கரைத் துறை ஆணையர் சி. விஜயராஜ் குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் ச. நடராஜன், சர்க்கரைத் துறை கூடுதல் ஆணையர் டி. அன்புழகன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தாதேவி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ‘நீட்’ திணிப்பு :

# ஒன்றிய அரசு-ஆளுநரைக் கண்டித்து திருவள்ளூரில் உண்ணாவிரத அறப்போர்!

### மாவட்டச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர் - திருத்தணி எஸ்.சந்திரன் - டி.ஜெ.கோவிந்தராஜன் அறிக்கை!







திருவள்ளூர், ஆக. 18

திருவள்ளூர் மாவட்டச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர், திருத்தணி எஸ்.சந்திரன், டி.ஜெ. கோவிந்தராஜன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் ஆலோசனைப் படி தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது. அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது.

இந்த மரணங்கள் அனைத்திற்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசு துணை போகும் அ.தி.மு.க. மற்றும் தமிழ்நாடு ஆளுநரே காரணம். ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் ரவி முட்டுக்கட்டை போட்டு வருகிறார். நம் மாணவச் செல்வங்களின் மரணம், ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்க வில்லை. ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது வராத நீட், எடப்பாடி பழனிசாமியின் ஆட்சியின் போது தமிழ்நாட்டுக்குள் வந்தது. நீட் விலக்கிற்காக 2017-ஆம் ஆண்டு அ.தி. மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத் தலைவர் நிராகரித்ததை, 21 மாதங்கள் வரை தமிழ்நாடு சட்டப்பேரவைக்குத் தெரிவிக்காமல் அ.தி. மு.க.வினர் மறைத்தனர்.

ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க.வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையின்படி, இந்த ‘நீட்’ தேர்வை திணிக் கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட தி.மு.க.வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், வருகின்ற 20.08.23 ஞாயிற்றுக்கிழமை அன்று, காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை திருவள்ளூர் மருத்துவ கல்லூரி வளாகம் எதிரில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற உள்ளது

இந்த உண்ணாவிரத அறப்போரில், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ண சாமி, உள்பட மாவட்ட நிர்வாகிகள் மாநில அணிகளின் நிர்வாகிகள் திருவள்ளூர் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி கழக அமைப்புகளில் நிர்வாகப் பொறுப்புகளில் இருக்கக் கூடிய நிர்வாகிகள், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், நகரக் கழக, பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், நகரக்கழக, பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர்க் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள் மற்றும் மாணவர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும், பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

நீட் தேர்வை ஒழித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையும் - விலை மதிப்பில்லா உயிரையும் காக்க ஓரணியில் திரள்வோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.





காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு, மருத்துவ அணி அமைப்பாளர் டி.பி.செந்தில்குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.

## சமூகப் பணியாற்றிடும்

# மதுரை இராஜேந்திரனுக்கு பாராட்டுகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைத்தளப் பதிவு!

சென்னை. ஆக. 18-

சமூகப் பணியாற்றிடும் மதுரையைச் சேர்ந்த இராஜேந்திரன் அவர்களைப் பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பாசத்துக்குப் பெயர் போன மதுரையில் பாசமிகு பெரியவர் தத்தநேரி இராஜேந்திரன் அவர்களைச் சந்தித்தேன். ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருந்தாலும், அடுத்தடுத்த தலைமுறைகளில் படித்திட வேண்டும் என்ற முனைப்போடு அவர் ஆற்றும் கல்விப் பணிகள் இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு மதுரை மக்களால் பேசப்படும் என்பது உறுதி.

அவர் போன்ற மனிதர்களோடு உறவாடும் நேரங்களில் காலம் சற்றே உறைந்து நிற்காதா!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## சுற்றுலா விருதுகளை அதிக அளவில் பெற வசதியாக ஆக.27 வரை

# விண்ணப்பிப்பதற்காக கால அவகாசம் நீட்டிப்பு!

### சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!



சென்னை, ஆக.18-

சுற்றுலா விருதுகளை பெற அதிக அளவில் சுற்றுலா செயல்பாட்டாளர்கள் பங்கேற்க செய்யும் வகையில் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் 27.08.2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (17.08.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத் துறை அமைச்சர் சுற்றுலா அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சுற்றுலாவை மேம்படுத்த சுற்றுலா வளர்ச்சிக்கு காரணமாக உள்ள நபர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை 2022 ஆம் ஆண்டு முதல் உலக சுற்றுலா தின நிகழ்ச்சியில் சுற்றுலா விருதுகளை அறிமுகப்படுத்தி வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த பயண பங்குதாரர், சிறந்த விமான பங்குதாரர், சிறந்த தங்குமிடம், சிறந்த உணவகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறந்த உணவகம், தங்குமிடம் மற்றும் படகு இல்லம், சுற்றுலா ஊக்குவிப்பிற்கான சிறந்த மாவட்டம், சுத்தமான சுற்றுலாத்தலம், பல்வேறு சுற்றுலாப் பிரிவுகளின் சிறந்த ஏற்பாட்டாளர், சிறந்த சாகச மற்றும் தங்கும் முகாம்கள் சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த MICE சுற்றுலா அமைப்பாளர், சமூக ஊடகங்களில் அதிக அளவில் தாக்கத்தை ஏற்படுத்துபவர், சிறந்த சுற்றுலா வழிகாட்டி, தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா விளம்பரம், சுற்றுலாவினை பிரபலபடுத்தும் வகையில் சிறப்பாக விளம்பரபடுத்துதல், சுற்றுலா மற்றும் விருந்தோம்பலில் சிறந்த கல்வி நிறுவனம் என 17 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் www.tntourismawards.com என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து 15.08.2023 க்குள் சமர்ப்பிக்க அறிவிக்கப்பட்டது. சுற்றுலா விருதுகளை பெற மேலும் அதிக அளவில் சுற்றுலா செயல்பாட்டாளர்கள் பங்கேற்க செய்யும் வகையில் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் 27.08.2023 ஆக நீட்டிக்கப்பட்டுள்ளது அனைத்து மாவட்டங்களிலும் அதிக அளவில் சுற்றுலா செயல்பாட்டாளர்கள் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்க சுற்றுலா அலுவலர்கள் தங்கள் மாவட்டங்களில் பணிகளை மேற்கொள்ள வேண்டும்

இவ்வாறு அமைச்சர் கா. ராமசந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், சுற்றுலா அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘கலைஞர் 100’ 27-வது நிகழ்ச்சியாக பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன் தலைமையில்

# கொளத்தூர் கிழக்குப் பகுதியில் பொதுக்கூட்டம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

### நடிகர்கள் கோவை சரளா - போஸ் வெங்கட் - ஆண்டாள் பிரியதர்ஷினி பங்கேற்பு!

சென்னை, ஆக. 18 -

‘கலைஞர் 100’ 27-வது நிகழ்ச்சியாக காலத்தை பொன்னாக்கினார்! கடமையை கண்ணாக்கினார்! எனும் தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (19.8.2023 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ராகவன் தெரு, வீனஸ் சிலை பெரம்பூரில் பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எவ்.வ. முரளிதரன் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர் எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார், எஸ்.தனசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கிழக்கு பகுதி நிர்வாகிகள் : பி.பழனி, இல.இளங்கோவன், எஸ். கே.ரமேஷ், எம்.தாவூத்பீ, டடி.தாமஸ், வட்ட செயலாளர்கள் : டி.சந்திரசேகர், ஊமைதுரை, கே. பொன்முடி, பி.டி.சி.ரவி, கே.ஜார்ஜ்குமார், கே.பி. ஆதவன் மணி, மாமன்ற உறுப்பினர்கள் சி.ஸ்ரீதணி, யோகபிரியா தனசேகர், பி.அமுதா, கே.சாரதா, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.டி.பாஸ்கர், க.விஜயரங்கம், எஸ்.முரளி, கே.சந்தானம், எம்.துளசி, எஸ். பி.சதீஷ்பாபு, பி.வெங்கடேசன், ஜி.செல்வம், ஜி. பொன்னிவளவன், சி.சந்திரசேகர், ஜி.ராமகிருஷ்ணன், பொன் புகழேந்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான பி.கே.சேகர்பாபு, நடிகை கோவை சரளா, நடிகர் போஸ் வெங்கட், கு.ஆண்டாள் பிரிய தர்ஷினி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., சட்ட திட்ட திருத்தக்குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., ப.ரங்கநாதன் , தேவஜவஹர், எஸ்.பன்னீர் செல்வம், டி.லோகேஷ், டி.துரை கண்ணன், ஆர். எஸ்.சித்திக், எஸ்.அசோக் குமார்,

இரா.தயாளன், வி. வெங்கடேசன், எம்.சாக்ரடீஸ், ஆர்.காஞ்சனா, பி.சூரி எம்.ஜே.சி.பாபு, பி.அதிபதி, என்.சௌந்தர், எஸ்.முருகன், என்.ராமச்சந்திரன், என்.பவுல்ராஜ், எம்.டி.தமிழ்ச்செல்வன், ஆர்.ஆரோக்கியதாஸ், எம்.நாகராஜ், அ.கன்னியப்பன், டி.ஏ.ராஜன், ஆர். சொக்கலிங்கம், எஸ்.சம்பத்குமார், என்.ரவிச்சந்திரன், எஸ்.நாகராஜன், ஆர். மோகனசுந்தரம், ஜே.சரவணன், ஏ.எம்.ராஜசேகர், ஆர்.ஜே.வெங்கட்ராமன், இரா.அரங்கநாதன், எம். சத்யா, துரை வெங்கடேஷ், ஏ.சு.அசோக்குமார், கே.எஸ்.சபரிநாத், வி.அருண்ராஜன், சொ.பழனி, எஸ்.சின்னராஜா, சட்டர் க.ஜெயபால், பி.பாஸ்கர், எஸ். துளசிகுருபரன், எஸ்.மணிவண்ணன் பட்டிமன்றம். எஸ்.சுகுமார், எஸ். தினேஷ், வி.ஜே.கஜேந்திரன், எஸ்.ஸ்ரீநாத், வெற்றிகர் இ.சிவா, ஏ.முகம்மது இஸ்மாயில், எஸ்.மதன், ஜி.லட்சுமணன், வி. ராஜேஷ், டி.சரவணன் ஜி.எஸ்.பிரகாஷ், டி. ரமேஷ், ஏ.சதீஷ்குமார் , எஸ்.டி.சீனிவாசன், பெ. குருநாதன், பிரவீன் சேட், எம்.மதியழகன், மகாராஜன், என்.வேலன், சுரேஷ் செல்வம், சு.கி.ராஜ் எம். துரை, கே.கங்காதரன், பி. சுரேஷ், கௌரிகுருபரன், வி.பிரபாவதிராஜன், எஸ். விஜயலட்சுமி , டி.தமிழ்ச்செல்வி, யமுனாதேவி, த. ஹேமலதா. பி.முனுசாமி, உதயகுமார், ஜெகதீஷ், கிழக்கு பகுதி அமைப்பாளர்கள் : சுரேஷ் கருணாநிதி, ஜி.எம்.சாய்ஸ்ரீகாந்த், மு.இமானுவேல், எஸ். வினோத், எஸ்.நரேஷ், பி. கே.பழனி, எஸ்.சுரேஷ், ஜே.வரலட்சுமி, சி.அனிதா மற்றும் கே.பிரசாத், ஏ.வினோத், சா.ராஜேஷ், டி.பானுபிரகாஷ், எஸ்.உதயகுமார், எஸ்.உதயகுமார், கொளத்தூர் இரா. விஜய், எஸ்.அலெக்ஸாண்டர், என்.செந்தில்குமார், ஆர்.சூர்யா, பி.தமிழ்ச்செல்வன்,ஜி.ஜனார்தனன், கலையரசன், ஜி.எம்.செல்வம், சிவக்குமார், எம்.மதியரசன், பி.கார்த்திக், கே. சுரேஷ், எம்.செல்லையா, ஸ்ரீதர், பிரகாஷ், மதியரசன, லாரன்ஸ், மணிகண்டன், கோபி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

70-வது வட்டச் செயலாளர் பா.அன்பரசு நன்றி கூறுகிறார்.



ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நேற்று (17.8.2023) திருப்பூர் மாவட்டம், தாராபுரம் புனித அலோசியஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி கல்வித்துறையின் சார்பில் 04 அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு விலை இல்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், தாராபுரம் நகர்மன்றத் தலைவர் கு.பாப்பு கண்ணன், முதன்மை கல்வி அலுவலர் எம்.பக்தவச்சலம் ஆகியோர் உள்ளனர்.

## எரிமலை பி.எல்.பாலசுப்பிரமணியம் ஏற்பாடு!

# எஸ்.பி.சற்குணபாண்டியன் நினைவு நாள்! டி.கே.எஸ்.இளங்கோவன் உணவு வழங்கினார்!

### தா.இளையஅருணா,ஜே.ஜே.எபினேசர்,சிம்லா முத்துச்சோழன் பங்கேற்பு!

சென்னை ஆக:18

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி எரிமலை பி.எல்.பாலசுப்பிரமணியம் ஏற்பாட்டில் முன்னாள் கழக துணை பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.பி. சற்குணபாண்டியன் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு (13.08.2023 ஞாயிற்றுக்கிழமை) புதுவண்ணை கிராஸ் ரோடு பூங்கா அருகில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் 500 பேருக்கு அறுசுவை உணவை கழக செய்தி தொடர்பு தலைவர் டி. கே.எஸ்.இளங்கோவன் வழங்கினார்.

இதில் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,சிம்லா முத்துச்சோழன், இரா.லட்சுமணன்,நாகம்மை கருப்பையா, எஸ்.ஜெபதாஸ்பாண்டியன்,நேதாஜி யு.கணேசன் எம்.சி, என். மருதுகணேஷ், கட்பீஸ். ப.சோமசுந்தரமூர்த்தி, வெ.சு.சத்தியநாராயணன், என்.அனிபா, ஆர்.டி. ராஜா,என்.குமாரி நாகராஜன் எம்.சி, தா.வ.மு. கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாக ராஜ், எஸ். தமிழ்செல்வன், வி.வடிவேல், பொ.து.ராஜா, ப. சண்முகம்,வி.முத்து, பி. அன்பழகன், கே.கருணாநிதி, கே.கண்ணகி கருணாநிதி, எஸ்.திருப்பதிசாமி, டி. லெனின், கே.தாமோதரன்,எஸ்.துரை,தமிழ்சிவா, எம்.எஸ்.ரவி, டி.எல்.பி. ரவி, எம்.கிருஷ்ணன், டி. மனோரன், எஸ்.கிருஷ்ணசாமி, எ.எம்.இளங்கோ, எ.டில்லிராஜன், ஜி.பிரேம்குமார், எ.அடைக்கலம், ஆர்.வெங்கட், எம்.சுரேஷ்குமார், ஜி.துரை, பிரஸ். ஆர்.ரங்கநாதன், டி.மணிமாறன், ஆர்.கே.நகர் சதிஷ், எ.கில்பர்ட், சைக்கிள் கடை எஸ்.நடராஜன், எம். மைக்கிள், பேனர் சரவணன், பூக்கடை சீனி, ஜி.பிரபு,கா.ரீதர், இ.கருணாகரன், ஏ.ஆனந்த்,ஆர். கே.பிரபு, அசோக், ப.சுதாகர், எம்.பாட்ஷா,எம்.சரபத், எ.கோபிநாத்,எ.சுந்தரம், மீஞ்சூர் முகுந்தன், ராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர். எஸ்.தனக்கோட்டி,கே.சாம்சன் ஆகியோர் நன்றி கூறினர்.

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமை !எஸ்.மோகன் முன்னிலையில்

# சென்னை தென் மேற்கு மாவட்ட மாணவரணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் வேண்டுகோள்!

சென்னை ஆக.18-

சென்னை தென் மேற்கு மாவட்ட மாணவரணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. இது குறித்து மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.சரவணன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

சென்னை தென் மேற்கு மாவட்ட மாணவரணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நாளை 19.8.2023 சனிக்கிழமை காலை 11 மணியளவில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமை வகித்து ஆலோசனை வழங்குகிறார்.மாநில மாணவரணி துணைச் செயலாளர் எஸ். மோகன் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் பகுதி துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் ; நீட் தேர்வு ரத்து செய்யக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.சரவணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள ஹெல்த் வாக் திட்டத்தின் கீழ் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் முதல் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 8 கி.மீ. தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதிப்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ப.முருகமணி, பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ் மற்றும் பலர் உள்ளனர்.

### மயிலாடுதுறை கிட்டப்பா நகராட்சி மேல் நிலைப் பள்ளியில்

# மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

மயிலாடுதுறை, ஆக. 18-

மயிலாடுதுறையில் கிட்டப்பாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை சார்பில் தேசிய குடற்புழு நீக்க நாளினை முன்னிட்டு மாநில அளவில் பள்ளிமாணவ, மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குவதை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கிவைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தலைமை வகிக்க, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் , பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ,பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம்; ஆகியோர்கள் முன்னிலை வகித்தார்கள்.

தொடர்ந்து,மயிலாடுதுறை அரசு பெரியார் தலைமை மருத்துவமனையில் ரூ.7 கோடியே 18 இலட்சம் மதிப்பில் புதிய எம்.ஆர்.ஐ ஸ்கேன் ஐ மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறைஅமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளரிடம்பேசியதாவது:

தமிழ்நாடுமுழுவதும் பிப்ரவரிமற்றும் ஆகஸ்ட் மாதத்தில் குடற்புழுநீக்க நாள் அனுசரிக்கப்படுகிறது. அதன்படி, இன்று 17.08.2023 குடற்புழுநீக்க மாத்திரைகள் வழங்கும் சிறப்புமுகாம் தொடங்கி வைக்கப்பட்டது. விடுபட்டவர்களுக்கு 24.08.2023 வியாழக்கிழமை அன்றும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள அங்கன்வாடிமையங்கள் 54,439 இருக்கின்றன. இதில் அரசு மற்றும் அரசுஉதவிபெறும் பள்ளிகள் 46,260,தனியார் பள்ளிகள் - 12,526 செயல்படுகின்றன. அனைத்து வகையான கல்லூரிகள் 3,082 உள்ளது. ஆகிய இடங்களில் இந்தகுடற்புழு மாத்திரைகள் வழங்கப்படுகின்றது.

இதில் 1 முதல் 19 வயது வரை உள்ளகுழந்தைகளுக்கும்; 20 - 30 வயதுடைய கருவுறாத மற்றும் பாலூட்டாத பெண்களுக்கும், குடற்புழுநீக்க மாத்திரைகள் வழங்கும் சிறப்பு முகாம் இன்றுகாலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறுகிறது. 1 முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ½ மாத்திரை (200 மி.கி), 2 வயது மேற்பட்டவர்களுக்கு 1 மாத்திரை (400 மில்லிகிராம்) அல்பெண்ட சோல் எனும் மாத்திரை உட்கொள்வதினால் குடற்புழுக்கள் முற்றிலும் நீக்கப்படுகிறது. இதன்மூலம் இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை தடுக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. நினைவாற்றல், கற்றல் திறன் மற்றும் உடல்வளர்ச்சியைமேம்படுத்துகிறது.இதில் பயன்பெற்ற பயனாளிகள் 1 - 19 வயது குழந்தைகள் 2.15 கோடியும், 20 - 30 வயது உள்ள பெண்கள் 54.67 இலட்சம், மொத்த பயனாளிகள் 2 கோடியே 69 இலட்சம் பேர் பயன்பெறுகின்றனர். இதில் அங்கன்வாடிபனியாளர்கள் 54,439, பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் 61,500,சுகாதாரத் துறை பணியாளர்கள் 12,000, ஆக்ஷா பணியாளர்கள் 2650 என மொத்தம் 1,30,589 நபர்கள் இந்தமாத்திரைகள் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். "குடற்புழு தொற்றிலிருந்து விடுபட்டு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியமான எதிர்கால வாழ்விற்கு அனைவரும் இணைந்து செயல்படுவோம்".

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்ட பொதுமக்கள் மற்றும் இத்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஆகியோர்களின் கோரிக்கையை ஏற்று, மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் ரூ.7 கோடியே 18 இலட்சம் மதிப்பீட்டில் புதிய எம்.ஆர்.ஐ ஸ்கேன் ஒன்று அமைக்கப்பட்டு இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த எம்.ஆர்.ஐ ஸ்கேன் எடுக்க பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவாகும். இந்த MRI எடுக்க அண்டை மாவட்டமான திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கு செல்லவேண்டிய நிலை இருந்தது. ஆனால் தற்போது, நமது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் குறைந்த விலையில் SCAN எடுக்கும் வசதியை தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, இன்று திறந்து வைக்கப்பட்டது. Plain MRI Scan ரூ.2500/யும் Contrast MRI SCAN ரூ.4000/-யும், கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திலும் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது மயிலாடுதுறை மாவட்டமக்கள் மட்டுமல்லாது அருகில் உள்ள கடலூர், தஞ்சாவூர் மாவட்ட மக்களும் இந்த சேவையில் பயன்பெறலாம்.

மேலும், இப்பகுதிசட்டமன்றஉறுப்பினர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மயிலாடுதுறை நகர ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.75 இலட்சம் செலவிலும்,சீர்காழியில் நகர ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.75 இலட்சம் செலவிலும், திருவெண்காடு பகுதியில் ரூ.1 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு மற்றும் சித்தா பிரிவு கட்டிடங்கள் கட்டும் பணிமிக விரைவில் நடைபெற்று கொண்டிருக்கின்றது. அதேபோல, கோனேரிராஜபுரம் பகுதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுசுகாதாரம் நிலையம் கட்டிடம் கட்டும் பணியும், திருவெண்காட்டில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது நிலையமும், தலச்சங்காடு பகுதியில் ரூ.30 இலட்சம் செலவில் புதிய துணை சுகாதார நிலையமும், திருவாடுதுறை பகுதியில் ரூ.30 இலட்சம் செலவில் புதியதுணை சுகாதாரநிலையமும், நிம்மேலி பகுதியில் ரூ.25 இலட்சம் செலவில் புதிய துணைசுகாதாரநிலையமும்,பெருந்தோட்டம் மேற்கு பகுதியில் ரூ.25 இலட்சம் செலவில் புதிய துணை சுகாதார நிலையமும், கட்டும் பணிநடைபெற்று கொண்டிருக்கின்றது.

மேலும்,மயிலாடுதுறை அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்திய பிறகு, ரூ.45 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் கட்டும் பணிநடைபெற்று கொண்டிருக்கின்றன. அதேபோல, சீர்காழி 50 படுக்கை அறைகள் கொண்ட அவசர சிகிச்சை கட்டிடம் ஒன்றுரூ.24 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும், 16 படுக்கைஅறைகள் கொண்டகண் அறுவை சிகிச்சை அரங்கு கட்டிடம் கட்டப்பட்டுவருகிறது. ஆகமொத்தம் மயிலாடுதுறை மாவட்டத்தில்; ரூ.75 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவதுறை சம்பந்தப்பட்ட கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு சீர்காழியில் அரசுமருத்துவமனையில் ரூ.1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஒருங்கிணைந்தஆய்வககட்டிடமும்,காளிஆரம்பசுகாதார நிலையம் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடங்கள் கட்டப்பட இருக்கிறது.இவைகள் அல்லாது மேலபெரும்பள்ளம், நக்கம்பாடி, முருகமங்களம் ஆகிய பகுதிகளில் ரூ.3 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்பசுகாதாரநிலையத்தில் புதியகட்டிடங்கள் கட்டப்பட்டுவருகிறது. கொற்கை, நெடுவாசல், காரைமேடு ஆகிய துணைசுகாதார நிலையங்களில் ரூ.1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் புதியகட்டிடங்கள் கட்டும் பணியும்,கட்டப்பட்டுவருகிறது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் இயக்குனர் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புமருத்துதுறை சோமசுந்தரம், மயிலாடுதுறைநகர் மன்ற தலைவர் செல்வராஜ், மயிலாடுதுறை ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.காமாட்சி மூர்த்தி,துணை இயக்குநர் பொதுசுகாதாரம் அஜித் பிரபுகுமார், இணை இயக்குனர் பொதுசுகாதாரம் (தாய்சேய் நலம்) மரு. ஜா.நிர்மல்சன், இணை இயக்குநர் பொதுசுகாதாரம் குருநாதகந்தையா, குத்தாலம் ஒன்றியக் குழுத் தலைவர் மகேந்திரன், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### அரசு போக்குவரத்துக் கழகங்களில்

# 685 ஓட்டுநர்-நடத்துநர் காலி பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்!

## அரசாணை வெளியீடு!

சென்னை, ஆக.18-

அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள காலி பணியிடங்கள் படிப்படியாக நிரப்பப்படும் என்று சட்டசபையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 685 ஓட்டுநர் உடன் நடத்துநர்கள் நிரப்புவதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.

அதனை தொடர்ந்து, 18.08.2023 அன்று www.arasubus.tn.gov.in என்ற இணையதளம் மூலம் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநர் உடன் நடத்துநர் பதவிக்கு தகுதியுள்ளவர்கள் நிகழ்நிலையில் (online) விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இப்பதவிக்கு 18.08.2023 மதியம் 01.00 மணி முதல் 18.09.2023 மதியம் 01.00 மணி வரை விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படு கிறது. மேற்படி நியமனம் தொடர்பான அனைத்து விபரங்களும் www.arasubus.tn.gov.in என்ற இணையதளத்திலேயே பதிவிடப்பட்டுள்ளது.

இப்பதவிக்கான நியமனம் முற்றிலும் வெளிப்படை தன்மை உடையதாக இருக்கும் எனவும், தகுதியின் அடிப்படையில் மட்டுமே பணி நியமனம் செய்யப்படும் என்றும், தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் எழுத்து தேர்வு, ஓட்டுநர் உடன் நடத்துநர் திறன் தேர்வு (Practical) மற்றும் நேர்காணல் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### பா.ஜ.க.வின் 'குஜராத் மாடல்' பிரச்சாரம் வெற்றுக் கூச்சல் என்பது நிரூபணம்!

# குஜராத் மாநிலத்தில் 38 சதவிகிதம் பேருக்கு ஊட்டச்சத்து குறைபாடு!

## நிதி ஆயோக் தகவல்!

புதுடெல்லி, ஆக. 18-

குஜராத் மாநில மொத்த மக்கள் தொகையில் 38 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஊட்டச்சத்து குறைபாடால் பாதிக்கப்பட்டிருப்பதாக நிதி ஆயோக் தெரிவித்திருப்பதன் மூலம், பா.ஜ.க.வின் குஜராத் மாடல் அரசு என்ற பிரச்சாரம், வெற்று கூச்சல் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு, தேசிய பன்முக வறுமை குறியீடு தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் ஊட்டச்சத்து குறைபாடு, வீட்டு வசதி, வறுமை ஒழிப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் விரிவாக பட்டியலிடப்பட்டுள்ளன.

ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினையில் மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில், குஜராத் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும், அந்த மாநிலத்தில் கிராமப் புறங்களில் 44.45 சதவீதம் பேரும், நகர்ப்புறங்களில் 28.97 சதவீதம் பேரும் ஊட்டச்சத்து குறைபாடால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், இது குஜராத் மாநில மொத்த மக்கள் தொகையில் 38.09 சதவீதம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், எடை குறைவாக உள்ள குழந்தைகள் அதிகம் உள்ள மாநிலங்கள் பட்டியலில் குஜராத் 4வது இடத்தில் இருப்பதாகவும், அந்த மாநிலத்தில் 39 சதவீத சிறார்கள், தங்களது வயதுக்கு ஏற்றார்போல இல்லாமல் உடல் எடை குறைவால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் நிதி ஆயோக் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வீட்டு வசதி துறையிலும் குஜராத் மாநிலம் மிக மோசமான நிலையில் இருப்பதாகவும், குஜராத்தின் மொத்த மக்கள் தொகையில் 23.30 சதவீதம் பேருக்கு வீட்டு வசதி இல்லை என்றும், குறிப்பாக கிராமப் புறங்களில் 35.52 சதவீதம் பேருக்கு வீட்டு வசதியில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு, எதற்கெடுத்தாலும் பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் குஜராத்தை சுட்டிக்காட்டி குஜராத் மாடல் என்று தம்பட்டம் அடிப்பதை வாடிக்கையாக வைத்துள்ளது.

ஆனால், குஜராத்தோ பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், பல்வேறு துறைகளில் பின்தங்கி இருப்பது நிதி ஆயோக் வெளியிட்ட புள்ளி விவரம் மூலம் உறுதியாகியிருப்பது பா.ஜ.க.வின் புளுகு முட்டையை மீண்டும் வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை

# விண்ணப்பிக்க மேலும் மூன்று நாள் முகாம்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக.18-

கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில், இதுவரை விண்ணப்பிக்காதோர் விண்ணப்பிப்பதற்காக இன்று முதல் 3 நாட்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

தி.மு..க தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மகளிர் உரிமை திட்டம் செப்டம்பர் 15ந் தேதி தொடங்கப்பட உள்ளது. இந்த திட்டத்தின் மூலம் ஒரு கோடி பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இந்த திட்டத்தில் விண்ணப்பிப்பதற்காக 2 கட்டங்களாக முகாம்கள் நடைபெற்றன. இதில் சுமார் 1 கோடியே 54 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு கைபேசி செயலி வழியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் 2ஆம் கட்ட முகாம்களில் விண்ணப்பிக்க இயலாத நபர்களுக்காக 3 நாள்களுக்கு சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இன்று முதல் 3 நாட்கள் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட இருப்பதாகவும், இந்த முகாம்களில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளின் குடும்பத் தலைவிகள், முதியோர் ஓய்வூதியத் திட்டங்களில் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களில் உள்ள தகுதி வாய்ந்த மகளிர் மற்றும் ஏற்கெனவே முகாம்களில் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் வருகை புரிய இயலாத குடும்பத் தலைவிகள் விண்ணப்பங்களை பதிவு செய்யலாம் என்று தமிழ்நாடு அரசு கூறியுள்ளது.


தமிழ்நாடு அரசு

**விழுப்புரம் நெடுஞ்சாலை**

(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஓ.அ. எண். 32 / 2023-24 / தவஅ / நாள்: 16.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், திட்டம் சாராப் பணிகள் 2023-24-ன் கீழ் விழுப்புரம் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM 115) **ஒரு பணிக்கு இணையவழியில்** ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **13.09.2023, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **28.08.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./4557/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
க&ப வட்டம், விழுப்புரம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".


# சனாதனத்தைப்பற்றி பேச ஆளுநருக்கு அருகதை இல்லை:

## இந்திய கம்யூனிஸ்ட் டி.ராஜா தாக்கு

சேலம், ஆக.18-

'சனாதனத்தைப் பற்றி பேச ஆளுநர் ஆர்.என். ரவிக்கு அருகதை இல்லை' என இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் டி.ராஜா தெரிவித்தார்.

சேலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில குழு கூட்டம், கடந்த 14ம் தேதி முதல் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் டி.ராஜா கலந்து கொண்டு பேசினார்.

பின்னர் அவர் அளித்த பேட்டி:

சுதந்திர தின விழாவில் பேசிய பிரதமர் மோடி, தான் பிரதமர் என்ற எண்ணத்தில் பேசாமல் பா.ஜ.வின் தேர்தல் பிரசார கூட்டமாக அதனை பயன்படுத்திக் கொண்டார். எதிர்க்கட்சிகளை விமர்சனம் செய்யும் கூட்டமாகவே நினைத்து பேசினார்.



ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், பாஜ ஆட்சி அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட வேண்டும். இந்தியா கூட்டணியின் செயல்பாடுகள், மோடிக்கு அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு அப்பதவியில் அமர்ந்து கொண்டு சனாதனத்தை பற்றி பேச அருகதை இல்லை. தமிழகத்தில் இருந்து ஆளுநர் அகற்றப்பட வேண்டும் என்பதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு.

இவ்வாறு டி.ராஜா தெரிவித்தார்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஒருங்கிணைந்த பதிவு துறை அலுவலகத்தினை சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் அன்பழகன் தலைமையில் குழு உறுப்பினர்கள் சந்திரன், சிவக்குமார்,பரந்தாமன்,ராஜேஷ் குமார்,ஜவாஹிருல்லா, சட்டப்பேரவை செயலாளர் சீனிவாசன்,பாளை அப்துல் வகாப் எம்.எல்.ஏ.,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,மேயர் சரவணன் ஆணையாளர் சிவ கிருஷ்ணமூர்த்தி,துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

### நினைவில் வாழும் வண்ணை தேவகி மருமகன்

# கொளத்தூர் ஆர். பாலசுந்தரம் மறைவு!

## கழகத்தினர் - உறவினர்கள் அஞ்சலி!

சென்னை, ஆக.18-

தலைமைக் கழகப் பேச்சாளர் நினைவில் வாழும் வண்ணை தேவகியின் மூத்த மரு மகன் கழக முன்னோடி கொளத்தூர் ஆர். பாலசுந்தரம் (வயது 75) உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் (16.8.2023-புதன்கிழமை) இரவு 7 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்ததும் கழகத்தினரும் உறவினர்களும் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாருக்கு ஞானோதயம் என்கின்ற மனைவியும், கல்வி குமார் என்ற மகனும் உள்ளனர்.



அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (17.8.2023) மாலை 3 மணி அளவில் எண்.300,5 ஆவது தெரு, சிவசக்தி நகர் விரிவு, கொளத்தூர், சென்னை எனும் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கொளத்தூர் மக்காரம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர்முரசொலிமாறன் அவர்களின் 90வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், கழக மருத்துவர் துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ, எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா.விஜயரங்கன், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், சி.மாரிமுத்து, நிர்மலா வேல்மாறன், பச்சையம்மன் முத்து, சு.ராஜாங்கம். குட்டிக.புகழேந்தி உட்படபலர் உள்ளனர்.

## தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (இரண்டாவது பட்டியல்)

## சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### தென்காசி வடக்கு மாவட்டம்

தலைவர் - மு.விஜயபாண்டியன் 4/273, பெருமாள்கோவில்தெரு, தலைவன்கோட்டை.

துணைத் தலைவர் - பி.வி. வெங்கடேசன் 85, நரசிங்கபெருமாள் கோவில்தெரு, புளியங்குடி.

அமைப்பாளர் - **அ. அழகுதுரை** 5/7 வடக்குதெரு, திருமலாபுரம்.

துணை அமைப்பாளர்கள் - க. சேதுசுப்பிரமணியன் 7/4 ராஜாஜிதெரு, சிவகிரி. அ. ராஜராஜன் 50, RSKP ரோடு, புளியங்குடி. கொ. பிரகாஷ் புதுமனை 5ம்தெரு, சங்கரன்கோவில். மா. சந்திரசேகரன் 6/164, கிழக்குதெரு, வையாகவுண்டன்பட்டி, திருவேங்கடம். ஜெ. பாரதிராஜா கக்கன்நகர் 2ம்தெரு, சங்கரன்கோவில். ரா. கார்த்திக்குமார் 85, சந்திவிநாயகர்கோவில்தெரு, சிவகிரி.

### கடலூர் கிழக்கு மாவட்டம்

அமைப்பாளர் - **ஆர். மணிவண்ணன்** வில்லியநல்லூர்அஞ்சல், புவனகிரிவட்டம், கடலூர்மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - நா. வெங்கடேசபெருமாள் 17/8, எஸ்.கே.எஸ்.நகர், குறிஞ்சிப்பாடிவட்டம், கடலூர்மாவட்டம். - ஆர். சேரமான் 1/413, மெயின்ரோடு, வல்லம்படுகைஅஞ்சல், சிதம்பரம்வட்டம், கடலூர்மாவட்டம். செ. ராமசாமி 63/5எ, 3வதுகுறுக்குதெரு, அருண்ஜோதிநகர், காட்டுகொல்லை, வடலூர், குறிஞ்சிப்பாடிவட்டம், கடலூர்மாவட்டம். சா. சுரேஷ் 807,நெடுத்தெரு, பச்சையாங்குப்பம், கடலூர்வட்டம், கடலூர்மாவட்டம். சுப்பு. சரவணன் 5, கீழ்சன்னதிதெரு, ஸ்ரீமுஷ்ணம். சண். கார்த்திகேயன் திருப்பாணம்பாக்கம், களையூர் அஞ்சல், கடலூர் மாவட்டம்.

### நாமக்கல் மேற்குமாவட்டம்

தலைவர் - டி. விஜய்கண்ணன் 21 சிபள்ளிபாளையம்ரோடு, ராகவேந்திராகல்லூரிபின்புறம், குமாரபாளையம்நாமக்கல்.

துணைத் தலைவர் - எஸ். சக்திவேல் எண்:15 கிரீன்லேண்ட் அவென்யூ. சங்ககிரிமெயின்ரோடு, அக்ரஹாரம்,பள்ளிபாளையம், நாமக்கல்.

அமைப்பாளர் - **எம். ரவிச்சந்திரன்** எண்:2/67A ஊஞ்சப்பாளையம், ஆண்டிபாளையம், திருச்செங்கோடு, நாமக்கல்637408.

துணை அமைப்பாளர்கள் - என். அருண்குமார் எண்:4/78 மாம்பாளையம் தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு, நாமக்கல். டி. மகேந்திரன் 2/45 ஆலங்காடு, துத்திப்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல். பி. செல்வம் 82 ஏபைபாஸ்ரோடு, ஒட்டமெத்தை, பள்ளிபாளையம், நாமக்கல். ப. பரணிதரன் 15/22 ராஜராஜன்குமார பாளையம், நாமக்கல். ஜி.முரளிகிருஷ்ணன் 10/4, மலைக்காவலர் கோவில்தெரு, திருச்செங்கோடு, நாமக்கல். எம்.சம்பத்குமார் 3/252ஏ,விளாங்காட்டூர், காடச்சநல்லூர், பள்ளிபாளையம், நாமக்கல். எஸ். சசிகுமார் 32/1, வாய்க்கால்ரோடு, டி. வி. எஸ். மேடு, பள்ளிபாளையம், நாமக்கல். ப. பிரதீபா 2/261, செருக்கலை, புதுப்பாளையம், குடித்தெரு, திருச்செங்கோடு, நாமக்கல்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டம்

தலைவர் - மு. செந்தில்குமார் சேவகவுண்டம்பாளையம் குளத்துப்பாளையம் நாமக்கல்637019.

துணைத் தலைவர் - பி. ராஜன் எண்: 5137, மேற்குபாலப்பட்டிசெல்லப்பம்பட்டி, நாமக்கல்637019.

அமைப்பாளர் - **ஆர்.விநாயகமூர்த்தி** எண்: 5வெங்கடசாமிதெரு. ராசிபுரம் நாமக்கல்637408.

துணை அமைப்பாளர்கள் - ஏ. கே. ராஜாகண்ணன் எண்: 3/111 எ, ஆரியூர், மோகனூர், நாமக்கல்637015. அ. உமாசங்கர் எண்: 5/294, ராஜாஜிநகர் 2வதுதெரு, மோகனூர்ரோடு, நாமக்கல் 637001. அ. ராம்குமார் எண்:85/ 85 மேற்குவீதிகாந்திபுரம்சேந்தமங்கலம்நாமக்கல் 637001. அ. ராஜசேகரன் எண்:141 ஏசுப்பிரமணியபுரம் மோகனூர்நாமக்கல்637015. எஸ். கண்ணன் எண்:1/97, முதலைப்பட்டி, நாமக்கல்637003. டி.சுரேஷ் 3/285, சுப்பிரமணியர்கோவில்தெரு, ஆயில்பட்டி(அ),ராசிபுரம்(தா), நாமக்கல்(மா) - 636202.

### திருவண்ணாமலை வடக்குமாவட்டம்

தலைவர் - புரிசைச. சிவக்குமார் 308, வேலாளர்தெரு, புரிசைகிராமம் & அஞ்சல், செய்யார்வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் 604 401.

துணைத் தலைவர் - ம. விநாயகமூர்த்தி 7/93, திண்டிவனம்சாலை, தெள்ளார், வந்தவாசிவட்டம், திருவண்ணாமலைமாவட்டம் 604 406.

அமைப்பாளர் - **அமர் (எ) இப்ராஹிம்ஷரீப்** நெ.28, தாதுசாயப் தெரு, ஆரணி&வட்டம், திருவண்ணாமலைமாவட்டம் 632301.

துணை அமைப்பாளர்கள் - ந. கலைஞர்பாஸ்கரன் 78/13 வைத்தியர்தெரு, செய்யார்நகரம்&வட்டம் திருவண்ணாமலை மாவட்டம் 604407. செ. பிரவீன்குமார் நெ.15, பாலமுருகன்தெரு, சேத்பட்டுநகரம்&வட்டம் திருவண்ணாமலைமாவட்டம் 606801. அ. மாதவன் நெ.399, பழையகொங்கராம்பட்டு, கண்ணமங்கலம் அஞ்சல் ஆரணிவட்டம். ப. பாலாஜி நெ.36, நடுத்தெரு கொடநல்லூர் கிராமம், வந்தவாசிவட்டம் திருவண்ணாமலைமாவட்டம் 604405.

### வேலூர் மாவட்டம்

தலைவர் - ஏ. உமாசந்திரன் எண்.50,2வதுகுறுக்குதெரு, சி.எம். நகர்பலவன்சாத்து, வேலூர்632002.

துணைத் தலைவர் - டி.லோகநாதன் 44/6E, பிள்ளையார்கோயில்தெரு, வேலப்பாடி, வேலூர்.

அமைப்பாளர் - **எஸ். வெங்கடேசன்** 449, ஏரிக்கரைகாந்திதெரு, கீழ்அரசம்பட்டு632312.

துணை அமைப்பாளர்கள் - எஸ். தரணிராஜன் கெங்கநல்லூர்மெயின்ரோடு, கெங்கநல்லூர். மயூர்நாதன் பெரியதெரு பொன்னை வி.எஸ்.பி.விஜய் 188/8,சாவடிதெரு, விரிஞ்சிபுரம், அணைக்கட்டுதொகுதி. பழனி வடுகந்தாங்கல்கிராமம் & அஞ்சல், கே.வி.குப்பம்632204. பிரபாகரன் மாச்சம்பட்டு, பேர்ணாம்பட்டு.

### ஈரோடு தெற்கு மாவட்டம்

தலைவர் - ஓம்சக்தி.கே.பி. பரமசிவம் 3/15,தனம்பட்டி புதூர், பல்லகவுண்டம் பாளையம், விஜயமங்கலம், பெருந்துறை ஈரோடு 638056.

துணைத் தலைவர் - து. முத்துக்குமார் கருங்காடு, அமராவதி புதூர்,ஊஞ்சலூர்அஞ்சல், கொடுமுடி, ஈரோடு.

அமைப்பாளர் - **இமயம்சிவக்குமார்** 66/3,இரணியன்வீதி, ஸ்ரீராஜகணபதிநகர், ரங்கம்பாளையம், ஈரோடு638009.

துணை அமைப்பாளர்கள் - ரா.தங்கமாதேஸ்வரன் 46,மெயின்வீதி,பள்ளபாளையம், காஞ்சிகோவில்அஞ்சல், பெருந்துறை. வி. இரவிச்சந்திரன் பூந்துறைசேமூர் அஞ்சல், அவல்பூந்துறை, மொடக்குறிச்சி 638115. டி. சுப்பிரமணி (சௌந்தரியமணி) சி.7,சித்தநாதன்நிலையம், அகில்மேடு, 6வதுவீதி, ஈரோடு. டி. சிவசங்கர் 195,மாருதிநகர், செட்டிபாளையம், 46புதூர், ஈரோடு638002. தே. கவின்மோகன் 64, கொம்மகோவில், பெருந்துறை RS வடமுகம், வெள்ளோடு, ஈரோடு. எஸ்.பூபதிசுந்தரம் எளையாம்பாளையம், வாய்பாடி, விஜயமங்களம், பெருந்துறை.

### திருச்சி மத்திய மாவட்டம்

தலைவர் - எஸ்.அன்பழகன் தெற்குதெரு, ஊட்டத்தூர் (அ), இலால்குடி, திருச்சி 6211009.

துணைத் தலைவர் - ஜி. செல்வகுமார் 79A, பள்ளிக்கூடதெரு, நன்னிமங்கலம், இலால்குடி, திருச்சி621601.

அமைப்பாளர் - **எஸ்.நெல்சன்ஆரோக்கியம்** 905,பிபிளாக், எஸ்.ஐ.எஸ்அக்ரோபோல், எடமலைப்பட்டிபுதூர், திருச்சி.

துணை அமைப்பாளர்கள் - க. திருநாவுக்கரசு 1/42A, குடித்தெரு, மேக்குடி(அ), திருச்சி 639 101. ஆர்.மகேஷ் 1/127, புதுவெள்ளாளதெரு, முத்தரசநல்லூர், திருச்சி620 101. சுரேஷ்குமார்பி.இ., 34,ஸ்ரீனிவாசநகர், திருச்சி. என்.ஜெயராமன் 53,மில்காலனி, ராம்ஜிநகர், திருச்சி9. பொ. ராமர் தெற்குதெரு, புதூர்உத்தமனூர், இலால்குடி (வ), திருச்சி.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

தலைவர் - கு.ப. முருகன் 26, கன்னியம்மன், கோயில்தெரு, குண்ணம்கிராமம், திருப்பெரும்புதூர்வட்டம், காஞ்சிபுரம்மாவட்டம்.

துணைத் தலைவர் - ப. பிரசாத் 1/50, பஜனைகோயில்தெரு, மூவரசம்பட்டு, சென்னை600 091.

அமைப்பாளர் - **கே.ஆர். ஆனந்தன்** 8/19, நியூகாலனி, மெயின்ரோடு, ஆதம்பாக்கம், சென்னை 600 088.

துணை அமைப்பாளர்கள் - ஜ. முனிரத்தினம் பட்டுரோஜாதெரு, ஆரனேரி, பொந்தூர்அஞ்சல், திருப்பெரும்புதூர்வட்டம், காஞ்சிபுரம்மாவட்டம். கே.ஜி. சந்தோஷ்கண்ணன் ஏ57, 9வதுகுறுக்குதெரு, அண்ணாநகர், செங்கல்பட்டு603 001. டி.எம். உமாசங்கர் 9, கோகுல்ஐஸ்வர்யம்அபார்ட்மென்ட், சம்மந்தம்நகர்மெயின்ரோடு, குன்றத்தூர், சென்னை600 069. ப. டேனியல்சந்துரு 3, 2வதுதெரு, கௌரிஅவென்யூ, அனகாபுத்தூர், சென்னை600 070. ஆ. இராஜன் 58/2, கேசவராயமுதலிதெரு, ஆலப்பாக்கம், நெடுங்குன்றம், சென்னை600 063. ஆர். பெருமாள் 7/11, NSK போஸ்ரோடு, வானுவம்பேட்டை, சென்னை - 600091. சி. வாசிம்ராஜா 13/6, ஜால்தெரு, ஆலந்தூர், சென்னை - 600016.

### திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

தலைவர் - ஆ. ராஜகோபால் பாலப்பநாயக்கன்பட்டி நத்தம்வட்டம்.

துணைத் தலைவர் - பெ. பழனிவேல் தூங்கனம்பட்டி, பாகநத்தம், வேடசந்தூர்வட்டம்.

அமைப்பாளர் - **ரா. கண்ணன்** குப்பமேட்டுப்பட்டி, தி. கூடலூர்அஞ்சல், குஜிலியம்பாறைவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - ரா. ரமேஷ்மோதுபட்டி, கூத்தம்பூண்டி, ஒட்டன்சத்திரம்வட்டம். மா. செல்வராஜ் சின்னகரட்டுப்பட்டி, ரெட்டியபட்டி, ஒட்டன்சத்திரம்வட்டம். பெ. செல்வம் கரையாம்பட்டி, நாகையகோட்டை, வேடசந்தூர்வட்டம். க. சுரேஷ் மல்லப்புரம்அஞ்சல், குஜிலியம்பாறைவட்டம். ஆ. துரைராஜ் மல்லையநாயக்கன்பட்டி, செந்துறைஅஞ்சல், நத்தம்வட்டம்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

தலைவர் - மா. முகமதுகவுஸ் No:42, செவத்தாதெரு புதுப்பேட்டை, கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்635001.

துணைத் தலைவர் - S. செந்தில்நாயகம் குள்ளனூர்கிராமம், போச்சம்பள்ளிஅஞ்சல், தாலுகா, கிருஷ்ணகிரிமாவட்டம்.

அமைப்பாளர் - **எம்.பாரி** 4/135 மாணிக்கானூர் கிராமம், பையூர்அஞ்சல், காவேரிப்பட்டிணம் கிருஷ்ணகிரிமாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - வி.சிவகார்த்திக் 26/28,கோதியலகானூர், பர்கூர்வட்டம்635104. பி.தங்கமணி ஐகுந்தம்கிராமம், ஐகொத்தப்பள்ளிஅஞ்சல், பர்கூர்வட்டம், கிருஷ்ணகிரிமாவட்டம் - 635203. கே.பி.பரந்தாமன் 56, தசரதராமதெருபுதுப்பேட்டை, கிருஷ்ணகிரிமாவட்டம்635001. ஏ.சி. ஜெகதீசன் அத்திகானூர்கிராமம், அஞ்சூர், பர்கூர்தாலுகா, கிருஷ்ணகிரிமாவட்டம். ரா. விஜய்ராம் (எ) முருகேசன் கருணைத்தோட்டம், வெண்ணம்பள்ளிகிராமம், பாலேப்பள்ளி ஊராட்சி, பர்கூர்வடக்குஒன்றியம், கிருஷ்ணகிரிகிழக்குமாவட்டம் 635120. என்.உத்திரகுமார் பாளேதோட்டம்கிராமம்அஞ்சல், போச்சம்பள்ளிவட்டம், கிருஷ்ணகிரிமாவட்டம். என்அன்பு எண்.10 1வதுதெரு, புளியனூர், சிங்காரபேட்டை, ஊத்தங்கரைவட்டம், கிருஷ்ணகிரிமாவட்டம்.

### பெரம்பலூர் மாவட்டம்

தலைவர் - ரா. பாலமுருகன் 32, அயினாபுரம்அஞ்சல், ஆலத்தூர்வட்டம், பெரம்பலூர்மாவட்டம்.

துணைத் தலைவர் - எஸ். சாந்தமூர்த்தி 3/441, அண்ணாநகர், கோவில்பாளையம், துங்கபுரம் அஞ்சல், குன்னம்வட்டம், பெரம்பலூர்மாவட்டம்.

அமைப்பாளர் - **நெ. அருண்குமார்** 2/103, ஆத்தூர்மெயின்ரோடு, வேப்பந்தட்டைஅஞ்சல், வட்டம், பெரம்பலூர்மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - கோ.பிரபுகிருஷ்ணா 1/26, அந்தூர்கிளியூர், வரகூர்அஞ்சல், குன்னம்வட்டம், பெரம்பலூர்மாவட்டம்621708. ஆர்.கே.பிரபு 4/66, சிதம்பரம் காம்ப்ளக்ஸ், ஆத்தூர்மெயின்ரோடு, வேப்பந்தட்டைஅஞ்சல், வட்டம், பெரம்பலூர்மாவட்டம். ஜெ. அருண் 94/D7, வெங்கடாஜலபதிநகர், புதியபேருந்துநிலையம்பின்புறம், பெரம்பலூர்அஞ்சல், வட்டம், பெரம்பலூர்மாவட்டம். எல். ஆர். இராஜேஸ்வரன் 2/78, பூங்காநகர், வரகூர்அஞ்சல், குன்னம்வட்டம், பெரம்பலூர் 621708. மா. கோபி அரியலூர்மெயின்ரோடு, கவுல்பாளையம், பெரம்பலூர் 621708. சி. செல்வக்குமார் 117B, தீரன்நகர், துறைமங்கலம், பெரம்பலூர்வட்டம், பெரம்பலூர்மாவட்டம் - 621220. சி. சக்தி 5/162, முதலிவட்டம்தெரு, எசனைஅஞ்சல், பெரம்பலூர்வட்டம், பெரம்பலூர்மாவட்டம்.

### திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்

தலைவர் - வ. முத்துமாறன் தானிப்பாடிகிராமம், தண்டராம்பட்டுவட்டம்.

துணைத் தலைவர் - ம. முருகன் பிள்ளையார்கோவில்தெரு, ஏ.கே.படவேடுகிராமம், போளூர்வட்டம்.

அமைப்பாளர் - **விஜி (எ) சு. விஜயராஜ்** 40எ, செட்டித்தெரு, திருவண்ணாமலை.

துணை அமைப்பாளர்கள் - இ.டி. விஜய் 7, வடக்குத்தெரு, திருவண்ணாமலை. கிரிக்கெட்க. ரவி 10/13, தியாகிஅண்ணாமலை நகர், திருவண்ணாமலை. அரசுஅ. பழனி 4/24, இராமலிங்கனார் தெரு, திருவண்ணாமலை. து.வே. சபாரத்தினம் 274, ரேஷன்கடைதெரு தண்டராம்பட்டு&வட்டம். லக்கிகு. அரவிந்த் 46, திருவள்ளுவர்தெரு, திருவண்ணாமலை.

### திருச்சி வடக்கு மாவட்டம்

தலைவர் - கே.சுரேஷ் 2/73A, குடித்தெரு, கிளியநல்லூர்அஞ்சல், மண்ணச்சநல்லூர்வட்டம், திருச்சிமாவட்டம்.

துணைத் தலைவர் - எஸ்.சுரேஷ்குமார் 1/2 வாழக்கட்டை, பிச்சாண்டார்கோவில்அஞ்சல், மண்ணச்சநல்லூர்வட்டம், திருச்சிமாவட்டம்.

அமைப்பாளர் - **எம்.பாபு (எ) அம்மன்பாபு** 13, ராஜாகாலனி, கிழக்குத்திதெரு, துறையூர், வட்டம், திருச்சிமாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - எஸ்.கே.சேகர் 4/134, குடித்தெரு, கீழசீனிவாசநல்லூர், தொட்டியம்வட்டம், திருச்சிமாவட்டம். ஆர். விஜயகுமார் 4/9 வைரிசெட்டிபாளையம்அஞ்சல், துறையூர்வட்டம், திருச்சிமாவட்டம். பி.சசிகுமார் 9,சஞ்சீவிராயன்கோவில்தெரு, முசிறிஅஞ்சல், முசிறிவட்டம், திருச்சிமாவட்டம். எஸ்.ஆறுமுகம் 3/264 வீராந்தநல்லூர், அழகியமணவாளம்அஞ்சல், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிமாவட்டம். ஆர்.பிரேம்குமார் 9ஏ,பாலக்காட்டு, மாரியம்மன்கோவில்தெரு, துறையூர் அஞ்சல் மற்றும் வட்டம், திருச்சிமாவட்டம். நிலவரசன் (எ) பூபதி 1/49, கிழக்குதெரு, மகாதேவிஅஞ்சல், முசிறிவட்டம், திருச்சிமாவட்டம். வி.அண்ணாதுரை அய்யம்பாளையம்அஞ்சல், முசிறிவட்டம், திருச்சிமாவட்டம்.

### திருச்சி தெற்கு மாவட்டம்

தலைவர் - சூர்யாவேசுப்பிரமணியன் 1/1911, வைரம்பட்டிதெற்கு, வையம்பட்டி, மணப்பாறைதாலுகா, திருச்சி 621311.

துணைத் தலைவர் - ஆர்.எஸ்.மகேஷ்குமார் 241/3, இந்திராநகர், மஸ்தான்தெரு, மணப்பாறை, திருச்சிமாவட்டம்.

அமைப்பாளர் - **பி.கிருஷ்ணகோபால்** 7,கோவிந்தசாமிதெரு, மணப்பாறை, திருச்சிமாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - ஆர்.எஸ்.குமாரசரவணன் 6,பட்டவர்த்ரோடு, திருச்சி 02. இரா.மோகன்குமார் 248, புதுக்கோட்டைரோடு, செம்பட்டு, திருச்சி 07. எஸ்.சாமுவேல் ஆனந்த்குமார் 9, 7வதுகுறுக்குதெருகிழக்கு, பாலாஜிநகர், காட்டூர், திருச்சி 19. கே.செந்தில் 3/89, மாரியம்மன்கோவில்குடித்தெரு, வீதிவடங்கம், காட்டூர்அஞ்சல், திருச்சி 19. பி.முத்துமுருகேசன் ஊனையூர், ஊனையூர்அஞ்சல், மருங்காபுரிதாலுகா, திருச்சி 622102.

### தருமபுரி மேற்கு மாவட்டம்

தலைவர் - ஒ. செழியன் 2224, செம்மனஅள்ளி, திருமல்வாடி (அ) பாலக்கோடு (வ) தருமபுரி (மா) 636809.

துணைத் தலைவர் - ஞா. சக்திவேல் கந்தகவுண்டனூர் (அ) (கி) பாப்பிரெட்டிப்பட்டி (வ), தருமபுரி (மா) 635302.

அமைப்பாளர் - **ர.கண்ணபெருமாள் சீகலஅள்ளி,** அரியான்கொட்டாய் (கி) முக்குளம் (அ ), காரிமங்கலம் (வ), தருமபுரி (மா) 635111.

துணை அமைப்பாளர்கள் - சு. கிருஷ்ணமூர்த்தி 2301, சில்லாரஅள்ளி, கடத்தூர் (அ), பாப்பிரெட்டிப்பட்டி (வ), தருமபுரி (மா) - 635303. சி. தமிழரசு (எ) ராசிதமிழ் கே.ஈச்சம்பாடி (கி), காரிமங்கலம்(வ), தருமபுரி (மா) - 636902. கேபிள்டி. பாலு (எ) பாலமுருகன் கோழிமேக்கனூர், வெங்கடசமுத்திரம் (அ), பாப்பிரெட்டிப்பட்டி (வ), தருமபுரி (மா) - 636905. பி. முத்துகனேஷ் சி.எம். புதூர், மாரண்டஹள்ளி, பாலக்கோடுவட்டம், தருமபுரி மாவட்டம் - 636806. இரா. நடேசன் 59, அரியாக்கவுண்டர்தெரு, வெதரம்பட்டி (po), காரிமங்கலம் (t.k), தருமபுரி 635202. எஸ். ராஜராஜன் 320, கிருஷ்ணகிரிமெயின்ரோடு, மொரப்பூர், அரூர் (வ), தருமபுரி (மா) - 635306. சா. கிருஷ்ணமூர்த்தி வேப்பம்பட்டி (கி)(அ), அரூர் (வ), தருமபுரி (மா) - 635306. ஆர்.குபேந்திரன் 37411 பட்டாபிநகர், பஞ்சப்பள்ளி (அ), பாலக்கோடு (வ), தருமபுரி (மா).

### திருவாரூர் மாவட்டம்

தலைவர் - ஆர். காசிராஜன் 3/23ஏ2, மாரியம்மன்கோவில்தெரு, பெரும்பண்ணையூர், குடவாசல்வட்டம் - 612603.

துணைத் தலைவர் - எஸ். மலர்மன்னன் 155/6, சோழாகார்டன், மெயின்ரோடு, வடுவூர், நீடாமங்கலம்வட்டம் - 614019.

அமைப்பாளர் - **திருமதி எஸ். மீனாட்சி** ஏ/1, சிங்காரவேல்தெரு, மன்னார்குடி - 614001.

துணை அமைப்பாளர்கள் - கே.பி. ஐயப்பன் 1/50, அக்ரஹாரத்தெரு, பெரும்புகளூர், இலவங்கார்குடிஅஞ்சல், நன்னிலம்வட்டம் - 610104. என். தினேஷ்குமார் 3/205, கே.கே. நகர், விளமல், திருவாரூர்610004. பி. கண்ணன் 122/27சி, ராமமடத்தெரு, திருத்துறைப்பூண்டி - 614713. செல்வி டி. கீதா 34/1, மாரியம்மன்கோவில்தெரு, கீழகரம், திருவாஞ்சியம்அஞ்சல், நன்னிலம்வட்டம் 610107. ஆர். தங்கபாரதி கீழத்தெரு, பைங்காநாடு, மன்னார்குடிவட்டம்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

தலைவர் - வி. விஜய்கமல்ராஜ் எ 36, சிப்காட்அவுசிங்காலணி, தர்கா, ஒசூர் 635126.

துணைத் தலைவர் - எம்.முனிவெங்கடசாமி 2/539, குருபராத்தரப்பள்ளி (கிராமம்), சப்படி (அஞ்சல்), சூளகிரிவட்டம், கிருஷ்ணகிரிமாவட்டம்.

அமைப்பாளர் - **ப. மாணிக்கவாசகம்** 3/164 சித்தாராம்நகர், ஒசூர், கிருஷ்ணகிரிமாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - ஆர். சந்திரன் 4/16, மத்தம்அக்ரஹாரம், மூக்கொண்டப்பள்ளிஅஞ்சல், ஒசூர்635126. முனைவர்ரா. ராஜேஷ் ராமர்கோவில்தெரு, மகாராஜகடை, கிருஷ்ணகிரிமாவட்டம். கொரிகுருநாதன் 56, உப்கார்லேஅவுட், பகுதி5, சூசுவாடி, ஒசூர், கிருஷ்ணகிரிமாவட்டம். ஆர். ஜெயகுமார் கங்கோஜிகொத்தூர்கிராமம் மற்றும்அஞ்சல், கிருஷ்ணகிரி-635001. சொ. பைரவமூர்த்தி அகலகோட்டைகிராமம்மற்றும்அஞ்சல், தேன்கனிக்கோட்டைவட்டம்.

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

தலைவர் - கோ. முருகன், வள்ளலார் நகர், சங்கராபுரம் அஞ்சல், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

துணைத் தலைவர் - க. சிவக்குமார் சங்கராபுரம்அஞ்சல்&வட்டம், கள்ளக்குறிச்சிமாவட்டம்606401.

அமைப்பாளர் - **ஜெ. நந்தகுமார்** எலவனாசூர்கோட்டைஅஞ்சல், உளுந்தூர்பேட்டைவட்டம், கள்ளக்குறிச்சிமாவட்டம்607202.

துணை அமைப்பாளர்கள் - த. செந்தில்குமார் நடுத்தெரு, கணையார் (ம) அஞ்சல், உளுந்தூர்பேட்டைவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்606207. சு. மணிகண்டன் பொய்குணம்ரோடு, சங்கராபுரம், கள்ளக்குறிச்சிமாவட்டம்606401. நா. பழனிவேல் 86,பள்ளிவாசல்தெரு, மூரார்பாளையம், சங்கராபுரம்வட்டம், கள்ளக்குறிச்சிமாவட்டம்606208. ரா. இளம்பரிதி, நடுத் தெரு, அரியபெருமானூர், ஆலத்தூர் அஞ்சல், சங்கராபுரம் கள்ளக்குறிச்சி. சீ. மோகன் 5/99, மெயின்ரோடு, ஒட்டனந்தல், தி. கொளத்தூர் (அ), விழுப்புரம். அய்யப்பன் பிச்சநத்தம்காலனி, மூரார்பாளையம்அஞ்சல், சங்கராபுரம்வட்டம், கள்ளக்குறிச்சிமாவட்டம். ஜ. மோகன்தாஸ் வடசெட்டியந்தல், மஞ்சப்புத்தூர்அஞ்சல், சங்கராபுரம்தாலுகா, கள்ளக்குறிச்சிமாவட்டம் 606208.

### சேலம் கிழக்கு மாவட்டம்

தலைவர் - எஸ். சந்திரசேகரன் 1/49, பிள்ளையார்கோவில்தெரு, அம்மம்பாளையம், ஆத்தூர், சேலம்.

துணைத் தலைவர் - வி.எம். கோபிநாத் 32/53, வைத்திபடையாச்சிதெரு, வாழப்பாடி, சேலம்.

அமைப்பாளர் - **முனைவர். வி.ராஜசேகர்** 86, உடையார்பாளையம், தம்மம்பட்டி, கெங்கவல்லி, சேலம்.

துணை அமைப்பாளர்கள் - நா. இராஜகோபால் 5/192, செல்லியம்பாளையம், மின்னாம்பள்ளி, சேலம். அ. அப்சர்அலி 221, பாலக்கரை, தம்மம்பட்டி, கெங்கவல்லி, சேலம். ஏ.காசிலிங்கம் 1/64, கிழக்குதெரு, ஆராத்திஅக்ரஹாரம், காமக்காபாளையம். ரா. மகேந்திரபிரபு 1/106, மாரியம்மன்கோவில்தெரு, நிலவரப்பட்டி, சேலம். இரா. மதியழகன் 5/38, 2வதுவார்டு, ஜெனிதாநகர், மல்லியகரை. ஆர். சங்கர் 228/2, மாரியம்மன்கோவில்தெரு, ஜெரினாக்காடு, ஏற்காடு, சேலம்.

### சேலம் மேற்கு மாவட்டம்

தலைவர் - ஆர். சுப்பிரமணியன் 33257, எஸ்.கே.நகர், சேலம்மெயின்ரோடு, சங்ககிரிஅஞ்சல், சேலம்மாவட்டம் 637 301.

துணைத் தலைவர் - ஏ.கூத்தப்பன் அம்மன்நகர், சாம்ராஜ்பேட்டைஅஞ்சல், மேட்டூர்வட்டம், சேலம்மாவட்டம்.

அமைப்பாளர் - **டி.எஸ்.பா. யுனாஸ்** 15,நைனாம்பட்டி, பழையபேட்டை, எடப்பாடிவட்டம், சேலம்மாவட்டம்637 105.

துணை அமைப்பாளர்கள் - பூ. சந்திரமௌலி 24, 25 எடப்பாடிடைவர்ஷன்ரேரடு, ஜலகண்டாபுரம்அஞ்சல், மேட்டூர்வட்டம், சேலம்மாவட்டம். எஸ்.பி.ஏ.மோகன்ராஜ் 131, சென்னாய்க்கன்காடு, T.P.பாளையம்அஞ்சல், மோரூர்மேற்கு, சங்ககிரிவட்டம், சேலம்மாவட்டம். கே.சண்முகம் 5B2, பழையமாரியம்மன் கோவில்தெரு, V.N.பாளையம், சங்ககிரிவட்டம், சேலம்மாவட்டம். குட்டி (எ) G.வெங்கடாசலம் 8258, கோல்காரணனூர், மேச்சேரிஅஞ்சல், மேட்டூர்வட்டம், சேலம்மாவட்டம் 636 453. பி.வெங்கடாசலபதி 7/40, மேட்டுத்தெரு, பக்கநாடுகிராமம், எடப்பாடிவட்டம், சேலம்மாவட்டம்636 501.

### விழுப்புரம் வடக்கு மாவட்டம்

தலைவர் - வ. வடிவேலு கீழ்அருங்கணம்கிராமம், பெருமுக்கல்அஞ்சல், திண்டிவனம்வட்டம், விழுப்புரம்மாவட்டம்.

துணைத் தலைவர் - சி. ஸ்ரீதரன் நெ.192, அங்காளம்மன் கோவில்தெரு, பெருமுக்கல்கிராமம்&அஞ்சல், மரக்காணம்வட்டம், விழுப்புரம்மாவட்டம்.

அமைப்பாளர் - **சு. ராஜா** நெ.3917, சீனுவாசன்தெரு, திண்டிவனம்வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - க. கார்வண்ணன் நெ.163, பள்ளத்தெரு, களையூர்கிராமம்&அஞ்சல், செஞ்சிவட்டம், விழுப்புரம்மாவட்டம். ம. பாலு நெ. 2, அண்ணாதெரு, கொணமங்கலம்கிராமம், தழுதாளிஅஞ்சல், திண்டிவனம்வட்டம், விழுப்புரம்மாவட்டம். ர. செல்வம் நெ.1, மேல்மலையனூர்ரோடு, அவலூர்பேட்டைகிராமம், செஞ்சிவட்டம், விழுப்புரம்மாவட்டம். க. பிரபு நெ.30, அம்மச்சார்கோயில்தெரு, காவேரிப்பாக்கம், திண்வனம்வட்டம், விழுப்புரம்மாவட்டம். கு.கிருஷ்ணமூர்த்தி நெ.140, பிள்ளையார்கோவில்தெரு, தென்புத்தூர்கிராமம் & அஞ்சல், செஞ்சிவட்டம், விழுப்புரம்மாவட்டம். சீ. அரங்கேசன் பிள்ளையார் கோவில் தெரு, இல்லோடுகிராமம் & அஞ்சல், செஞ்சிவட்டம், விழுப்புரம் மாவட்டம். ஐகேஸ். ஆறுமுகம் நெ. 113, மேட்டுத்தெரு, கீழ்சித்தாமூர், தென்கோடிப்பாக்கம், திண்டிவனம்வட்டம், விழுப்புரம்மாவட்டம்.

### சேலம் மத்திய மாவட்டம்

தலைவர் - எம். அசோகன் 130/1, ஆறுமுகம்பிள்ளைதோட்டம், அன்னதானபட்டி, சேலம்.

துணைத் தலைவர் - ஆர்.முருகானந்தம் 75/4/3, பள்ளக்காடு 2வதுதெரு, சின்னத்திருப்பதி, சேலம்8.

அமைப்பாளர் - **அருண்பிரசன்னா** 6/428, பாகல்பட்டி, ஓமலூர், சேலம்.

துணை அமைப்பாளர்கள் - த. மனோகுமார் P. நல்லகவுண்டம்பட்டி, ஓமலூர், சேலம். ஏ.தனபால் 106, தாமரைநகர், சின்னத்திருப்பதி, சேலம். பி.மணி 1/101,இரும்பாலை, அழகுசமுத்திரம், சேலம். ப. துரைசாமி 6157 ரெட்டியூர், சக்கரைசெட்டிபட்டி, தும்பிபாடி, ஓமலூர், சேலம்05. த. உமாமகேஸ்வரிதங்கராஜ் பி.நல்லகவுண்டம்பட்டிஊராட்சி, ஓமலூர், சேலம்மாவட்டம்.

### இராமநாதபுரம் மாவட்டம்

தலைவர் - ரா. இராஜகோபால் 10/81 ரயில்வேபீடர்ரோடு, மண்டபம், இராமநாதபுரம்.

துணைத் தலைவர் - கு. பத்மநாபன் 3/2541 சூரண்காட்டுவலசை, கடுக்காய்வலசை, இராமநாதபுரம்.

அமைப்பாளர் - **அ. முகமதுசலாவுதீன்** 8/33, வடக்குத்தெரு, தெற்குத்தரவை, இராமநாதபுரம்.

துணை அமைப்பாளர்கள் - ரா. சங்கர் 4/26 மார்க்கெட்தெரு, இராமேஸ்வரம், இராமநாதபுரம். ஜெ. செபஸ்தியான் 5/169 கொல்லம்பட்டரைதெரு, பரமக்குடி, இராமநாதபுரம். க. நாகரெத்தினம் 1/819 வள்ளலார்தெரு, பாரதிநகர், இராமநாதபுரம். ப. இந்திரஜித் (எ) மதி 8/7 நேதாஜிநகர், சக்கரக்கோட்டை, இராமநாதபுரம். வே. செந்தூரான் 10/37 பேருந்துநிலையவீதி, பெருநாழி, கமுதி (தாலுகா).

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - நாகேந்திரன் விருதுநகர்.

துணை அமைப்பாளர்கள் - அசோக்குமார் மல்லாங்கிணர். மருதுபாண்டியன் முஷ்டக்குறிச்சி. சரவணக்குமார் திருமலைபுரம், திருச்சுழி. சிட்டிபாபு திருத்தங்கல். சபரி விருதுநகர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

தலைவர் - ஆவுடையூனுஸ் (எ) மு.முகமதுயூனுஸ் 1423, ஆவுடையார்பட்டினம், அம்மாப்பட்டினம், மணமேல்குடி(தா), புதுக்கோட்டை.

துணைத் தலைவர் - ந.வெங்கடாச்சலம் முனசந்தை, பெருங்குடி (அ), திருமயம் தாலுகா, புதுக்கோட்டை.

அமைப்பாளர் - **மு.குமரேசன்** கத்தகுறிச்சி(ஊ), ஆலங்குடி(தா), புதுக்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் - வீரசெல்வம் மறமடக்கி, அறந்தாங்கிதாலுகா, புதுக்கோட்டை. ஆர். சந்திரபோஸ் நெடுவாசல், ஆலங்குடிதாலுகா, புதுக்கோட்டை. க. வெங்கடேஷ் 23 வடுகநாதன்ரோடு, பொன்னமராவதிதாலுகா, புதுக்கோட்டை. சுப்பிரமணியன் வெட்டிவயல், மேல்மங்கலம்அஞ்சல், அறந்தாங்கிதாலுகா, புதுக்கோட்டை. கா.பொற்செல்வன் பெரியண்ணன்செட்டியார்வீடு கீழக்கட்டிடம், விராச்சிலை (Po), திருமயம்தாலுகா, புதுக்கோட்டை. சிவக்குமார் 379, சத்திரம், ஓணாங்குடி (அ), திருமயம்தாலுகா, புதுக்கோட்டை. காளிமுத்து (எ) விஜயன் தண்டலை, மணமேல்குடிதாலுகா, புதுக்கோட்டை. லால்பகதூர் (எ) சுப்பிரமணியன் திரௌபதிஅம்மன்தெரு, வல்லத்திராகோட்டை, ஆலங்குடிதாலுகா, புதுக்கோட்டை. ஆ. செந்தில் இராங்கியம், திருமயம்தாலுகா, புதுக்கோட்டைமாவட்டம். இரா. பாரதிராஜா 6/270 மீமிசல்சாலை, ஆவுடையார்கோயில், ஆவுடையார்கோயில்( P.o& T.k), புதுக்கோட்டை.

### இராணிப்பேட்டை மாவட்டம்

தலைவர் - செ. முனுசாமி எண்.208, ஆணைப்பாக்கம் ரோடு, அரக்கோணம்வட்டம், கோணலம்கிராமம், கோணலம், இராணிப்பேட்டை

துணைத்தலைவர் - சி. அர்ஜுனன் 10, பிள்ளையார்கோவில்தெரு, பாணாவரம்அஞ்சல் 632 505, சோளிங்கர்வட்டம்.

அமைப்பாளர் - **வேதாசீனிவாஸ்** எண்.94, 3வதுதெரு, தந்தைபெரியார்நகர், இராணிப்பேட்டை 632 401.

துணை அமைப்பாளர்கள் - பி.சிவசங்கர் எண்.45, ஒத்தவாடைதெரு, நவல்பூர், இராணிப்பேட்டை. வி.ஹரிபிரசாத் 279/1, கண்ணமங்கலம்ரோடு, காவனூர்கிராமம்&அஞ்சல் ஆற்காடுவட்டம் 632 507 இராணிப்பேட்டைமாவட்டம். ஜி. ஜென்ஸ்குமார் பெருமாள்கேஸ்குடோன்தெரு, காலிவாரிகண்டிகை அரக்கோணம்631001. எஸ்.அசோக்குமார் 318, நடுத்தெரு, கடம்பநல்லூர், அரக்கோணம்வட்டம். சு. அன்பரசு, 92,போஸ்ட்ஆபிஸ்தெரு, சோளிங்கர் 631102.

### தருமபுரி கிழக்கு மாவட்டம்

தலைவர் - பி.சி.அன்பழகன், பருவதனஅள்ளி, பென்னாகரம், தருமபுரி.

துணைத் தலைவர் - மே. நாகராஜ், கடமடை, கலப்பம்பாடி அஞ்சல், பென்னாகரம் வட்டம், தருமபுரி.

அமைப்பாளர் - **எஸ். இளையசங்கர்,** தடங்கம் கிராமம், தோக்கம்பட்டி அஞ்சல், தருமபுரி.

துணை அமைப்பாளர்கள் - கே.மாரி (எ) மாரியப்பன், 2/2235, பாளையம்புதூர் அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி. ஆர். சுகுமார், 3/382ஏ, கேசிஆர் கரும்பு ஆலை, கடகத்தூர் அஞ்சல், தருமபுரி. ஜி. முருகன், அவ்வைநகர், கலெக்ரேட்டி அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி. இளங்கவி, 2/278, போலீஸ் ஸ்டேசன் பின்புறம், இண்டூர், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி. சேட்டு (எ) பிரபாகரன், 1/87, பாடி கிராமம் - அஞ்சல், பாலக்கோடு வட்டம், தருமபுரி. மு. சுப்ரமணி, 2/138, அதகபாடி கிராமம் - அஞ்சல், தருமபுரி. எஸ்.சாந்தரூபன், செம்மனூர், பெரும்பாலை அஞ்சல், பென்னாகரம் வட்டம், தருமபுரி. ஆர்.பி.செல்வராஜ், 72/18ஏ, புதிய திருப்பத்தூர் ரோடு, மதிகோன்பாளையம், தருமபுரி. இரா.ஸ்ரீகோகுல்நாத், பொ. மல்லாபுரம், பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 16-08-2023

**கார்த்திகேய சிவசேனாபதி**
செயலாளர்
தி.மு.க.சுற்றுச்சூழல்அணி

# சமூக நீதி காத்த தகைசால் தமிழர்!



கலைஞருக்குப் பிறகான தி.மு.க. பற்றி ஐந்தாண்டுகளுக்கு முன் பல ஆரூடங்கள் வெளிப்பட்டன. அவரது மறைவுக்குப் பிறகு, இயக்கம் எந்தவித பாதிப்புமில்லாமல் முழுமையாக ஒரு தலைமையின் கீழ் அணிவகுத்துப் பயணிக்கிறது.

பெரியாருக்குப் பிறகான திராவிடர் கழகம் பற்றி ஐம்பதாண்டுகளுக்கு முன் பலரும் ஆரூடங்கள் சொன்னார்கள். பெரியாரைப் போல பதவி நாட்டமில்லாமல் பொதுத் தொண்டாற்றுவது கடினமானது. அதில் ஈடுபாடு காட்ட யாரும் வரமாட்டார்கள் என நினைத்தார்கள். 1973ல் பெரியார் மறைந்ததும், மணியம்மையார் அந்த இயக்கத்திற்குத் தலைமையேற்றார். ஒரு நாத்திகபகுத்தறிவு இயக்கத்தைத் தலைமையேற்று நடத்திய முதல் பெண்மணி என்ற பெயரையும் பெற்றார்.

வடமாநிலங்களில் இராம லீலா நடத்தப்படுவதற்கு எதிர் நிலையாக, பெரியார் திடலில் 'இராவண லீலா' நடத்தி இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி வரை கவனத்தை ஈர்த்தவர் மணியம்மையார். இந்திரா காந்தி அம்மையார்



ஆட்சிக்கால நெருக்கடி நிலையையும் மணியம்மையார் தலைமையிலான திராவிடர் கழகம் எதிர்கொண்டது. தி.மு.க.வினர், மார்க்சிஸ்ட்டுகள், ஸ்தாபன காங்கிரசார், ஜனசங்கத்தினர் மிசா சிறையில் கைது செய்யப்பட்டது போல, திராவிடர் கழகத்தினரும் கைது செய்யப்படுகின்றனர்.

சென்னை மத்திய சிறையில் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் அன்று ஒரே சிறையறையில் அடைக்கப்பட்டவர் திராவிடர் கழகத்தின் அதிகாரப்பூர்வ நாளேடான விடுதலையின் ஆசிரியர் கி.வீரமணி. பெரியாருக்குப் பிறகும் தி.க. வலிமையாக செயல்பட்டதன் அடையாளமே ஆசிரியர் மீதான கைது நடவடிக்கையாகும். 10 வயதில் பள்ளிச் சிறுவனாக பெரியார் இயக்கத்தின் மேடையில் முழங்கத் தொடங்கியவர் அவர்.




இயக்கத்தில் பற்றுகொண்ட தனது பள்ளி ஆசிரியரின் வழிகாட்டுதலில், மேடையேறி, தலைவர்களின் பாராட்டுகளைப் பெற்று, பெரியாரின் அரவணைப்பில் சட்டப்படிப்பு முடித்து, விடுதலை நாளேட்டிற்கு ஆசிரியராக அவர் பொறுப்பேற்றார். விடுதலைக்கு அண்ணா ஆசிரியராக இருந்திருக்கிறார். குத்தூசி குருசாமி ஆசிரியராக இருந்திருக்கிறார். எழுத்தாற்றலில் வலிமைமிக்க அவர்கள் இருந்த இடத்திற்கு கி.வீரமணியைப் பெரியார் தேர்ந்தெடுத்தார்.

சட்டப்படிப்பு முடித்திருந்த கி.வீரமணி, பெரியாரின் விருப்பப்படி விடுதலை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். 60 ஆண்டுகளாக அந்தப் பணியைத் தொய்வின்றித் தொடர்ந்து, ஆசிரியர் என்பதையே தனது சிறப்பு அடையாளமாக ஆக்கிக் கொண்டார். பெரியாரின் தொண்டறத்திற்கு இறுதி வரை துணை நின்றது போலவே, பெரியாருக்குப் பிறகான இயக்கத்திற்கு மணியம்மையார் தலைமைப் பொறுப்பேற்ற போதும் தனது பணியை மேற்கொண்டார். நெருக்கடி நிலைக் காலத்தில் சிறையில் சித்ரவதைகளை எதிர்கொண்ட போதும் அவரது கொள்கை உறுதி தளரவில்லை. 1978ல் மணியம்மையார் இறந்த பிறகு, திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் பின்னர் தலைவராகவும் பொறுப்பேற்று வழிநடத்தி வரும் ஆசிரியர் வீரமணி அவர்களின் வயது, 90. அவரது பொதுவாழ்வுக்கு வயது 80.

பகுத்தறிவு சுயமரியாதை சமூக நீதிக்கானப் பயணத்தில் பெரியாருக்குப் பிறகான திராவிடர் கழகம் அரை நூற்றாண்டு காலத்தை கடந்து வந்திருப்பதற்கு காரணம், ஆசிரியரின் அரும்பணியே. பெரியார் உருவாக்கி வைத்த கல்வி நிலையங்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றை பல மடங்கு வளர்த்தெடுத்தவர் ஆசிரியர். அதே நேரத்தில், சமுதாய மாற்றத்திற்கானப் பிரச்சார இயக்கமான திராவிடர் கழகத்தின் பரப்புரையைத் தமிழ்நாட்டைக் கடந்து பல மாநிலங்களுக்கும் கொண்டு சென்றார். பிற மாநிலங்களிலும் பல நாடுகளிலும் உள்ள பகுத்தறிவுநாத்திக இயக்கங்களுடன் இணைந்து கருத்தரங்குகள் மாநாடுகளை நடத்தி பெரியாரின்சிந்தனைகளை அங்கெல்லாம் விதைத்தார்.

**கோவி.லெனின்**
*மூத்த பத்திரிகையாளர்*
*தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்*



மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரத்தை இன்றளவும் ஒவ்வொரு மாநாட்டிலும் மேற்கொண்டு வருகிறது திராவிடர் கழகம். மொட்டை கடுதாசி மிரட்டல்கள், வழி மறித்து தாக்குதல்கள், கொலை முயற்சிகள் எனப் பலவற்றையும் எதிர்கொண்ட போதும் ஆசிரியரின் பயணம் தடைப்படவில்லை. இயக்கத்தில் கருத்து வேறுபாடுகள், பிரிவுகள், பிளவுகள் ஏற்பட்டபோதும் பெரியார் பணியைத் தொடர்ந்து தொய்வின்றி மேற்கொள்வதில் திராவிடர் கழகமே முதன்மையானது என்பதை ஆசிரியர் இன்றளவும் நிரூபித்து வருகிறார்.

**திராவிடர் கழகம் தேர்தலில் பங்கெடுக்கும் அரசியல் இயக்கமல்ல. ஆனால், தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கக்கூடிய வாய்ப்புள்ள பெரிய கட்சிகள் திராவிடர் கழகத்தின் பங்களிப்பைப் புறந்தள்ள முடியாது என்ற நிலையை, பெரியாரைத் தொடர்ந்து ஆசிரியரும் தக்க வைத்தது, அரசியல் களத்தில் அவரது வியூகம் நிறைந்த செயல்பாட்டுக்கு சான்றாகும்.**

இந்தியாவில் உள்ள ஓ.பி.சி. எனப்படும் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை வழங்கப் பரிந்துரைத்த மண்டல் கமிஷன் அறிக்கையை 1980 முதல் 1990 வரையிலான காலகட்டத்தில் ஒன்றிய காங்கிரஸ் அரசு நடைமுறைப் படுத்தவில்லை. அந்த 10 ஆண்டுகளும் இடைவிடாமல் தி.க.மாநாடுகளில் மண்டல் கமிஷனுக்கு ஆதரவானத் தீர்மானம் நிறைவேற்றப்படும். அதனை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்திப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

**பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி ஆட்சியில் 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் நாள் மண்டல் கமிஷன் பரிந்துரைகளின்படி இதர பிற்படுத்தப் பட்டவர்களுக்கு 27% இடஒதுக்கீடு வழங்கப்படும் என நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதற்கு அடிப்படை காரணம் தேசிய முன்னணியின் அங்கமாக விளங்கிய கலைஞரும், தேசிய முன்னணியை ஆதரித்த ஆசிரியரும் தான். நாடாளுமன்றத்தில் பெரியாரின் பெயரை பெருமையுடன் உச்சரித்தார் வி.பி.சிங். ஓ.பி.சி. இடஒதுக்கீட்டிற்கு எதிராகத் திட்டமிட்டு கலவரங்கள் உருவாக்கப்பட்டபோது, தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு ஆதரவுப் பேரணிகளை வெற்றிகரமாக நடத்தியது திராவிடர் கழகம். இடஒதுக்கீட்டிற்கு எதிரான சட்டரீதியானத் தடைகளைத் தகர்ப்பதிலும் அது முன்னின்றது.**

**50 விழுக்காட்டிற்கு மேல் இடஒதுக்கீடு கூடாது என்கிற உச்சநீதிமன்றத் தீர்ப்பினால், 1989ல் கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே 69 விழுக்காடு என்கிற அளவை எட்டிவிட்ட தமிழ்நாட்டின் சமூக நீதிக் கொள்கைக்கு ஆபத்து வந்தது. தீர்ப்பு வந்தபோது, தமிழ்நாட்டின் முதலமைச்ச ராக இருந்தவர் ஜெயலலிதா. 69% இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க வேண்டும் என தி.மு.க தலைவர் கலைஞர், பா.ம.க நிறுவனர் ராமதாஸ், பிற சமூக நீதி இயக்கத் தலைவர்கள் போராடினர். அதனை ஆரம்பத்தில் ஜெயலலிதா அலட்சியப் படுத்திய நிலையில், இடஒதுக்கீட்டில் தேவையையும் அது அரசியல் களத்தில் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தையும் ஜெயலலிதாவுக்குப் புரிய வைத்தவர் ஆசிரியர்தான்.**

31 (சி) பிரிவின்படி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றச் செய்து, அதனை நாடாளுமன்றத்தின் ஒப்புதலையும், குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று, இந்திய அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் இடம் பெறச் செய்யும் ஆலோசனையை வழங்கியவரும் அவர்தான். ஜெயலலிதா அரசு அந்த ஆலோசனையை செயல்படுத்தி, 69% இடஒதுக்கீட்டினைப் பாதுகாத்தது. அதற்காக திராவிடர் கழகத்தின் சார்பில், ஜெயலலிதாவுக்கு சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பட்டத்தை ஆசிரியர் வழங்கினார். அது தொடர்பாக, அரசியல் களத்தில் விமர்சன அலைகள் எழுந்தன.

சமூக நீதியைக் காப்பாற்றுவதற்கான ஆலோசனை, அதற்கான சட்ட வரைவு எல்லாவற்றையும் ஆசிரியரே முன்னெடுத்த நிலையில், ஜெயலலிதாவுக்கு எதற்கு சமூக நீதி காத்த வீராங்கனைப் பட்டம் என்ற கேள்விக்கு ஒரு கூட்டத்தில் தன் பதிலை அளித்தார் ஆசிரியர்.

**திராவிடர் கழகம் பதவிக்கு வருகின்ற இயக்கமல்ல. பதவியில் இருப்பவர்களை சமூக நீதியை நிலைநாட்டச் செய்கின்ற இயக்கம். அன்றைக்கு முதல்வராக இருந்தவர் ஜெயலலிதா. பிரதமராக இருந்தவர் நரசிம்மராவ், குடியரசுத் தலைவராக இருந்தவர் சங்கர் தயாள் சர்மா. இந்த மூன்று பார்ப்பனத் தலைமையினையும் பிற்படுத்தப்பட்ட பட்டியலின பழங்குடி மக்களுக்கான இடஒதுக்கீட்டிற்கு ஆதரவாக செயல்பட வைத்தோம். இதுதான் திராவிடர் கழகத்தின் சாதனை. ஏற்கனவே தமிழ்நாட்டில் இருந்த சமூக நீதியைப் பாதுகாத்ததால் ஜெயலலிதா அம்மையாருக்கு சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பட்டம் அளித்தோம். சமூக நீதி தந்த வீராங்கனை என்று சொல்லவில்லையே என்றார் ஆசிரியர்.**



ஒருகாலத்தில், இடஒதுக்கீட்டை எதிர்த்த இயக்கங்களும் இன்று சமூக நீதியின் பக்கம் நிற்கின்றன என்றால், அதில் முக்கிய பங்களிப்பு ஆசிரியருக்குரியது. பொதுவுடைமை இயக்கங்கள் உள்பட பலவற்றின் சமூக நீதிப் பார்வை தெளிவடைந்திருப்பதற்கு ஆசிரியரின் பரந்துபட்ட முயற்சி ஒரு காரணியாக விளங்குகிறது.

**சமூக நீதிப் பார்வையின் காரணமாக உத்தரபிரதேசத்தில் பெரியார் மேளா கொண்டாடப்பட்டது. டெல்லியில் பெரியார் மையம் உருவானது. வங்கத்திலும், மராட்டியத்திலும் மற்ற பல மாநிலங்களிலும் பெரியாரின் கருத்துகள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. பல பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் அம்பேத்கர்பெரியார் படிப்பு வட்டங்கள் உருவாகியுள்ளன. அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பெரியாரியல் கருத்துகள் சார்ந்த நிகழ்வுகள் நடைபெறுகின்றன.**



**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப இணையதளம், செயலிகள், காணொளிக் கூட்டங்கள் எனப் பெரியாரை எல்லாத் திசைகளிலும் சுமந்து செல்கிறார் ஆசிரியர். பெரியார் உலகம் உருவாக்குவதும், பெரியாரை உலகமயமாக்குவதும் அந்த 90 வயது இளைஞரின் இலட்சியமாக உள்ளது.**

80 ஆண்டுகாலத் தொண்டறமும், இன்றும் தொடரும் சளைக்காத உழைப்பும், இளைஞர்களுக்கு வழிகாட்டும் சுறுசுறுப்பும் கொண்ட ஆசிரியருக்கு தமிழ்நாடு அரசு தகைசால் தமிழர் விருது வழங்கி சிறப்பித்துள்ளது. விருதுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்

தந்தை பெரியார் - புரட்சியாளர் அம்பேத்கர் கருத்துகளை

# தமது பேச்சால் - செயல்களால் வளப்படுத்துகிறார்!

## தொல்.திருமாவளவன் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, ஆக. 18-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "தமது பேச்சாலும் செயல்களாலும் பெரியார், அம்பேத்கர் கருத்துகளை வளப்படுத்துகிறார், தொல்.திருமாவளவன்" எனப் பாராட்டியுள்ளார்.



முதல்வர் விடுத்த வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**இம்மண்ணில் ஆழ விதைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் - புரட்சியாளர் அம்பேத்கர் கருத்துகளைத் தனது பேச்சாலும் செயல்களாலும் வளப்படுத்திடும் அன்புச் சகோதரர் தொல். திருமாவளவன் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடலில் மூழ்கி உயிரிழந்த நெல்லையைச் சேர்ந்த

# 3 மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 இலட்சம்!

## சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேரில் வழங்கினார்!

நெல்லை, ஆக.18-

நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டம் கரைச்சுத்துபுதூர் கிராமத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் கடற்கரைக்கு (15.08.2023) குளிக்கச் சென்ற போது எதிர் பாராத விதமாக கடல் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இது பற்றிய துயரமான செய்தி கேட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்து முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 2 லட்சம் வீதம் 6 லட்சம் வழங்க உத்தரவிட்டார்கள்.

அதனை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டம் கரைச்சுத்துபுதூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வராஜ் மகன் ஆகாஷ் (வயது 14) இசக்கியப்பன் மகன் ராகுல் கண்ணன் (வயது 14) மகாலிங்கம் மகன் முகேஷ் (வயது 13) ஆகிய மூன்று பள்ளி மாணவர்களும் கடற்கரைக்கு குளிக்கச் சென்ற போது எதிர்பாராத விதமாக கடல் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இது பற்றிய துயரமான செய்தி அறிந்ததும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை, ஆறுதலையும் தெரிவித்து அவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூபாய் 2 லட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டார்கள்.

அதன்படி நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டம் கரைச்சுத்து புதூர் கிராமத்தில் இறந்த மாணவர்களின் இல்லத்திற்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நேரில் சென்று அச்சிறுவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து தலா ரூபாய் 2 லட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

அப்போது இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, வட்டாட்சியர் முருகன் நவ்வலடி ஊராட்சி தலைவர் ராதிகா சரவணன்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

### தஞ்சையில் முரசொலி மாறன் பிறந்தநாள் விழா!

தஞ்சை, ஆக.18-

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மறைந்த அரசியல் மாமேதை , கலைஞரின் கண்மணி முரசொலி மாறன் அவர்களின் 90 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தஞ்சை மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழக செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது.

இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, து.செல்வம், மாநகரக் கழகச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு



சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் நாளை 19.08.2023 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் மாதவரத்திலுள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது. இதில் கீழ்காணும் பொருள் குறித்து பேச இருப்பதால் மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இன்னாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திமுக மாநில இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணி மாநில செயலாளர்களின் கூட்டறிக்கையின்படி எதிர்வரும் 20.08.2023 ஞாயிற்றுக் கிழமை நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு - தமிழக ஆளுநரை கண்டித்து உண்ணாவிரத அறப்போர் நடத்துவது மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

**மாதவரம் எஸ்,சுதர்சனம் எம்.எல்.ஏ.,**

செயலாளர் - சென்னை வட கிழக்கு மாவட்ட தி.மு.க.



முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை பெற சைதை கிழக்கு பகுதியில் உள்ள அனைவரும் பயன்பெறும் வகையில் நடைபெற்ற விளக்க கூட்டத்தில் பகுதி செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் காப்பீட்டு திட்ட மண்டல அதிகாரி கிஷோர் குமார் விளக்க உரை நிகழ்த்தினார்கள். கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள் நா.ராதாகிருஷ்ணன், தா.மோகன்குமார் எம்.சி., எல்.ஆரோக்கியராஜ், சைதை மு.இராஜா, க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், மாவட்ட பிரதிநிதிகள் என்.நந்தகோபால், எஸ்.ஜே.சலாம், க.உமாபதி, வே.முருகன், ஜி.யோவான், ஜி.செல்வராஜ், இரா.சுதாபிரியன், கோட்டூர் ந.பாபு, மு.மகேஷ் லாரன்ஸ், கே.எம்.எஸ்.கணேசன், ஏ.மஜீத் உள்ளிட்ட மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட,தொகுதி, பகுதி, வட்ட, ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# அவாளுக்கு இவாள் பதில்!...

**நேற்றைய தொடர்ச்சி**

இதுகுறித்து சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வாஜ்பாய் பேசினார். பின்பு செய்தியாளர்களுக்கும் பேட்டி அளித்தார். "ஜெயலலிதா நிபந்தனைகள் பல விதித்துத் தொந்தரவுகள் கொடுத்தார். அதனை நிறைவேற்றும்படி நெருக்கடி கொடுத்தார். நாங்கள் அதனை எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதியிடத்தில் ஆட்சி அமைக்கக் கடிதம் கேட்டும், நீண்ட மிகுந்த கால தாமதம் ஆன பின்பே, அவர் கடிதம் கொடுத்தார். சுதந்திர தின கொண்டாட்டம் உட்பட பல்வேறு சமயங்களில், ஆதரவு வாபஸ் பெறுவோம் என்கிற மிரட்டலை ஜெயலலிதா விடுத்தார். ஒரு மாபெரும் விலையுடன்தான் அ.தி.மு.க. ஆதரவு எங்களுக்குக் கிடைத்தது என்பதை விரைவில் நாங்கள் உணர்ந்தோம். கலைஞரின் அரசைக் கலைக்க வேண்டும் என்பதுதான் அந்த விலை. அது மட்டும் அல்ல; பல ஊழல் வழக்கிலிருந்து ஜெயலலிதாவை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என்பதும் அவருடைய நிபந்தனையாக இருந்தது அந்த விலையைக் கொடுக்க நாங்கள் மறுத்தோம். மிரட்டலுக்கு அடிபணிந்து கொள்கைகளை விட்டுக் கொடுக்க நாங்கள் விரும்பவில்லை. " (குமுதம் 2009 - 1999).

அதற்குப் பிறகு தி.மு.கழகத்தின் ஆதரவு கேட்டு வாஜ்பாய் கலைஞரை அணுகி 1999 ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டணி கண்டு வென்றார். வாஜ்பாய் பிரதமராகி, சென்னை வந்து கடற்கரைக் கூட்டத்தில் பேசும்போது, "…. எனக்கு முன்னாலும், ஒரு மகத்தான ஒற்றுமையையும், உறுதிப்பாட்டையும் நான் பார்க்கிறேன். இங்கே தமிழ்நாட்டில் தி.மு.க. தலைவர் கலைஞர் தலைமையில் இயங்குகின்ற கூட்டணியைக் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒற்றுமையும், ஒருமைப்பாட்டையும் நான் பார்க்கிறேன். இது யாரால் சாத்தியமாயிற்று என்றால், தி.மு.கழகத்தின் உயர்ந்த தலைவர் தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் கலைஞர் அவர்கள்தான். எங்கள் அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சி மேற்கொண்ட நேரத்தில்,இதே தமிழ்நாடுதான் எங்களுக்கு உதவிக்கு வந்தது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "உற்ற நேரத்தில் உதவுகிறவன் தான், உண்மையான நண்பன்" அந்தப் பழமொழியை நான் இன்று கலைஞரிடத்தில் நினைவு கூர்கிறேன்" என்று பெருமைப்பட கூறிய செய்திகள் எல்லாம் இன்றைய ஒன்றிய அமைச்சர் நிர்மலாக்களுக்குத் தெரியுமா? பொண்ணு ஊருக்குப் புதுசு போல நேற்றைய அரசியல் தெரிவதற்கு நியாயமில்லை.



**கவிஞர் தமிழ்தாசன்**

தி.மு.க. தீர்மானக்குழுத் தலைவர்

ஜெயலலிதா பற்றிக் கவலைப்படும் அதே நேரத்தில், அம்மா ஆட்சியில் தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன்கள் போன்றோர் மீது தடா வழக்கு பாச்சப் பட்டும், செரினாக்கள் மீது கஞ்சா வழக்கு புனையப்பட்டும் பொய் வழக்குகளில் பல ஆண்டுகளாகச் சிறையில் தள்ளியபோது, இவர்கள் எல்லாம் பெண்கள் என்று நிர்மலா சீதாராமன்களுக்குத் தெரியாமல் போனது ஏன்?

அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகுகள் மூத்தவர்கள் என ஆண்களாக இருந்த போதும், அம்மாவின் காலில் விழுந்து ஆசி பெற்றதைப் பா.ம.க.வைச் சோந்த அன்புமணி இராமதாசு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் "டயர் நக்கிகள்" என்றும், துக்ளக் குருமூர்த்தி வார்த்தையில் கூற வேண்டுமென்றால், "ஆண்மையற்றவர்கள்" (Impotent) என்றும் கூறுவதையெல்லாம் ஜெயலலிதாவின் பெண் ஆளுமை என்று அவாள்கள் பாராட்டுவார்களா?

'ஜெயலலிதா'வினுடைய சேலையை உருவிச் சட்டமன்றத்தில் அவமானப்படுத்தினார்கள்? என்றெல்லாம் பொய் கூறி பெண்ணுக்காக அனுதாபத்தைத் தேடும் நிர்மலாக்கள், காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியை 2004 மார்ச் மாதத்தில், அதே ஜெயலலிதா தனி மனித தாக்குதல்கள் நடத்தினாரே… "சோனியா காந்தி ஓர் அரசியல் அரைவேக்காடு, அரசியல் அறியாத கத்துக்குட்டி.. வெளிநாட்டுக்காரி …சிலை கடத்தியவர்.." என்று இழித்தும், பழித்தும் தனிமனிதத் தாக்குதல் விமர்சனம் செய்தாரே ஜெயலலிதா: அப்பொழுது ஒரு பெண்மணியை இப்படி எல்லாம் பேசலாமா ? என்று பாராளுமன்றத்தில் குழாயடிச் சண்டை போல், வாய் கிழியப் பேசிய அவாளுக்குத் தோன்றாதது ஏன்?

அதே ஜெயலலிதா ஆட்சியில் 1992ஆம் ஆண்டு வாச்சாத்தியில் சந்தனக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்கிறோம் என்று கூறி, வனத்துறை வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகளும் சேர்ந்து விசாரணை என்ற பெயரால் அழைத்துச் சென்று 18 மலைவாழ் பெண்களைக் கதற கதற கற்பழித்தார்கள் அந்தக் கொடுமைகள் நிகழ்த்திய ஜெயலலிதா ஆட்சியில் ஏற்பட்ட பெண்களின் நிலை பற்றிப் பாராளுமன்றத்தில் நிர்மலா சீதாராமன்கள் பேசத் தயாரா? பாவம் அவர் புதிதாக பதவி ஏற்றிருக்கும் அவருக்கு பழைய வரலாறு தெரியாது.

2000ஆம் ஆண்டு பிப்ரவரி 2 அன்று, தனி நீதிபதி இராதாகிருஷ்ணன், ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்கு ஒன்றில் (கொடைக்கானல் வளர்ச்சிக் கட்டுப்பாட்டை மீறி பிளசண்ட் ஸ்டே ஓட்டல் கட்டமுறைகேடாக அனுமதி) ஒரு ஆண்டு சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பு கூறியிருந்தார். ஜெயலலிதாவுக்குத் தண்டனை தந்திருந்த செய்தியறிந்து அ.தி.மு.க.வினர் கோவையில் இருந்து வேளாண்மை கல்லூரி மாணவிகள் வந்த பேருந்தை மடக்கி, தருமபுரி கிருஷ்ணகிரி அருகே இலக்கிய பட்டி எனும் ஊரில் தீ வைத்து கொளுத்தினார்கள். அதில் பயணம் செய்த அப்பாவி மாணவிகளான நாமக்கல் கோகிலவாணி, விருத்தாசலம் காயத்ரி, சென்னை ஹேமலதா போன்ற மூன்று மாணவிகள் உயிருடன் எரிந்து சாம்பலாயினர். 17 மாணவிகள் கடும் தீக்காயத்துடன் உயிருக்குப் போராடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால்.. சாவுக்கு காரணமான அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஆயுள் தண்டனைக் குற்றவாளிகள் சிறையில் இருந்து இடையிலேயே கருணை அடிப்படையில் அ.தி.மு.க. ஆட்சியில் எடப்பாடி அரசு விடுவித்துள்ளது செத்துப்போன, காயம்பட்டவர்களெல்லாம் பெண்கள் இல்லையா? இதெல்லாம் பெண்களுக்குக் காட்டப்பட்ட கருணை ஆட்சி என்று சொல்ல முடியுமா?..

துணை பிரதமராகவும் உள்துறை அமைச்சராகவுமிருந்த பா.ஜ.க. தலைவர் அத்வானியை 'செலெக்ட்டிவ் அமினிசியா', என்று விமர்சனம் செய்த ஜெயலலிதாவுக்கு என்ன பட்டம் தந்து அந்த ஒன்றிய மந்திரி அம்மையார் பாராட்டு தெரிவிப்பார்?

பா.ஜ.க. கட்சியில் எம்.பி.யாக இருப்பவர் சுப்பிரமணியன்சாமி, நிர்மலா சீதாராமன்களை அவ்வப்போது "நிதித் துறை அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர்; பொருளாதாரம் பற்றி ஒன்றும் தெரியாதவர்; அவர் மோடியின் கீழ் அடிமை வேலை செய்யும் பணியாளர். "இப்படி அடிக்கடி விமர்சனம் செய்து கொண்டிருப்பவர் சுப்பிரமணிய சுவாமி.. அவரோடு முன்பு ஜனதா கட்சியில் இருந்த பெண்மணியான சந்திரலேகா ஐ.ஏ.எஸ்.மீது அவருடைய அழகிய முகத்தைக் கருக்குவதற்கு ஆசிட் வீச்சு ஜெயலலிதா ஆட்சியில் வீசப்பட்டதே. அதெல்லாம் நினைவுக்கு வருகிறதா நிர்மலாக்களே..?….

### நிர்மலா சீதாராமன் முதலில் தன் கணவர் வரகலா பிரபாகர் கூறும் அறிவுரை கேட்கட்டும்!

"மோடி ஆட்சி, தலைப்புச் செய்திகளில் இடம் பிடிப்பதில் இருக்கும் ஆர்வம், கள நிலவரத்தைச் சமாளிப்பதில் ஒன்றிய அரசுக்குத் துளியும் அக்கறை இல்லை; அரசின் பொருளாதாரத்தை மீட்பதற்குக் கையாலாகாத் தனம் தெளிவாகத் தெரிகிறது. பிரதமர் மோடி மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டார். 2024 ஆம் ஆண்டில், மீண்டும் மோடி ஆட்சிக்கு வந்தால், ஒன்றிய அரசு பேரழிவைச் சந்திப்பது உறுதி. ஆட்சியில் பொருளாதாரம் மிக மோசமாகிவிட்டது, என்று ஆம் எழுதிய (The Crooked Timber of New India Essays on A Republic in Crisis) ஸ்பீக்கிங் டைகர் வெளியீடு எனும் நூலில் பொருளாதார நிபுணர் பரகலா பிரபாகர் கூறியுள்ளார். இவர் வேறு யாரும் அல்லர். மாமேதை நமது நிதித் துறையைக் கையாளும் நிர்மலா சீதாராமன் கணவர் தாம். முதலில் மோடியின் சீடரான நிர்மலா, இவரின் கேள்விகளுக்குப் பதில் கூறட்டும்,

இன்றைய (13.08.23) தினமலர் ஏட்டில் நிர்மலா சீதாராமன் சொன்ன கூற்றை வழிமொழிந்து, நானும் இருக்கிறேன் என்ற முறையில் ஒரு அம்மையார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அடுத்து சந்தடி சாக்கில் சசிகலாக்கள் சாட்சி கூற புறப்பட்டுள்ளனர். இதைப் போல அறிக்கைப் புழுகர்களான 'இ.பி.எஸ்., ஓ.பி.எஸ்.'களும் வரலாறு பேச ஆரம்பித்துள்ளனர். அவர்களுக்கு நாம் எடுத்து வைக்கும் கேள்வி இதுதான். அப்பல்லோ மருத்துவமனையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 2016ஆம் ஆண்டு, செப்டம்பர் 22ஆம் தேதி அனுமதிக்கப்பட்டார். அவர் சிகிச்சை பெற சேர்ந்த நாளிலிருந்து டிசம்பர் 5ஆம் தேதி இறக்கும் வரை அவருக்கு அளித்து வந்த சிகிச்சை முறைகளை முதலமைச்சர் என்ற முறையில் வெளிப்படையாக பொதுமக்களுக்கு ஏன் தெரியப்படுத்தாமல் மூடி வைப்பதற்குக் காரணமானவர்கள் யார் என்பதை அ.தி.மு.க.காரர்களுக்குக் சொல்லட்டும்?…. இருட்டுக்குள் முடக்கி வைத்தது யார்? டிசம்பர் 5ஆம் தேதி வரை அவரை நேரடியாக வந்து பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்படக் காரணம் யார்? அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு அறிக்கை விட்டு தன்னைப் பெரியாளாக காட்டிக் கொள்கிறார்களா?

தஞ்சை, அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் ஆகிய 3 இடைத்தேர்தல்கள் அ.தி.மு.க. வேட்பாளர்களின் நிறுத்துவதற்கான ஏ.பி. பாரத்தில் அவர் விரல் ரேகை பதிவு செய்தவர்கள் யார்? ஒன்றிய அமைச்சர், ஆளுநர்கள்,அண்டை மாநில முதல்வர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் என முக்கிய பிரமுகர்கள் எல்லாம் வந்தவர்களை நேரில் சந்திக்க விடாமல் அனுப்பப்படக் காரணமாக இருந்தவர்கள் யார்? யார்? ஜெயலலிதா மீது அக்கறை இருக்குமானால், அவரை வெளிநாட்டுக்குக் கொண்டு சென்று, தகுந்த சிகிச்சை அளிக்காததன் மர்மம் என்னஎன்பதை அம்பலத்தில் ஏறிச் சொல்ல முடியுமா? ஆறுமுகசாமி விசாரணை கமிஷன் கூறிய பல்வேறு தரவுகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். அப்படிப்பட்ட நபர்களெல்லாம் நிர்மலாக்களுக்கு சப்பைக்கட்டுக் கட்டுகிற விதத்தில் இன்றைக்கு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜெயலலிதாவின் சாவுக்குக் காரணம் என்று எவர் மீது குற்றம் சுமத்தினார்களோ. அப்படியே அதற்கான காரணங்கள் இருக்கின்றன. பரப்பன அக்ரஹார சிறையில் சிறை கைதியாக சென்றவர்கள் அங்கு இருப்பவர்கள் எல்லாம் பணபரிமாற்றம் மூலம் மடக்கி மாறுவேடத்தில் வெளியில் சென்று உதவி திரும்பிட உதவிய செய்திகளை எல்லாம் ரூபா என்ற அதிகாரி பதிவு செய்ததை மறந்து விட முடியாது. அந்த வரலாற்றை முதலில் கூறட்டும்.

சட்டமன்றத்தில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆருடைய படத்திறப்பு விழா நடந்தபோது, தலைமைச் செயலகம் கோட்டையைச் சுற்றி ஜெயலலிதாவினுடைய படம் தாங்கிய கட்அவுட்டுகள் தான் வைக்கப்பட்டிருந்தன. அதில் எம்.ஜி.ஆர். படமே இல்லை. அவ்விழாவிற்கு சட்டமன்ற பிதாமகனாகவும், பலமுறை முதல்வராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த கலைஞருக்கு அழைப்பு ஏதும் இல்லை.

அத்துடன் எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியார் முன்னாள் முதல்வர் வி.என். ஜானகிக்குப் பங்கேற்க எந்தவித அழைப்பும் அனுப்பப்படவில்லை. படத்திறப்பு விழாவின் போது, அவைத் தலைவர் நாற்காலியில் ஜெயலலிதா ஏறி அமர்ந்து கொண்டார். அவரின் இருக்கைக்கு வலப்புறம் அவை முன்னவரும், இடப்புறம் அவைத் தலைவரும் அமர்ந்து கொண்டார்கள். ஆனால், அவையில் உறுப்பினரே இல்லாத ஒருவர் ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி என்று சொல்லப்படுபவர் சசிகலா துணை சபாநாயகர் நாற்காலியில் ஏறி அமர்ந்து கொண்டார் என்று சொன்னால் அவர் யாராக இருக்க முடியும் என்பதை மக்களே யூகித்துக் கொள்ளட்டும்.

அவர்தான் தமிழ்நாடு சட்டசபையில் ஜெயலலிதாவுக்கு எதிராக 1989 மார்ச் 25ஆம் தேதி வன்முறைகள் நடைபெற்றதாகத் தன்னிடத்தில் ஜெயலலிதாவே சட்டமன்ற நிகழ்வுகளைக் கூறியதாக உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்லி உள்ளார். என்ன நடந்தது என்பதை அ.தி.மு.க.வில் இருந்தவர் பி.எச்.பாண்டியன், க. திருநாவுக்கரசு, போன்றவர்களே சட்டமன்றத்தில் பேசிய பதிவு கள் சாட்சியங்களாக இருக்கின்றன. இப்பொழுதும் சென்று உண்மை செய்திகளைப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம். ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன்கள், தற்போது, நானும் இருக்கிறேன் என்ற அறிக்கையை விட்டு அ.தி.மு.க.வில் நுழைய ஆழம் பார்த்து, முயற்சியில் தோற்றுப் போயிருக்கும் புதிய அரசியல்வாதியான அம்மையாருக்கும் இந்தச் செய்திகள் பதிலாக இருக்கும் என்று நம்புகிறேன்.

கர்நாடக மாநில பரப்பன அக்ரஹாரச் சிறை விதிகளை எல்லாம் மீறி, அதிகாரிகளுக்கு இலட்சக்கணக்கில் பணத்தைக் கொடுத்து வெளியில் சென்று திரும்பி வந்த முறைகேடு செய்திகளை எல்லாம் "ரூபா," என்ற விசாரணை அதிகாரி பதிவு செய்து கொடுத்த அறிக்கையை மறந்துவிட முடியாது.

வரலாறு காணாத வகையில் ரூ. 100 கோடி செலவில் வளர்ப்பு மகன் திருமணம் என்ற பெயரில், இங்கிலாந்து எலிசபெத் இராணி கூட நடத்தாத படோடோப விழாக்களை, ஊர்வலங்களை நடத்தியவர்கள்; நகைக்கடைகளை உடலெங்கும் இருப்பதாகக் காட்டிக் கொண்டவர்கள். அல்லவா? இன்றைக்கு அறிக்கை விட்டு அம்பலத்தில் வந்திருக்கிறார்கள்; சட்டமன்றத்தில் வன்முறை நிகழ்த்துவதற்குத் தூண்டுகோலாகத் தோன்றியவர்களும், நடத்தியவர்களும் யார்? யார்? என்பது அன்றைய பதிவுகளே சாட்சியங்களாக இருக்கின்றன. தெலுங்கானா மற்றும் புதுவை ஆளுநர் தமிழிசைகள் தானும் செய்தி அறிந்ததாகச் சொல்லுகிறார். இவர் ஆளுநராக இருப்பதைக் காட்டிலும், வெளியே வந்து மீண்டும் அரசியல்வாதியாக மாறிவிடலாம். பாரதிய ஜனதா கட்சியை எப்படி எல்லாம் வளர்க்கலாம்' என்று பொய் உரம் போட்டு முள் செடியை வளர்க்க முயற்சி செய்கிறார்கள். புதுவை முதலமைச்சர் ரங்கசாமிதான் எதுவும் மக்களுக்கு செய்ய முடியவில்லை என்று ஆதங்கப்படுகிற நிலையில், தெலுங்கானா சட்டமன்ற மசோதாக்களையும், மக்கள் நலத்திட்டங்களை எல்லாம் முடக்கிப் போடும் நபர்கள் எல்லாம்; இன்று ஆர்.எஸ்.எஸ். வகுப்பு எடுக்கப் புறப்பட்டு விட்டார்கள். கலைஞர் கொடுத்த மருத்துவ ஒதுக்கீட்டில் படித்தவர்கள் எல்லாம் பொய்யுரை கூற புறப்பட்டுவிட்டார்கள்.

நடக்காத செயலை சம்பவத்தைக் கூறிச் சட்டசபையில் வன்முறை நாடகம் நடத்திய ஜெயலலிதாவை அவமானப்படுத்தப்பட்டதாகக் கூறும் அம்மா நிர்மலா சீதாராமன்களே., தமிழிசைகளே. சசிகலாக்களே.. இதற்குப் பதில் சொல்லுங்கள்.. இப்படி மாணவிகளை உயிரோடு வைத்துக் கொளுத்தப்பட்ட சம்பவத்திற்குப் பெயர் பெண்களுக்குக் காட்டிய பரிவா.. பாசமா?

# தி.மு.கழகத்தின் இதயத் துடிப்பு தான் 'முரசொலி'!

**அரசியல் மாமேதை முரசொலி மாறன் அவர்கள் 1980 - ஆம் ஆண்டு 'முரசொலி' ஏடு தனது வெள்ளி விழா ஆண்டில் மதுரைப் பதிப்பினை தொடங்கியபோது 'மதுரையில் ஒலிக்குது முரசொலி' என்று தலைப்பிட்டு , அதற்கு வாழ்த்துத் தெரிவித்து தன் கைப்பட எழுதிய கடிதம் .**

**அதனை இங்கே வெளியிட்டுள்ளோம். அது வருமாறு:-**

## முரசொலி மாறன் கடிதம்!



மதுரையில் ஒலிக்குது முரசொலி!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாளும் கேடயமும்" என்று பேரறிஞர் அண்ணாவால் போற்றிப் புகழ்ந்துரைக்கப்பட்ட 'முரசொலி' ஏடு தனது வெள்ளிவிழா ஆண்டில் மதுரைப் பதிப்பினைத் துவக்கி வைத்தது அதன் சீர்மிக்க வரலாற்றிலும், இது [illegible] தமிழ்த் தொண்டிலும் மேலும் ஒரு புதிய கட்டமாகும்.

1942-ம் ஆண்டு கலைஞர் அவர்களால் திருவாரூரில் துண்டுப் பிரசுரமாக 'முரசொலி' துவக்கப்பட்டது.

பின்னர் 1946-ம் ஆண்டில் 'முரசொலி' வார வெளியீடாக உருப்பெற்றது.

அதன்பிறகு பல ஆண்டுகள் முரசொலி' ஒலிக்கமுடியாத நிலை உருவாகி; பிறகு 1954-ம் ஆண்டிலே சென்னையிலிருந்து மீண்டும் வார ஏடாக [illegible] துவங்கியது.

1960-ம் ஆண்டு அறிஞர் அண்ணா பிறந்த நாள் (செப்டம்பர்-15) முதல் 'முரசொலி' தினசரி ஏடானது.

ஆம்; 'முரசொலி' சென்னையிலிருந்து துவக்கப்பட்ட 1954-ம் ஆண்டிலிருந்து கணக்கிட்டால் இந்த ஆண்டு 25-ஆவது ஆண்டை முடித்துக்கொண்டு 26-ஆவது வெள்ளிவிழா ஆண்டில் காலடி எடுத்துவைத்து ஒரு இலட்சியப் பயணத்தில் பீடுநடை போட்டுவருகிறது.

திரும்பிப் பார்க்கிறேன்— திராவிட முன்னேற்றக் கழகத்தின் இதயத் துடிப்புதான் 'முரசொலி'யாக ஒலித்துக்கொண்டிருக்கிறது! அண்ணன் கண்ட கழகத்தின் இலட்சியத்தைப் பறைசாற்றுவதுதான் அதன் இலட்சியமும்!

திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டப் பாசறை என்று சொல்லப்பட்டால் அதன் இலட்சிய [illegible] வெற்றிகளின் [illegible] முழக்கம் செய்துவருவதுதான் 'முரசொலி'யின் [illegible] என்பதை அதன் எதிரிகளும் ஒப்புக்கொள்வர்.

'முரசொலி' பாதுகாப்புச் சட்டத்தைச் சந்தித்திருக்கிறது.

அதன் கேலிச் சித்திரங்கள் உலகெங்கிலும்! உள்ள ஏடுகளில் பிரசுரமாகியிருக்கின்றன.

முழுமையான தணிக்கைக்கு உட்பட்ட காலமும் உண்டு. இப்போதெல்லாம் அதில் வெளிவரும் [illegible] புரிந்துகொள்ள முடியாமல் அதிகாரிகள் விழித்ததும் உண்டு!

— இவ்வாறு; தி.மு.கழகத்தின் படைக்கலன்களில் ஒன்றுபோல் விளங்கும் 'முரசொலி' 25-வயதைத் தாண்டி வெள்ளிவிழா காண்பதை [illegible] கழகத் தோழர்கள் அனைவரும் மகிழ்ச்சியடையும் செய்தியாகும்.

இதைப்போலவே 'முரசொலி' மதுரையிலிருந்தும் இன்று முதல் வெளிவருகிறது — என்பது பாண்டிய மண்டலத்துக் கழகத் தோழர்களுக்கு மேலும் மகிழ்ச்சியை அளிக்கும் என்று கருதுகிறேன்.

சென்னையில் [illegible] — பொதுவாக, மிகவும் வசதிக் குறைவான நிலையில் — மதுரைப் பதிப்பு உருவாகியிருக்கிறது.

கழகக் கண்மணிகள் [illegible] மதுரைப் பதிப்பு நன்கு வேரூன்றி வளர்ந்திட வாய்ப்பு உண்டு — என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை.

'முரசொலி' மதுரைப் பதிப்பின் வளர்ச்சி நிலை கழகத் தோழர்களின் கையில் இன்று முழு அளவில் ஒப்படைக்கப்படுகிறது. [illegible]

நான் சொல்லுவேன்... இதுவும் ஒரு கட்சிப் பிரச்சார ஏடு [illegible] என்பது [illegible] நிச்சயமல்ல.

— இந்த [illegible] என்ன [illegible] 'முரசொலி'யைத் தினமும் [illegible] படிக்கும் கழகக் கண்மணிகள்தான்!

[illegible]

[illegible] தேடும் [illegible], [illegible] தோழர்களுக்கும், [illegible], விற்பனையாளர்களுக்கும் [illegible] தெரிவித்துக் கொள்கிறேன்.

**இவ்வாறு முரசொலி மாறன் அவர்கள் தன் கைப்பட எழுதியுள்ளார்.**

– இந்தக் கடிதத்தைப் பாதுகாத்து அனுப்பிய பத்திரிகையாளர் தி.கூடலரசன் அவர்களுக்கு நன்றி. (ஆ.ர்)

---

### நீட் தேர்வுக்கு எதிராக

## கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் உண்ணாவிரதம்!

### மஞ்சகுப்பம் தலைமை அஞ்சல் நிலைய அலுவலகம் முன்பு நடைபெறுகின்றது!

கடலூர், ஆக. 18-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராக உண்ணாவிரத அறப்போர் மஞ்சகுப்பத்தில் நடைபெறுகிறது.

இது பற்றி விவரம் வருமாறு:

நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், வரும் 20.08.2023, ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை வரை கடலூர் மஞ்சகுப்பம் தலைமை அஞ்சல் எதிரில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெறும்.

அது சமயம் இந்த உண்ணாவிரதத்தில் இளைஞர்கள், மாணவர்கள், மருத்துவர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகதோழர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கடலூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி நிர்வாகிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### திருக்கோயில்களுக்குச் சொந்தமான

## ரூ.5,077 கோடி மதிப்பீட்டிலான 5557.75 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன!

சென்னை, ஆக. 18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களைஂ ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று (17.08.2023) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம், சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.10 கோடி மதிப்பீட்டிலான நிலம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமாக நாகப்பட்டினம் வேளாங்கண்ணி கிழக்கு கடற்கரை சாலையில் பாப்பாகோயில் கிராமத்தில் அமைந்துள்ள 1.39 ஏக்கர் நிலத்தில் இரண்டு நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருந்து வந்தனர். இந்நிலையில் நாகப்பட்டினம் மண்டல இணை ஆணையர் வி.குமரேசன் அவர்கள் தலைமையில் உதவி ஆணையர் திருமதி ப.ராணி முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.10 கோடியாகும். இந்நிகழ்வின்போது தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) திருமதி பி.எம். அமுதா, திருக்கோயில் செயல் அலுவலர் இரா. தினேஷ் சுந்தரராஜன் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

புதிய அரசு பொறுப்பேற்ற 07.05.2021 முதல் இன்று வரை திருக்கோயில்களுக்குச் சொந்தமான ரூ.5,077 கோடி மதிப்பீட்டிலான 5557.75 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

# திராவிட சினிமா

19

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்



# உள்நாட்டு முரண் பேசிய ‘அரசிளங்குமரி!’

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

1946 -ஆம் ஆண்டில் தொடங்கிய கலைஞர், எம்.ஜி.ஆர், ஜூபிடர் பிக்சர்ஸ், ஏ.எஸ்.ஏ.சாமி கூட்டணி 15 ஆண்டுகள் கடந்தும் பணியாற்றி 1961–ஆம் ஆண்டு ஜனவரியில் வெளிவந்தது ‘அரசிளங்குமரி’ திரைப்படம்.

ஜி.ராமநாதன் இசையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின், **‘சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா’** போன்ற அற்புதமான பாடல்களைக் கொண்ட வெற்றிப்படம். தமிழ்ப் புனைவு வரலாற்றுத் திரைப்படங்கள் அநேகமாக அறுகிப் போன காலத்தில் வெளியானது இந்தத் திரைப்படம்.

## புனைவுகளும் வரலாறுகளும்

திராவிட வரலாற்றுப் புனைவுகள், திரைப் படங்களின் தேவை கருதி உருவாக்கப்பட்டவை. திராவிட நாடக மேடைகளில், பெரும்பாலும் அரசர் காலத்து வரலாற்றுப் புனைவுகள் அநேக மாக இல்லை. மேடை நாடகங்கள் சமகாலச் சமூக நிகழ்வுகளையே பேசின.

திராவிடத் தமிழ்ப் புனைவு வரலாறுகளில் வரும் நாடுகள் பெரும்பாலும் தொல் தமிழ் பழம் நாடுகளாகப் பகுக்கப்பட்ட முல்லை, மருதம், நெய்தல் போன்றவையாகவே இருந்தன. அவற்றின் களமாக ஒன்றிரண்டு தவிர்த்தவற்றில் சேர, சோழ, பாண்டிய போர்களின் வரலாறோ அல்லது அவற்றை மையமாகக் கொண்ட புனைவு வரலாறுகளோ பேசப்படவில்லை.

## கலைஞர் காட்டிய உள்நாட்டு முரண்கள்

**‘திராவிட நாடு’** என்ற கூட்டாட்சிக் குடியரசினை நிறுவ போராடியவர்களுக்கு, அதன் பழைய முரண்கள், பகைகள், வெற்றிகள் பேசுபொருளாக இருக்க முடியாது. திராவிட முரண் எப்போதும் வடவரோடு மட்டுமே. அதனால்தான் திராவிட இயக்கத்தவர் பேச்சுகளில், எழுத்துகளில், சேர, சோழ, பாண்டிய அரசுகளின் வரலாற்று நாயகர்களாக **‘ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனும்’, ‘கனக- விஜயர் தலையில் கண்ணகிக்கு கல் சுமக்க வைத்த சேரமான் சேரலாதனும்’** புகழப்பட்டனர்.

கலைஞர் கூடுதலாக, நாட்டின் உள்முரண்களை, போராட்டங்களைக் களமாக்கிய திரைப்படங்களுக்கு ‘வள்ளுவன் குன்றம்’, ‘கொற்றவன் கோட்டை’, ‘வேலவன் குன்றம்’ போன்ற பல பொருள் பொதிந்த, அரசியல் குறியீடு கொண்ட நாட்டு அமைப்புகளை உருவாக்கினார். கலைஞரின் வரலாற்றுப் புனைவுகளின் மைய இழை, அண்டை நாட்டு ஆக்கிரமிப்பை விட , உள்நாட்டு மக்கள் விரோத ஆதிக்க சக்திகளின் மேலாதிக்கமே முன்னுரிமை பெற்றன.



அரசிளங்குமரியில் ஒரு வேளாண் குடிமகன், அரசதி காரத்துக்கு எதிராகப் போராடி வெல்வதுதான் கதைக்களம். இதுபோன்ற கதைக் களங்களே எம்.ஜி.ராமச்சந்திரன் என்ற நடிகரை பின்னாளில் ‘மக்கள் திலகம்’ ஆக்கியது.

## உழவர்களும் வாள்வீச்சும்

அரசிளங்குமரி திரைப்படத்திலும் வேலவன் குன்றத்து உழவர்களுக்கும், போர் வீரர்களுக்குமான உள்நாட்டுப் போரே மைய இழை. உழவர் குழுமத்தின் தலைவரும், மாபெரும் வாள் வீரரு மான குலசேகரன், அரச குமாரர்களுக்கு மட்டுமே வாள் பயிற்சி உள்ளிட்ட போர்ப் பயிற்சி வழங்கும் வீரநாயகத்திடம் வெற்றியை இழந்து, தனது மண்வெட்டிச் சின்னம் பொறிக்கப்பட்ட வாளை இழக்கிறார்.

அவரது மகன் முத்துக்குப்பம் அறிவழகன் அந்த வாளையும், தனது தங்கையின் பறிக்கப்பட்ட வாழ்வையும் மீட்கிறான். தங்கையை ஏமாற்றிக் கைவிட்டவனோ நாட்டின் தளபதி. அவனது பேராசை, இளவரசியை (ராஜசுலோச்சனா) மணந்து கொண்டு நாட்டை ஆள்வது. ஆனால், அரசும் அதிகாரமும் சாமன்யர்களின் போராட் டத்துக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடிவதில்லை. இளவரசியே ஏழைக் குடியானவனின் காதலியாகி, இந்தப் போராட்டத்தில் துணை நிற்கிறாள்.

## உழவர்கள், எதிர் போர் வீரர்கள்

போர் என்பது உடனடியாக வெகுமக்கள் எதிர் காவல்துறை என்ற உள்ளீட்டைக் கொண்டி ருக்கிறது என்பதில் ஐயமேது மில்லை. உழவர் குழுவின் சின்னம் மண்வெட்டியைக் கையில் பிடித்தபடி நிற்கும் ஒரு வேளாண் குடி மகன். போர் வீரனுக்கான ஆயுதங்கள் தரித்தவன் அல்ல.

குலசேகரன் பெரிய வாள் வீரனாகப் பேசப் பட்டாலும், அவரது மகன் அறிவழகன் பலம் வாய்ந்தவன் என்றபோதும் வாள் போர் அறிந்தவன் இல்லை. அவன் நவீன கர்ணனாக, அரசக்குமாரர் களுக்கு மட்டுமே பயிற்றுவிக்கும் துரோணாச்சாரியார் வடிவமான வீரநாயகம் என்ற குருவிடம் அரசக்குமாரன் என்ற பொய் அறிமுகக் கடித உதவியில் ‘தில்குஷ்’ எனும் வடநாட்டு இளவரசனாகக் கற்கிறான்.

## அண்ணாவைக் கைவிடாத தம்பி

எம்.ஜி.ஆரின் ஆதர்சமான, பொருளற்ற வடமொழிப் பேச்சான இந்தி மொழி, விமர்சனத்துக்கு இடமளிக்கிறது. எம்.ஜி.ஆர் ‘ஆகாஷ்’, உதவியாளர் தங்கவேலு ‘வானம்’. ‘அகாஷ்வாணி’ என்றாகும் இணைவு விமர்சனத்துக்கு ஆளாகிறது. ‘இந்த விளங்காத மொழி தமிழோடு கலப்பதுதானே தகராறாக இருக்கிறது’ என்கிறார் தங்கவேலு.

திரைப்படத்தின் ஆரம்பக் காட்சியிலேயே வேளாண்குடி - அரண்மனை முரண் பேசப்படுகிறது. அறிவழகன் தங்கை அன்புக்கரசி (பத்மினி) தன்னைக் காதலிப்பதாகச் சொல்லும் அரண்மனை வீரனான வேலப்பனிடம் சொல்கிறாள், ‘அரண்மனை வாசிகள் ஆபத்து வரும் போதுதானே ஏழைகளின் உதவியை நாடுவார்கள்’ என்று. ‘உனக்கு அரண்மனைவாசிகளைப் பிடிக்காதா?’ எனக் கேட்கும் வேலப்பனிடம், ‘எனக்கு மட்டுமில்லை, என் அண்ணாவுக்கும் பிடிக்காது‘ என்று.

புனைவோ, நினைவோ கலைஞர் ‘அண்ணா’ எனும் ஆளுமையையும், அவர் தாங்கி நின்ற கொள்கைகள் மற்றும் லட்சியங்களையும் தொடர்ந்து பேசுபொருளாக்கும் ஒரு சிறு வாய்ப்பையும் விடுத்ததில்லை.

ஓயாமல் இறுதிமூச்சுள்ள வரை அண்ணாவின் புகழ் பாடிய அன்புத் தம்பி கலைஞர். 1961– ஆம் ஆண்டில் வெளியான இந்தத் திரைப்படத்தில் ‘அண்ணா’, ‘அண்ணன்‘ என்ற விளிப்புகள் ஒருநூறு முறையாவது ஒலிக்கிறது. கழகத்தின் உள்முரணில் அண்ணாவும்- சம்பத்தும் எதிர்நின்ற காலமது. கழகப் பொருளாளராக கலைஞர் அண்ணாவின் தளபதியாகச் செயல்பட்டார் என்பது குறித்துக் கொள்ள வேண்டியது.

## பாடம் சொன்ன வசனங்கள்

கலைஞரின் முத்தான வசனங்கள் ஒவ்வொரு காட்சியிலும் தெறித்து விழுவதைக் காணலாம். உயிர் துறப்பதற்கு முன் மன்னர், ‘எத்தனை போராடினாலும் இறுதி வெற்றி மரணத்துக்குத்தானே‘ எனத் தத்துவ விசாரம் பேசுகிறார்.

அறிவழகன், ‘ஏன் பாட்டாளிகள் நாடாளக் கூடாதா? சிம்மாசனம் அவர்களை ஏற்றுக் கொள்ளாதா?‘ என்று கேட்டு, அவனே பதில் சொல்கிறான், ‘நாசகாரர்களுக்கு அண்ணன் தந்தார் நல்ல பாடமென நாடு பேச வேண்டுமென்று’.

காதலர் உரையாடல்களில் கலைஞரின் வரிகள் கொஞ்சும். அன்புக்கரசி வேலப்பன் தலையில் முட்டியதும், ‘தலை, கல் போல உள்ளதே உள்ளத்தைப் போல மென்மையாக இல்லையே’ என்கிறாள். வேலப்பன், தன் முகத்தின் பாவத்தில் பாடம் கற்றுக் கொள்வதாகச் சொல்லுபவளிடம், ‘ஆண்கள் முகத்தில் பெண்கள் பாடம் கற்றுக் கொள்வது ஆபத்தானதாயிற்றே, அதாவது ஆண்களுக்கு’ என்கிறான்.

தன்னைக் கைவிட்டுப் பரிதவிக்கவிடும் கணவனிடம் கண்ணீரோடு பேசுகிறாள், ‘பரண் மீதமர்ந்திருந்த என்னை புலன் மாற்றிப் போட்டு மணம் புரிந்து வாழ்வதற்குக் கரம் பிடித்த நிகழ்ச்சியினை மறந்தீரோ? காலமெல்லாம் ஒன்றாக வாழ்வோமென்ற நெடுங்குறிப்பைக் காட்டி விட்டு மறந்தீரோ அத்தான்’ எனக் குமுறு கிறாள், அஞ்சுகமாக!

...படம் விரியும்

## ஆங்கிலத்தில் திராவிட இயக்க ஆய்வு!




1970-ஆம் ஆண்டுக்கு முன் தமிழ்நாட்டின் சமூகவியல் மற்றும் அரசியல் துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டதில் இரண்டு மேலை நாட்டு ஆய்வாளர்கள் முக்கியமானவர்கள். இருவரும் திராவிட இயக்கத்தின், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியை ஆய்வு செய்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. ஒருவர் மார்கரைட் ரோஸ் பார்னெட், மற்றொருவர் ராபர்ட் எல். ஹார்ட்கிரேவ். பின்னவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு மூப்பின் காரணமாகக் காலமானார்.

திராவிட இயக்கம், தி.மு.க. ஆகியவைக் குறித்து ஆங்கிலத்தில் வெளிவந்த முதல் புத்தகம் இவருடையது. கழகம் ஆட்சிக்கு வரும் முன்பே, 1965- ஆம் ஆண்டில் வெளியானது இவருடைய ‘தி திரவிடியன் மூவ்மென்ட் (The Dravidian Movement)’ என்ற நூல். அது அன்றைய மெட்ராஸ் மாகாணத்தின் பார்ப்பன ரல்லாத அரசியல் எழுச்சியில் தொடங்கி, நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், தி.க., தி.மு.க., காமராஜரின் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, உழைப்பாளர் கட்சி, காமன்வீல் கட்சி, ஈ.வி.கே. சம்பத்தின் தமிழ்த்தேசிய கட்சி, ம.பொ.சியின் தமிழரசுக் கழகம் என 1963 -ஆம் ஆண்டு வரை நடந்த அரசியல் நடவடிக்கைகளில் திராவிட இயக்கம் செலுத்திய தாக்கத்தை ஆய்வு செய்கிறது. இது தவிர்த்து, திராவிட இயக்கம் குறித்தும் தமிழ்நாட்டில் சாதிகள் குறித்தும் இவர் செய்த ஆய்வுகள் மிக முக்கியமானவை.

நீண்ட நாட்களாகப் பதிப்பில் இல்லாமலிருந்த இவரது ‘தி திரவிடியன் மூவ்மென்ட்’ புத்தகம், கடந்தாண்டு தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் முயற்சியால் மறுபதிப்புக் கண்டிருக்கிறது. திராவிட இயக்க வரலாற்றினை, கழக வரலாற்றினை மற்ற மொழிகளுக்கும் கொண்டு செல்லும் முயற்சிகளில் வேகம் கூட்டும் வகையில், இதுபோன்ற நூல்களைப் படிப்பதும், விவாதிப்பதும் காலத்தின் தேவையாகும்.

## :ப்ளாஷ்பேக்



## ஓட்டத்துக்குப் பரிசு!

1998-ஆம் ஆண்டு மத்திய சென்னை, ஆயிரம்விளக்குத் தொகுதியில் பொங்கல் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தளபதி அவர்கள் விழாவுக்கு வருகை தந்தார். 11 வயதே நிரம்பி இருந்த நான் அப்போது சிறுவர்களுக் கான ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பிடித்திருந்தேன். தலைவர் தளபதி அவர்கள் கையில் பரிசுபெறும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது, கோப்பையை அவர் கையால் எடுக்கச் செல்கையில் இப்படம் எடுக்கப்பட்டது. இன்றைக்கு அதே பகுதியில் இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருப்பது பெருமையாக இருக்கிறது.



சுபாஷ் சந்திரபோஸ்

**-பா.சுபாஷ் சந்திரபோஸ்,**
**பகுதி துணை அமைப்பாளர்,**
**இளைஞர் அணி, ஆயிரம் விளக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### ஜனநாயகக் கேள்விகள்!

**1977-ஆம் ஆண்டு, பிப்ரவரி 10- ஆம் தேதி சென்னை கடற்கரையில், 5 லட்சம் தொண்டர்கள் திரண்ட பொதுக்கூட்டத்தில், கழகத்தின் தேர்தல் அறிக்கை வெளி யிடப்பட்டது. அதில், 1.மக்களாட்சி முறையா? அல்லது ஒரு கட்சியின் காட்டாட்சியா? 2.சுதந்திரமான நீதித்துறையா? அல்லது அச்சுறுத்தப்பட்ட நீதிதேவன் மயக்கமா? 3.சட்டத்தின் முன் அனைவரும் சமமா? அல்லது சட்டத்தின் ஆட்சியைச் சமாதி யாக்கும் ஆளுக்கு ஒரு நீதி என்கிற அநீதியா? 4. மக்களிடம் அமைதியும் உரிமை யும் தவழும் சூழலா? அல்லது அதிகார அராஜகமும், அரசியல் வஞ்சமும் தீர்க்கும் சூழலா? 5. ஜனநாயகமா? எதேச்சதிகாரமா? என மக்கள்முன் கேள்விகளை எழுப்பியது கழகம். அந்தக் கேள்விகள் இப்போதும் பொருத்தமாக உள்ளன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

213




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131


LEADER Ship
18.08.2023
இராமநாதபுரத்தில்
நடைபெறும்
மீனவர் நல மாநாட்டில்
எழுச்சி உரையாற்ற
வருகை தரும்
இந்தியாவின்
இரும்புத்
தலைவர்
ARASU ARTS
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!!
வரவேற்று மகிழும் : கேஆர்.பெரியகருப்பன்
கூட்டுறவுத் துறை அமைச்சர் - மாவட்டச் செயலாளர்
சிவகங்கை மாவட்ட தி.மு.க.


IT'S TIME TO LEAD I.N.D.I.A
நாள் : 18.08.2023 வெள்ளிக்கிழமை – இடம் : மண்டபம் கேம்ப்
வீரத்தின் விளைநிலமான
இராமநாதபுரம் மாவட்டத்திற்கு
வருகை தரும்
மீனவர்களின் நலன் காக்கும்
இந்திய விடியலின் வழிகாட்டி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களை வருக. வருக.. என வரவேற்கிறோம்...
ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (ம) கதர்கிராம தொழில் வாரிய அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழுத் தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம்
மாவட்டக் கழகச் செயலாளர் – இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர்
இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.
ARASU ARTS



கலைஞர் 100
1924-2023
மீனவர் சங்கங்களின் மாநில மாநாடு
நாள்: ஆகஸ்ட் 18
இடம்: இராமநாதபுரம் மாவட்டம்
பாரம்பரிய மீனவர்களின் உரிமைகளை மீட்க
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
மீனவர்களின் நலன்காக்கும்
விடியலின் நாயகர்
எழுச்சி உரையாற்றுகிறார்!
மீனவ மக்களேஅலைகடலென ஆர்ப்பரித்து வாரீர்! வாரீர்!! என அழைக்கிறோம்...
அனிதா.ஆர். இராதாகிருஷ்ணன்
மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர், தூத்துக்குடி தெற்கு மாவட்ட கழக செயலாளர்
த.மனோ தங்கராஜ்
பால்வளத்துறை அமைச்சர், குமரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
ரெ.மகேஷ்
நாகர்கோவில் மாநகராட்சி மேயர், குமரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
அ.ஜோசப் ஸ்டாலின்
கழக மீனவர் அணி செயலாளர்
தி.மு.க.மீனவர் அணி